DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

இவ்விடத்தில்
விளம்பரம் செய்ய எம்மை
அழையுங்கள்
416 – 752 – 1524

PYRAMID GROUP
வீடு வாங்க விற்க!
UTHAYAN SIVARAJAH BROKER 416.301.5555
ROYAL LEPAGE ignite

Dominion Lending Centres
✓FIRST MORTGAGE
✓SECOND MORTGAGE
✓REFINANCE
SUJAN SIVARAJAH 416.302.5555

29ம் ஆண்டில்...
29 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்
தித்திக்கும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரம் செய்தி இதழ்
Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices
Canadian Media Circulation Audit
$1.00
416-752-1524 www.uthayannews.ca
உதயம் 1590 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday September 25, 2026

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
Raj Perampalam Broker
Direct: 416-897-9155
Office: 905-201-9977
என்னை அழையுங்கள்
ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Kokulan Baskaran Tax Consultant
Tel: 647-344-6600
Residential & Commercial Real Estate Services
Bala Logendralingam Realtor
Cell: 647-447-1562
RE/MAX COMMUNITY

# அனைத்துலக தமிழர் பேரவை கனடாவில் ஒக்டோபர் மாதம் நடத்தவுள்ள சர்வதேச தமிழ் ஆராய்ச்சி மாநாட்டின் அனைத்து ஏற்பாடுகளும் தயார்!

## பேரவையின் தலைவர் கனடா வாழ் நிமால் விநாயகமூர்த்தி மகிழ்ச்சியுடன் தெரிவிப்பு!



“செய்யறிவு உலகில் செம்மொழித் தமிழும் தமிழரும்“ **(Classical Tamil and Tamils in the Era of Artificial Inteiligence)** என்னும் தொனிப்பொருளில் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 15, 16, 17, 18ம் திகதிகளில் நான்கு நாட்கள்-கனடாவில் ரொறன்ரோ மாநகரில் நடைபெறவுள்ள மேற்படி சர்வதேச மாநாடு தொடர்பான ஊடகச் சந்திப்பு ஒன்று 24-09-2026 அன்று வியாழக்கிழமை மாலை மார்க்கம் நகரில் **80 Travail Road Unit-1 Markham** என்னும் விலாசத்தில் அமைந்துள்ள கனடிய தமிழர் வர்த்தக சம்மேளனத்தின் கூட்ட மண்டபத்தில் நடைபெற்றது. சந்திப்பிற்கான பிரதான மேசையில் நிமால் விநாயகமூர்த்தி உட்பட பேராசிரியர் நா. சுப்பிரமணியன் அவர்கள் மற்றும் பேராசிரியர் .. பாலசுந்தரம் ஆகியோர் அமர்ந்திருந்தனர். ராகவன் பரஞ்சோதி அவர்கள் சந்திப்பை தொகுத்து வழங்கினார்ட. அத்தடன் அனைத்துலக தமிழர் பேரவையின் அமைப்பாளர்களில் ஒருவரான கென் கிருபா அவர்களும் அங்கு உரையாற்றினார்.
(தொடர்ச்சி 15ம் பக்கம்)

# சவூதி அரேபியாவில் மரணதண்டனை விதிக்கப்பட்ட அனோஜனை விடுதலை செய்யுமாறு கோரி யாழ்ப்பாணம் நல்லூரடியில் போராட்டம்!

**வடக்கு மாகாண ஐயப்ப இந்து இணையத்தின் தலைவர் தரணீஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், அங்கு கலந்து கொண்டு தங்களை விளம்பரப்படுத்த முனைந்த "ஊழல்" தமிழ் அரசியல்வாதிகள் இருவர் ஏற்பாட்டாளர்களால் அங்கிருந்து விலகிச் செல்லுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டனர். ஒருவர் மைத்திரி — மகிந்தா காலத்தில் சாராய லைசன் பெற்று தற்போது மட்டக்களப்பில் இரண்டு விற்பனை சாராய நிலையங்களை நடத்திவருபவர் எனவும் மாகாண சபையிலாவது பதவி எடுக்கும் "அவா" வில் ஆங்காங்கு நடைபெறும் ஆர்ப்பாட்டங்களில் "அழையா விருந்தாளியாக" நுழைபவர் எனவும் எமது செய்தியாளர் அறிவித்துள்ளார்.**




சவூதியில் மரணதண்டனை விதிக்கப்பட்ட அனோஜனை விடுதலை செய்யுமாறு கோரி 22ம் திகதி செவ்வாய்க்கிழமை அன்றையதினம் நல்லை ஆதீனத்திற்கு முன்பாக அமைதி வழியிலான கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.
(தொடர்ச்சி 9ம் பக்கம்)

COMMERCIAL REAL ESTATE
BUY · SELL · LEASE
Sri Nada rajasundram Real Estate Broker
416-276-6666
RE/MAX ACE
Let's Talk Strategy.

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St. East Mississauga, ON. L5A 1W7 905-272-1222
23-8907 The Gore Rd. Brampton, ON L6P 2L1 905-794-4404
online service: www.remitbee.com

G.Rajah
முள்ளிவாய்க்காலில் இருந்து...
NAM THAYAGAM
நம் தாயகம் INC
Nam Thayagam Inc.
3031, Markham Road, Unit #35, Scarbrough, ON M1X 1L9
namthyakam@gmail.com
416 558 2111

# "வரலாற்றுப் பதிவின் தடம் கனடாவில் இடம்பெற்ற 2வது உலகத் தொல்காப்பிய ஆராய்ச்சி மாநாடு"



**தொல்காப்பியத்தின் பெருமையையும் தமிழின் தொன்மையையும் உலக அரங்கில் எடுத்துச் செல்வோம் என்ற இலக்கை உள்ளத்தில் விதைத்து, பெரும் விருட்சமாக வளர்த்து, அதன் கனிகளை உலகத் தமிழர்களுக்குக் கொடையாக்கிய அற்புதத்தை அரங்கேற்றிய கனடா தொல்காப்பிய மன்றத்தின் தலைவியும். உறுப்பினர்களும்!**

பல குரல்கள் ஓங்கி ஒலித்த அந்த அரங்கில், பல இதயங்கள் ஒன்றாகத் துடித்த அந்த உன்னதமான தருணத்தில், "அம்மா" என்ற ஒரு சொல் எங்கள் செவிகளில் அசரீரியாகவே ஒலித்தது. பெருமிதமும் உவகையும் நன்றியும் ஒன்றுசேர எங்கள் மனங்களை நிறைத்த அந்த மகத்தான பொழுதுகள் நிச்சயமாக ஒரு வரலாற்றுப் பதிவே!

இரண்டாவது உலகத் தொல்காப்பிய ஆராய்ச்சி மாநாடு புரட்டாதி மாதம் 19, 20 ஆகிய திகதிகளில் கனடா - மார்க்கம் நகரில் Bill Hogarth உயர்தரப் பாடசாலையில் நிறைவு கண்டிருக்கிறது.











பசி, தாகம், தூக்கம், களைப்பு, ஆறுதல் என எதையும் பொருட்படுத்தாமல், அரங்கின் ஆரம்பம் முதல் இறுதிவரை நிகழ்ந்த ஒவ்வொரு அரிய நிகழ்வையும் பூரிப்புடன் சுவைத்து, இரசித்து, அனைவரையும் அரவணைத்துப் பார்த்த அந்த அற்புதமான ஆளுமையை நாம் "அம்மா" என்று அழைத்து தன்னிறைவு பெற்றோம். இளமையின் முன்னோடியாகவும், தொலைநோக்குச் சிந்தனையின் அடையாளமாகவும், தமிழ்ப்பற்றின் உயிரோட்டமாகவும் நாம் கண்ட தலைவர், முனைவர், பேராசிரியர், திருமதி "செல்வநாயகி ஸ்ரீதாஸ் அம்மா…"! அவர்கள் எங்களுக்குக் கிடைத்த வரம்! என்று கூறினால் மிகையாகாது.

தொல்காப்பியத்தின் பெருமையையும் தமிழின் தொன்மையையும் உலக அரங்கில் எடுத்துச் செல்ல வேண்டும் என்ற உயர்ந்த இலக்கை உள்ளத்தில் விதைத்து, அதனை ஒரு மாபெரும் விருட்சமாக வளர்த்து, அதன் கனிகளை உலகத் தமிழர்களுக்குக் கொடையாக்கியவர் ஸ்ரீதாஸ் அம்மா.

எதை, எங்கு, எவ்வாறு, எப்படி விதைத்தால் அது விருட்சமாகி வளர்ந்து பலன் கொடுக்கும் என்பதை உணர்ந்து முதலாம் இரண்டாம் மூன்றாம் நான்காம் "தலைமுறைகள் மத்தியில் தமிழை அறுவடையாகத் தந்துள்ளார். நிகழ்ச்சிகளின் தொனிப் பொருள் பற்றிய புரிதலைக் கண்டு வியந்தோம். அவர்களின் தொலைநோக்குப் பார்வையை, இந்த மாநாட்டின் ஒவ்வொரு நிகழ்விலும் நாம் அனுபவித்தோம். இளம் தலைமுறை மாணவர் படைத்த மண்ணின் வேர் என்ற நாடகம் தமிழர் வாழ்வியல் - தமிழ்மொழிக் கட்டமைப்பு மற்றும் அடையாளவியல் சார்ந்த கண்காட்சி ஆய்வாளர்களின் கட்டுரைகள், மாணவர்களின் பேச்சு - நான் அறிந்த தொல்காப்பியம், பெரியோருக்கான - அனைவருக்கும் தொல்காப்பியம், உலகளாவிய ஆய்வாளர்களின் இணையவழி உரை, நேரடி ஆய்வுரைகள் தொல்காப்பியத்தின் பெருமைகூறும் வில்லுப்பாட்டு, தொல்காப்பிய நூற்பா அடங்கிய இசைக் கச்சேரி, கண்ணகி அம்மன் நாட்டிய நாடகம் தமிழர் பாரம்பரியக் கலை வடிவங்கள் பறையிசை, யாழிசை, யோகக்கலை முத்தமிழ் கலந்த கருப்பொருள்களை முதன்மையாக்கி, தொல்காப்பியத்தை ஏன் கற்க - கற்பிக்க - பரவலாக்க - கொண்டாட வேண்டும் என்று உலகம் அறியப் பல்வகை நிகழ்ச்சிகளை நிகழ்வாக்கிக் கொண்டாடி மகிழ்ந்தோம்.

"இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து, அதனை அவன்கண் விடல்" என்ற குறளின் வரிகளுக்குள் பேராசிரியர் இல சுந்தரம் அவர்களை நாங்கள் உவமையாக்குவது சாலவும் பொருந்தும். தமிழ்மொழியின் மீது அளவுகடந்த பற்றுள்ள அம்மாவின் கனவுகளை நனவாக்கும் பெரும் பொறுப்பைத் தம் தோள்களில் சுமந்து, தனது அறிவாற்றலாலும் ஆழ்ந்த அனுபவத்தாலும் திறன்மிகு தகைமைகளாலும் எல்லோரையும் உள்வாங்கும் பாங்குடன் தொழிற்படுபவர் - எங்கள் ஒருங்கிணைப்பாளர், முனைவர் பேராசிரியர் நல் ஆசான் திரு. இல. சுந்தரம் பெருந்தகை! அவரை நாம் நன்றியுடன் பாராட்டுகின்றோம்.





புலம்பெயர்ந்து, தேச எல்லைகளைக் கடந்து, வெளிநாடுகளில் வாழும் தமிழ்த் தலைமுறைகளுக்குத் தொல்காப்பியத்தை எளிமையாகவும் இனிமையாகவும் முறையாகவும் கொண்டு செல்லும் நோக்கில், "நானறிந்த தொல்காப்பியம்", "தமிழ் அறி-திறன் தேர்வுகள்", தமிழ்த்திறன் போட்டிகள், "சிறுவர்க்கான தொல்காப்பியம்", பெரியோருக்கான "அனைவருக்கும் தொல்காப்பியம்", "விநாடி வினா" போன்ற பல்வேறு கற்கை நெறிகளைத் திறம்பட முன்னெடுத்து, அவற்றிற்குரிய பாடவிதானங்களை முறைப்படித் தொகுத்து, பரவலாக்கி, செயற்படுத்திய திறனும் பெருமையும் அவரையே சாரும்.

ஒரு கனவு உருவாகுவது ஒரு தொடக்கம் அந்தக் கனவைத் திட்டமிட்டு, கட்டமைத்து, செயலாக்கி, பலரையும் அதனுள் இணைத்து வெற்றியாக்குவது மிகப்பெரிய சாதனை. அந்த வகையில், அம்மாவின் கனவுகளை நனவாக்கிய நாயகனாக பேராசிரியர் இல. சுந்தரம் அவர்களுக்கு எங்கள் மனமார்ந்த நன்றி!

அதேபோல், தொல்காப்பிய மன்றத்தின் செயல்திட்டங்களுக்கு செயல்வடிவம் கொடுத்து, அவற்றை எங்கள் கண்முன்னே காட்சிகளாக மாற்றியவர், மன்றத்தின் செயலாளர், பொறியியலாளர், தமிழ் ஆர்வலர் திரு. சுகந்தன் வல்லிபுரம் அவர்கள் ஆவார். திட்டமிடப்பட்ட பணிகளைத் திறம்பட ஒருங்கிணைத்து, நேர்த்தியுடனும் பணிவுடனும், பொறுப்புணர்வுடனும் செயல்படுத்திய அவரது அர்ப்பணிப்பு தனிச்சிறப்புக்குரியது.

சிந்தனைகள் திட்டங்களாகவும், திட்டங்கள் செயல்களாகவும், செயல்கள் வெற்றிகளாகவும் மாற வேண்டும் என்பதற்கான சிறந்த எடுத்துக்காட்டாக அவரது பங்களிப்பு அமைந்தது. ஒரு சிறந்த செயல்திட்டம் எவ்வாறு கண்ணெதிரில் உயிர்பெறும் என்பதை இந்த மாநாடு நமக்கு உணர்த்தியது.

எங்கள் கனடா - தொல்காப்பிய மன்றத்தின் பொருளாளரின் தாராள மனப்பான்மைக்கு ஈடு இணை இல்லை. வார்த்தைகள் போதாது. ஓயாத கால்களுடன், இடைவிடாத உழைப்புடன், கடமை உணர்வும் கண்ணியமும் சிறிதும் குறையாமல், தமக்குரிய பொறுப்புகளைத் தொடர்ந்து நிறைவேற்றிய அவர்களின் பங்களிப்பும் இவ்வெற்றியின் முக்கியமான ஓர் அங்கமாகும்.

மேடையில் தெரிந்தவர்கள் மட்டுமல்ல் மேடைக்குப் பின்னால் அமைதியாக உழைத்த ஒவ்வொருவரின் வியர்வையும் இந்த வெற்றியில் கலந்திருக்கிறது.

ஆக்கபூர்வமான சிந்தனைகளுடன் இரவு பகலாக விழித்திருந்து மனித வலுச்சேர்த்தவர்கள் பலர்! பொறுப்புகள் அளவின்றிப் பலவாக ஆளணி முகாமைத்துவத்துடன் ஒழுங்கமைக்கப்பட்டன. பணிகள் பலவாக இருந்தாலும் நமது நோக்கம், "ஊர் கூடித்தேர் இழுப்போம்" என்பதாகவே இருந்தது. நாம் அனைவரும் தனித்தனியாக அல்லாமல், "குழு" என்ற ஒரு தனிப்பெரும் சொல்லுக்குள் ஒன்றிணைந்தோம்.

யாருடைய பங்களிப்பு சிறியது, யாருடைய பங்களிப்பு பெரியது என்று அளவிட முடியாது. ஒவ்வொரு கையும் ஒரு பங்களிப்பு ஒவ்வொரு காலடியும் ஒரு முன்னேற்றம் ஒவ்வொரு எண்ணமும் ஒரு விதை ஒவ்வொரு உழைப்பும் இந்த வரலாற்றின் ஒரு வரியாகும்.

அதனால், இந்த மாபெரும் ஆராய்ச்சி மாநாட்டின் வெற்றிக்காக தங்களுடைய நேரத்தையும், உழைப்பையும், அறிவையும், திறமையையும், ஆற்றலையும் அர்ப்பணித்த ஒவ்வொருவருக்கும் எமது நெஞ்சம் நிறைந்த பாராட்டுகளையும் உளமார்ந்த நன்றிகளையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

கனடா மண்ணில் இருந்து உலகத் தமிழர்களின் கவனத்தை ஈர்க்கும் வகையில், தொல்காப்பியத்தின் பெருமையையும் தமிழின் தொன்மையையும் உலக அரங்கில் எடுத்துச் சென்ற இந்த மாநாடு, ஒரு நிகழ்வாக மட்டும் முடிந்துவிடக்கூடாது.

இது ஒரு விழாவின் நிறைவு அல்ல; ஒரு வரலாற்றுப் பதிவின் ஆரம்ப அத்தியாயமே!

இந்நிகழ்வு கனடாவில் உலகத் தமிழர்களை ஒன்றிணைத்த ஆராய்ச்சி மாநாட்டின் வெற்றி மட்டுமல்ல; தமிழின் பெருமையை உலக அரங்கில் உயர்த்திய ஒரு மாபெரும் முயற்சியின் வெற்றி!

இந்த வெற்றிக்குப் பின்னால் உழைத்த ஒவ்வொரு உள்ளத்தையும் நன்றியுடன் நினைவுகூர்வோம். அவர்களின் அர்ப்பணிப்பை மனதாரப் பாராட்டுவோம். அவர்களின் பாதையில் அடுத்த தலைமுறையும் பயணிக்க வழிவகுப்போம்.

இந்த விழா உலக அரங்கில் ஒரு வரலாற்று ஆவணமாக என்றும் நிலைத்திருக்கட்டும்!

தொல்காப்பியத்தின் பெருமை ஓங்கட்டும்!

தமிழின் தொன்மையும் புகழும் உலகெங்கும் பரவட்டும்!

தமிழறிவின் பயணம் தலைமுறைகள் தோறும் தொடரட்டும்!

தொல்காப்பிய மன்றத்தின் பணிகள் மென்மேலும் பரவட்டும்! அதற்காக ஒன்றாய் இணைந்து நிமிர்வோம் "தமிழர்" என்ற பெருமையுடன்!

**– திருமதி. மஞ்சுளா ராஜபால் மற்றும்
திருமதி. வித்தியானந்தி கருணாகரன்**

Canada
We acknowledge the financial support of the Government of Canada

Single Copy $1
Annual Subscription Price $52.00

பிரதம ஆசிரியர்: R.N.லோகேந்திரலிங்கம்
உதயன் வெளியீட்டாளர்கள்
உதயன்
Uthayan Publishers

- EDITOR IN CHIEF: R. N. Logendralingam
- GRAPHIC: Pathma & Yalini
- TECHNICAL: Janani and Bala
- PRINTERS: KT Web Printing Ltd.
- DISTRIBUTION: Uthayan Team

Phone: 416 752 1524 · Cell: 416 732 1608
4062 Ellesmere Road, Scarborough ON MIC 1J2
website: www.uthayannews.ca · email: Uthayannews@yahoo.com

## உதயன் கதிரோட்டம்

# தேசத்தின் கடல் வளத்தையும் கனிம வளத்தையும் அனுபவிக்கும் வாய்ப்பு இலங்கை வாழ் செல்வந்தர்களுக்கும் "அரசியல்" செல்வாக்கு உள்ளவர்களுக்கும் மாத்திரம் தானா?

ஒரு தேசத்தில் இயற்கையாகவோ அன்றி படைப்பாகவோ குவிந்து கிடக்கும் கடல் வளம் மற்றும் கனிம வளம் ஆகியவை அந்தந்த தேசத்தின் அரசுக்கும் மக்களுக்குமே சொந்தமானவை. ஆனால் இவை பற்றி எதுவும் அக்கறை கொள்ளாத பொதுமக்களில் பெரும்பகுதியினர் வாழ்க்கையில் கஸ்டங்களை அனுபவித்தாலும் இவ்வாறான கனிமக் கொள்ளை அல்லது கடல்வளத்தை சூறையாடுவது போன்ற சட்ட விரோத செயல்களில் ஈடுபடுவது இல்லை.

அதற்கு மேலாக, இயற்கையின் கொடையாகவும் அதன் படைப்பாகவும் விளங்கும் மீன்கள் மற்றும் கடல் உணவுப்பொருட்கள் ஆகிய கடல்வளம் மற்றும் தங்கம், வெள்ளி, உருக்கு, நிலக்கரி வேறு உலோகங்கள் தயாரிக்கக் கூடிய இன்னோரென்ன கனிமங்கள் உலகின் பல நாடுகளிலும் நிறைந்து கிடக்கின்றன.இவ்வாறு தான் கடல் வளமும். ஏழை மீனவர்கள் கடலுக்குச் சென்று தங்கள் உயிர்களை பணயம் வைத்து மீன்களை பிடித்து வர "எம்மூரின்" சம்மாட்டிகள் எனப்படும் "முதலாளிகள்" அவற்றின் அதிக இலாபத்தைப் பெற்றுக்கொண்டு செல்வந்தர்களாக உயர்ந்து சமூக அந்தஸ்த்தையும் பெற்றுக்கொள்கின்றார்கள்.

குறிப்பாக தென்னாபிரிக்கா. நைஜீரியா மற்றும் தென்அமெரிக்க நாடுகள் ஆபிரிக்க நாடுகள் போன்றவற்றில் தாராளமாக கனிம வளங்கள் நிறைந்து கிடக்கின்றன. ஆனால் இவை பற்றி அந்தந்த நாடுகளில் வாழும் சாதாரண மக்களோ அன்றி ஆர்வம் குறைந்தவர்களோ கவலைப்படுவதில்லை. இதனால் அந்தந்த

நாடுகளில் உள்ள அரசியல்வாதிகளும் அரசாங்க அதிகாரிகளும் அமைச்சர்களும் கனிம வளங்கள் தொடர்பாகவோ அன்றி சட்டங்கள் தொடர்பாகவோ நன்கு அறிந்து வைத்திருப்பார்கள். குறிப்பாக ஆபிரிக்க நாடுகள் பல விலையுயர்ந்த கனிம வளங்களைக் தம்மகத்தே கொண்டிருந்தாலும் அவைபற்றிய வர்த்தக வாய்ப்புக்கள் பற்றிய ஆர்வம் கொண்டட பிறநாட்டு செல்வந்தர்கள் அல்லது பல்தேசிய நிறுவனங்கள் அந்த நாடுகளின் அரசியல்வாதிகளையும் அரசாங்க அதிகாரிகளையும் அமைச்சர்களையும் ஏதோ வகையில் தொடர்பு கொண்டு நெருக்கமான உறவுகளையும் கொடுக்கல் வாங்கல்களையும் செய்து அந்தந்த நாடுகளில் உள்ள கனிம வளங்களை அகழ்ந்து எடுக்கும் பாரிய திட்டங்களை தங்கள் கைகளுக்குள் எடுத்து அந்த நாட்டின் சாதாரண மக்களுக்கும் கிடைக்க வேண்டிய சலுகைகள் அல்லது பயன் ஆகியவற்றை மறைத்து பிறநாட்டவர்கள் அதன் அதிக பலன்களை அனுபவிக்கின்றார்கள். ஆனால் அந்தந்த நாடுகளின் அரசியல்வாதிகளும் அரசாங்க அதிகாரிகளும் அமைச்சர்களும் இதனால் கிடைக்கும் பெரும் நிதியைக் கொண்டு தங்களை செல்வந்தர்களாக உயர்த்திக் கொள்கின்றார்கள். இவ்வாறு ஒரு நாட்டில் நூறு பேர் இந்த மோசடிகளுக்கு பக்கத்துணையாக இருந்து சமூகத்தில் பணபலம் உள்ளவர்களாக உயரத்தை எட்டுகின்றார்கள். ஆனால் அந்த நாட்டின் ஏழை அல்லது நடுத்தர வகுப்பு மக்கள் தொடர்ந்து ஏழைகளாகவே வாழ்ந்து கொண்டிருப்பார்கள்.

இவ்வாறு அந்தந்த நாடுகளில் உள்ள சாதாரண மக்கள் வாழ்க்கையின் அடிமட்டத்திலேயே எவ்வித வசதியும் இன்றி கஸ்டங்களை அனுபவிக்க, மறுபக்கத்தில் ஊழல் மற்றும் அதிகார துஸ்பிரயோகம் செய்யும் அரசியல்வாதிகளும் அரசாங்க அதிகாரிகளும் அமைச்சர்களும் மக்களை ஏமாற்றியவர்களாய் வாழ்க்கையை அனுபவிக்கின்றார்கள்.

இவ்வாறாகவே இலங்கையிலும் இந்தியாவிலும் ஏனைய ஆசிய நாடுகளிலும் ஊழல் மற்றும் அதிகார துஸ்பிரயோகம் செய்து தங்கள் அரசியல் பலத்தையும் அதிகார பலத்தையும் பயன்படுத்தி அரசியல்வாதிகளும் அரசாங்க

அதிகாரிகளும் அமைச்சர்களும் மக்களை ஏமாற்றியவர்களாய் வாழ்க்கையை அனுபவிக்கின்றார்கள்.

இதன் காரணமாகவே இம் மாதத்தின் எமது தேசக்குரலில் நாம் இந்த மறைந்து கிடக்கும் கிடக்கும் சட்ட விரோத செயல்களையும் ஊழல் விடயங்களையும் பற்றி எமது வாசகர்களோடு பகிர்ந்து கொள்கின்றோம். இதனாலேயே வடக்கினதும் கிழக்கினதும் கடல் வளத்தையும் கனிம வளத்தையும் அனுபவிக்கும் வாய்ப்பு இலங்கை வாழ் செல்வந்தர்களுக்கும் செல்வாக்கு உள்ளவர்களுக்கும் மாத்திரம் தானா? என்ற கேள்வியை முன்வைக்கின்றோம்.

நாம் அறிந்த வகையில் இலங்கையிலும் கனிமக் கொள்கை மற்றும் சுரங்க அகழ்வு உரிமங்கள் தொடர்பாக கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி தொடர்பான சட்ட திட்டங்கள் பல ஆண்டுகளாக நடைமுறையில் உள்ள.

முன்னைய மகிந்தாவின் ஆட்சிக் காலத்திலும் பின்னர் கோட்டாபாய ஆட்சியின் காலத்திலும் மற்றுமொரு ஊழல்வாதி நாமல் ராஜபக்ச வெளிநாட்டு பல்தேசியக் கம்பனிகளை இலங்கைக்கு அழைத்து அதிகளவு நிதியை அவர்களிடமிருந்து பெற்று கோடிக்கணக்கான டாலர்களை சுருட்டிக் கொண்டார் என்பதும் தற்பொழுது வெளிவந்து கொண்டிருக்கும் செய்திகள்.

இலங்கையில் கனிம ஆய்வு மற்றும் சுரங்க அகழ்வு நடவடிக்கைகள், குறிப்பாக புதுப்பிக்க முடியாத கனிம வளங்களை அகழ்ந்தெடுப்பதன் மூலம் ஏற்படும் மீட்டெடுக்க முடியாத சுற்றுச்சூழல் பாதிப்புகள் குறித்து மக்கள் மத்தியில் அதிகரித்து வரும் அச்சம் மற்றும் எதிர்ப்புகளை சுட்டிக்காட்டிவரும் பல சமூக ஆர்வலர்களும் அமைப்புக்களும் உள்ள நிலையில் அவர்களை தங்கள் அதிகார பலத்தைப் பாவித்து அடக்கியும் சிறையில் அடைத்தும் அல்லது

கொலைப் பயமுறுத்தல் செய்தும் ஊழல்வாதிகள் தங்கள் "திருட்டுக்களை" தொடர்ந்து வருகின்றார்கள்.

சுரங்க அகழ்வு நடவடிக்கைகள் நிறுத்தப்பட்ட நீண்ட காலத்திற்குப் பின்னரும் நிலச்சரிவுகள், விவசாய உற்பத்தித் திறன் இழப்பு, நீர் வளங்கள் வற்றிப்போதல், சுற்றுச்சூழல் அமைப்புகளின் அழிவு மற்றும் பல்வேறு சூழலியல் பாதிப்புகள் போன்ற நீண்டகால விளைவுகளை பாதிக்கப்பட்ட சமூகங்களே சுமக்க வேண்டியு நிலை சாதாரண மக்களுக்கே ஏற்படுகின்றன. பாதுகாப்பான இடங்களில் தங்கள் மாளிகைகளைக் கட்டி வாழும் அரசியல்வாதிகளும் அரசாங்க அதிகாரிகளும் அமைச்சர்களும் இயற்கை அனர்த்தங்களால் ஒருபோதும் பாதிக்கப்படுவதில்லை.இந்தியாவில் சென்னை போன்ற நகரங்கள் இதற்கு நல்ல உதாரணமாகும். எந்த ஒரு அரசியல்வாதியும் வெள்ளப்பெருக்கால் சிரமங்களை சந்திப்பதில்லை. ஆனால் மக்களைச் சந்திக்க விலை உயர்ந்த வாகனங்களில் அல்லது வானூர்திகளில் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு வருவார்கள்.

அண்மையில் இலங்கைப் பாராளுமன்றத்தில் இந்த கனிம வளக்கொள்ளைகளை தடுக்கும் கனிமக் கொள்கை தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் நீண்ட உரையாற்றியுள்ளார். அத்துடன் அவர்கள் இந்த விடயம் தொடர்பான அமைச்சரிடம் பல கேள்விகளையும் தொடத்துள்ளார்.

இனிவரும் நாட்களில் நாமும் இந்த விடயம் தொடர்பான விடயங்களில் ஆர்வத்துடன் எமது அவதானிப்பை செலுத்த வேண்டும் என்றும் தேசத்தின் சொத்தை தனி நபர்களும் அரசியல்வாதிகளும் அதிகாரிகளும் "சூறையாடுவதை" தடுக்க போராட வேண்டும் என்றும் அனைவரையும் வேண்டிக் கொள்கின்றோம்.!






இலங்கை செய்திகள்
Sri Lanka News

# பயங்கரவாதத்திலிருந்து நாட்டைப் பாதுகாக்கும் புதிய சட்டமூலம் வர்த்தமானியில் வெளியீடு!

## பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கவும் நடவடிக்கை

இலங்கையின் நீண்டகால வரலாற்றைக் கொண்ட பயங்கரவாதத் தடைச் சட்டத்தை முழுமையாக நீக்கிவிட்டு, அதற்குப் பதிலாக புதிய சட்டக் கட்டமைப்பை அறிமுகப்படுத்தும் வகையில் "பயங்கரவாதத்திலிருந்து நாட்டைப் பாதுகாக்கும் சட்டமூலம்" வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது.

கடந்த செப்டம்பர் 18ஆம் திகதியிடப்பட்ட அரசிதழ் இணைப்பாகத் தயாரிக்கப்பட்டு, கடந்த செப்டம்பர் 22ஆம் திகதி வெளியிடப்பட்ட இந்தப் புதிய சட்டமூலம் குறித்த முக்கிய விவரங்கள் பின்வருமாறு: நாட்டின் தேசிய பாதுகாப்பு மற்றும் பொதுமக்களைப் பயங்கரவாதச் செயல்களில் இருந்து பாதுகாத்தல், இலங்கையின் நிலப்பரப்பு வெளிநாடுகளில் பயங்கரவாதச் செயல்களுக்குப் பயன்படுத்தப்படுவதைத் தடுத்தல் மற்றும் பயங்கரவாதக் குற்றங்களுடன் தொடர்புடையவர்களை அடையாளம் காணுதல், கைது செய்தல், தடுத்துவைத்தல், விசாரணை செய்தல் மற்றும் தண்டித்தல் ஆகியவற்றை இந்தச் சட்டமூலம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

இந்தப் புதிய சட்டமூலத்தின் விதிகளானது, இலங்கைக் குடிமக்களால் நாட்டுக்குள்ளும் வெளியிலும் இழைக்கப்படும் குற்றங்களுக்கும், இலங்கைக் குடிமக்கள், தூதரகங்கள் மற்றும் அரச சொத்துக்கள் மீது வெளிநாடுகளில் மேற்கொள்ளப்படும் தாக்குதல்களுக்கும் பொருந்தும்.

பொதுமக்களிடையே அச்சத்தை ஏற்படுத்தும் நோக்கில் அல்லது அரசியல் அல்லது சித்தாபூர்வமான இலக்கை அடைவதற்காக அரசு அல்லது சர்வதேச அமைப்பைச் செயற்படச் செய்யும் அல்லது தடுத்து நிறுத்தும் நோக்கத்துடன் வேண்டுமென்றே செய்யப்படும் செயல்களே பயங்கரவாதமாகக் குறிப்பிடப்பட்டுள்ளன.

உயிர்ச்சேதம், பலத்த காயம், பணயக்கைதியாகப் பிடித்தல், பொதுக் கட்டமைப்புக்குப் பாரிய சேதம், தீவிர சுற்றுச்சூழல் பாதிப்பு, முக்கிய கட்டமைப்பு மீதான சைபர் தாக்குதல்கள் மற்றும் சர்வதேச பயங்கரவாதத் ஒப்பந்தங்களின் கீழ்வரும் செயற்பாடுகள் இதில் அடங்கும்.

பயங்கரவாதச் செயலால் மரணம் விளைவித்ததாகக் குற்றவாளியாகக் காணப்படுபவருக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்படலாம். ஏனைய பயங்கரவாதக் குற்றங்களுக்கு 20 ஆண்டுகள் வரை சிறைத்தண்டனையும், 20 மில்லியன் ரூபா வரை அபராதமும் விதிக்கப்படலாம்.

தடைசெய்யப்பட்ட அமைப்புகளுக்கு ஆள் சேர்ப்பு செய்தல், நிதியுதவி அளித்தல், பயிற்சி அளித்தல், தளவாட ஆதரவு வழங்குதல் அல்லது நடவடிக்கைகளில் பங்கெடுத்தல் போன்றவற்றுடன் தொடர்புடையவர்களுக்கு 15 ஆண்டுகள் வரை சிறைத்தண்டனையும், 15 மில்லியன் ரூபா வரை அபராதமும் விதிக்கப்படும்.

மேலும், பயங்கரவாதச் சந்தேகநபர்களுக்கு அடைக்கலம் கொடுத்தல், குற்றவாளிகளுக்கு உதவுதல், பயங்கரவாதத் தகவல்களை மறைத்தல் மற்றும் பயங்கரவாதத்தை ஊக்குவிக்கும் பிரசுரங்களை வெளியிடுதல் போன்றவையும் இந்தச் சட்டமூலத்தின் கீழ் குற்றமாக்கப்பட்டுள்ளன.

போராட்டங்கள், வேலைநிறுத்தங்கள், தொழிற்சங்க நடவடிக்கைகள், வாதாடல்கள், கருத்து வேறுபாடுகள் மற்றும் மனிதாபிமான நடவடிக்கைகளில் ஈடுபடுதல் என்பவை மட்டுமேயான காரணத்துக்காக அவை பயங்கரவாதக் குற்றங்களாகக் கருதப்பட மாட்டாது எனத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தச் சட்டமூலம் வேண்டுமென்றே பயங்கரவாதத்தைத் தூண்டாத பட்சத்தில், பத்திரிகைத் துறை, கல்வி மற்றும் அறிவியல் ஆராய்ச்சி, சிவில் சமூக நடவடிக்கைகள், சட்ட உதவி, கலை வெளிப்பாடுகள், அரசியல் விமர்சனங்கள் மற்றும் அமைதியான கருத்து வெளிப்பாடுகளுக்குப் பாதுகாப்பு வழங்குகின்றது.

சந்தேகநபர்களுக்குக் கைதுக்கான காரணங்கள் மற்றும் சட்ட உதவி பெறும் உரிமை ஆகியவை தெரிவிக்கப்பட வேண்டும் என்பதுடன், கைதானது குறித்து உறவினர்களுக்கும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கும் அறிவிக்கப்பட வேண்டும்.

பொதுவாகச் சந்தேகநபர் 48 மணி நேரத்துக்குள் நீதிவான் முன் ஆஜர்படுத்தப்பட வேண்டும். இருப்பினும், பொலிஸ்மா அதிபர் அல்லது சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபரின் விண்ணப்பத்தின் பேரில், தொடர்புடைய அமைச்சின் செயலாளரால் தடுத்துவைப்பு உத்தரவுகள் பிறப்பிக்கப்படலாம்.

ஆரம்பக் தடுப்புக்காவல் உத்தரவு அதிகபட்சம் இரண்டு மாதங்களுக்கு செல்லுபடியாகும் என்பதுடன், மொத்தத் தடுப்புக்காவல் காலம் ஆரம்பத் தேதியிலிருந்து ஒரு வருடத்தை தாண்டக்கூடாது. இரண்டு மாதங்களுக்கு மேற்பட்ட நீடிப்புகளுக்கு மேல்நீதிமன்ற அனுமதி கட்டாயமாகும்.

ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற அல்லது மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி மற்றும் சட்ட நிபுணர்களை உள்ளடக்கிய சுயாதீன மதிப்பீட்டுக் குழு (மூலம் தடுப்புக்காவல் உத்தரவுகள் மீளாய்வு செய்யப்பட்டு, அவற்றை நீடிக்கலாமா அல்லது இரத்து செய்யலாமா என்பது குறித்துப் பரிந்துரைக்கப்படும்.

நீதிவான்கள் தடுத்துவைக்கப்பட்டவர்களின் நலன்களைக் காலமுறைக்கேற்ப பரிசீலிக்க வேண்டும் அங்கீகரிக்கப்பட்ட தடுப்பு மையங்கள் நீதிவான்கள் மற்றும் மனித உரிமைகள் ஆணைக்குழு அதிகாரிகளால் பரிசோதனைக்கு உட்படுத்தப்படும்.

வதை அல்லது கொடூரமான, மனிதாபிமானமற்ற நடத்துறைகள் சந்தேகிக்கப்படும் சந்தர்ப்பங்களில் மருத்துவப் பரிசோதனைகள் நடத்தப்பட வேண்டும் என்பதற்கான விதிகளும் இந்தச் சட்டமூலத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இது நிறைவேற்றப்பட்டால், இந்தச் சட்டம் நீண்டகாலமாக நடைமுறையிலுள்ள பயங்கரவாதத் தடைச் சட்டத்தை முழுமையாக மாற்றி அமைத்து புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டக் கட்டமைப்பை உருவாக்கும்.

# யாழ்ப்பாண மாவட்ட செயலக பணியாளர் நாகராசா சூரியகுமார் ரயில் மோதிய விபத்தில் பலி!



யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் ஆராய்ச்சி பதவியில் கடமையில் பணியாற்றி வந்த நாகராசா சூரியகுமார் புதன்கிழமை அன்று (23.09.2026) நண்பகல் அரியாலை புங்கன்குளம் ரயில்வே கடவையில் இடம்பெற்ற விபத்தில் அகால மரணமடைந்துள்ளார்.

இது குறித்து மேலும் தெரியவருகையில், குறித்த நபர் தனது மகளை சைக்கிளில் ஏற்றிக்கொண்டு சென்றவேளை ரயில் வந்ததை அவதானிக்காத நிலையில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதன்போது குறித்த நபர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்ததுடன் அவரது 15 வயதுடைய மகள் காயங்களுக்கு உள்ளாகியுள்ளார்.

குறித்த இடத்தில் பாதுகாப்பற்ற புகையிரத கடவை இருப்பதால் தொடர்ச்சியாக ரயில் விபத்துக்கள் இடம்பெற்று வருகின்றன. இருப்பினும் உரிய தரப்பினர் இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை.

# இந்திய மீனவர்களின் 90 படகுகளை கடலில் மூழ்கடிக்க தீர்மானம்!



இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்து சட்டவிரோதமான மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டபோது கைது செய்யப்பட்ட சுமார் 90 இந்திய மீன்பிடிப் படகுகளை கடலில் புதைப்பதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்று வருகிறது.

குறித்த சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது, வடபகுதி குறிப்பாக யாழ். மாவட்டத்தை சூழவுள்ள கடற்பரப்புக்களை அண்டிய பகுதிகளில் சட்ட விரோத மீன்பிடியில் ஈடுபட்ட இந்திய படகுகள் மயிலிட்டி துறைமுகத்தில் நீதிமன்றங்களின் உத்தரவின் பெயரில் தடுத்து வைக்கப்பட்டுள்ளன.

கடந்த 5 வருடங்களாக மயிலிட்டி துறைமுகத்தில் தரித்து நிற்கும் படகுகளில் சில மீள ஒப்படைக்கப்பட்டதுடன் இன்னும் சில இலங்கை மீனவர்களின் தேவைக்காக வழங்கப் பட்டுள்ள நிலையில் எஞ்சியவற்றை புதைப்பதற்கு உரிய நடவடிக்கைகள் இடம்பெற்று வருகிறது.

# இலங்கை அரசு சவூதி அரேபியா அரசை நாடிய பின்னரே இந்தியா இந்த விடயத்தில் தலையிட முடியும்!

## அனோஜன் விவகாரம் குறித்து தமிழ் முற்போக்குக் கூட்டணியினரிடம் இந்தியத் தூதுவர் தெரிவிப்பு



சிவராசா அனோஜன் விவகாரத்தில் இலங்கை அரசு அதிகாரபூர்வமாகச் சவூதி அரசை நாடி கோரிக்கை விடுத்த பின்னரே, இது தொடர்பில் இந்தியா தனது முயற்சிகளை முன்னெடுக்க முடியும் என்று இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா தெரிவித்தார்.

தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தலைமையிலான குழுவினர் இன்று இந்தியத் தூதுவரை நேரில் சந்தித்துக் கலந்துரையாடல் நடத்தியபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதன்போது சிவராசா அனோஜன் விவகாரத்தில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் நேரடித் தலையீட்டைக் கோரி, தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தூதுக்குழுவினர் இந்தியத் தூதுவரிடம் இந்தியப் பிரதமருக்கான எழுத்து மூலமான மனுவொன்றைக் கையளித்தனர்.

இந்தச் சந்திப்பில் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசனுடன், பொதுச்செயலாளர் பரணீதரன் முருகேசு, உப தலைவர் பாரத் அருள்சாமி மற்றும் மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளர் கோபி கணேசமூர்த்தி ஆகியோரும் உடனிருந்தனர்.

இலங்கை அரசு அதிகாரபூர்வமாகச் சவூதி அரசை நாடி முறையான கோரிக்கையை விடுத்தால் மட்டுமே, இந்த விவகாரத்தில் இந்திய அரசால் தனது தூதரக மற்றும் அரசியல் முயற்சிகளை முன்னெடுக்க முடியும் என்று இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா தெளிவுபடுத்தினார்.

இலங்கை அரசின் அதிகாரபூர்வ முயற்சிகளுக்குத் தம்மாலான ஒத்துழைப்புக்களை வழங்கும் அதேவேளையில், அனைத்து சாத்தியமான வழிகளிலும் முயற்சிகளை மேற்கொண்டு அனோஜன் விவகாரத்துக்கு ஒட்டுமொத்த இலங்கையர்கள் சார்பாகவும் விரைவான தீர்வு தேடவே தமிழ் முற்போக்குக் கூட்டணி விரும்புகின்றது என்று மனோ கணேசன் இதன்போது சுட்டிக்காட்டினார்.

உலக செய்திகள்
World News

# சீனாவும், அமெரிக்காவும் போட்டியாளர்களாக இல்லாமல் கூட்டாளிகளாக இருக்க வேண்டுமென ஜி ஜின்பிங் தெரிவிப்பு!



சீனாவும், அமெரிக்காவும் போட்டியாளர்களாக இல்லாமல் கூட்டாளிகளாக இருக்க வேண்டுமென ஜி ஜின்பிங் தெரிவித்துள்ளார். சீன அதிபர் ஷி ஜின்பிங் 3 நாட்கள் அரசு முறை சுற்றுப்பயணமாக அமெரிக்கா சென்றுள்ளார். மேரிலாண்ட் விமான நிலையம் சென்றடைந்த சீன அதிபர் ஜி ஜின்பிங் மற்றும் அவரது மனைவி பெங் லியுவான் ஆகியோரை, அமெரிக்க அதிபர் டிரம்ப் மற்றும் அவரது மனைவி மெலனியா ஆகியோர் நேரில் சென்று வரவேற்றனர்.

இந்நிலையில் சீனாவும், அமெரிக்காவும் இணைந்து செயல்படுவதற்கான சரியான வழியைக் கண்டறிய முடியும் என்ற நம்பிக்கை தனக்கு இருப்பதாக ஜி ஜின்பிங் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது. சீனாவும், அமெரிக்காவும் போட்டியாளர்களாக இல்லாமல், கூட்டாளிகளாக இருக்க வேண்டும். இனிவரும் புதிய காலகட்டத்தில், இருநாடுகளும் இணைந்து செயல்படுவதற்கான சரியான வழியை நாம் கண்டறிய முடியும். சீனாவும், அமெரிக்காவும் சிறந்த நாடுகள். இருநாட்டு மக்களும் சிறந்த மக்கள்.

கடந்த மே மாதம் டிரம்ப் சீனாவிற்கு வருகை தந்திருந்தபோது, இரு நாடுகளுக்கும் இடையே "மூலோபாய ஸ்திரத்தன்மை" கொண்ட உறவை உருவாக்க நாங்கள் ஒப்புக்கொண்டோம். இது இருதரப்பு உறவுகளின் எதிர்கால வளர்ச்சிக்கு வழிகாட்டியாக அமைந்துள்ளது. சீனாவும், அமெரிக்காவும் ஒரே திசையில் பயணிக்க வேண்டும். அமெரிக்க மற்றும் சீன மக்களிடையே நீண்டகாலமாக நட்புறவு நிலவி வருகிறது. இரு நாடுகளின் நலன்களும் ஆழமாகப் பிணைக்கப்பட்டுள்ளன. சீன தேசத்தின் மகத்தான மறுமலர்ச்சியும், "அமெரிக்காவை மீண்டும் சிறந்த நாடாக மாற்றுதல்" என்ற நோக்கமும் ஒன்றிணைந்து செயல்படக்கூடியவை. இவை ஒன்றுக்கொன்று துணையாக அமைந்து உலகிற்கு நன்மை அளிக்கக்கூடியவை. இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# ஜி20 மாநாட்டில் பங்கேற்க ரஷிய அதிபர் புதினுக்கு அமெரிக்கா அழைப்பு விடப்பட்டுள்ளது



ஜி20 மாநாட்டில் பங்கேற்க அமெரிக்காவுக்கு வரும்படி ரஷிய அதிபர் புதினுக்கு அழைப்பு விடப்பட்டுள்ளது. அமெரிக்காவின் மியாமியில் வருகிற டிசம்பரில் ஜி20 மாநாடு நடைபெற உள்ளது. இதில் இந்தியா, பிரேசில், சீனா, பிரான்ஸ், ஜப்பான், கொரியா உள்ளிட்ட உறுப்பு நாடுகளின் தலைவர்கள் பங்கேற்க உள்ளனர்.

இந்நிலையில், நியூயார்க் நகரில், செய்தியாளர்களிடம் பேசிய அமெரிக்க வெளியுறவு துறை அமைச்சர் மார்கோ ரூபியோ, ஜி20 மாநாட்டில் பங்கேற்க வரும்படி ரஷிய அதிபர் விளாடிமிர் புதினை நாங்கள் அழைத்திருக்கிறோம். அமெரிக்க அதிபர் டிரம்ப்பிடம் பேசுவதற்கான ஒரு சந்தர்ப்பம் இது. தவிர, உலக நாடுகளின் பிற தலைவர்களுடனும் அவர் கலந்துரையாடுவதற்கான வாய்ப்பாக இருக்கும். எங்களுடைய இந்த அழைப்பை அவர் ஏற்பார் என நாங்கள் நம்புகிறோம் என்று கூறினார்.

# இந்தியர்கள் உள்பட 47 நாடுகளைச் சேர்ந்தவர்களை போருக்காக ரஷியா பயன்படுத்துகிறதென உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி குற்றச்சாட்டு!



இந்தியர்கள் உள்பட 47 நாடுகளைச் சேர்ந்தவர்களை போருக்காக ரஷியா பயன்படுத்துகிறதென ஜெலன்ஸ்கி தெரிவித்துள்ளார். ஐ.நா. சபையின் 81-வது கூட்டத்தொடர் உயர்மட்ட பொது விவாதம் கடந்த 22-ந்தேதி தொடங்கியது. அமெரிக்காவின் நியூயார்க் நகரில் நடைபெறும் இந்த கூட்டத்தொடர் வரும் 28-ந்தேதி நிறைவடைய உள்ளது. இதில் பல்வேறு உலக நாடுகளின் தலைவர்கள், முக்கிய பிரதிநிதிகள் கலந்து கொண்டுள்ளனர். இந்நிலையில் உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி ஐ.நா. கூட்டத்தொடரில் கலந்து கொண்டு பேசினார்.

அப்போது அவர் கூறியதாவது: "இங்கு நான் ஐரோப்பிய நாடுகளிடம் பேசப்போவதில்லை. மாறாக, உக்ரைனுக்கு எதிரான கொடூரமான போரில் ரஷியா பல்வேறு நாட்டு மக்களை இறக்கிவிட்டுள்ளது. அந்த நாடுகளிடம் நான் பேச விரும்புகிறேன்.

உக்ரைன் ராணுவத்தால் பிடிக்கப்படும் போர்க்கைதிகள் வடகொரியா மட்டுமின்றி, மேலும் பல்வேறு நாடுகளைச் சேர்ந்தவர்களாக இருக்கின்றனர். உக்ரைனுக்கு எதிரான போரில் ரஷியா சுமார் 47 நாடுகளைச் சேர்ந்த குடிமக்களை பயன்படுத்துகிறது. இதில் இந்தியா, நேபாளம், கானா, தஜிகிஸ்தான், ஏமன், கென்யா, ஜிம்பாப்வே, கியூபா, பெலாரஸ், சூடான், தென்னாப்பிரிக்கா மற்றும் பல நாடுகளும் அடங்கும். அவ்வப்போது, குறிப்பிட்ட போர்க்கைதிகளைத் தாயகத்திற்குத் திருப்பி அனுப்புமாறு சம்பந்தப்பட்ட நாடுகளிடம் இருந்து கோரிக்கைகளும் எங்களுக்கு வருகின்றன. இந்தப் போரில் ஈடுபடும் பிற நாடுகளைச் சேர்ந்தவர்கள் போர்க்களத்தில் உயிரிழந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் ஏமாற்று வேலைகள் மற்றும் தந்திரங்கள் மூலம் போர்க்களத்தில் இறக்கிவிடப்பட்டுள்ளனர். உங்கள் நாட்டு மக்களை ரஷியாவிடம் இருந்து பாதுகாத்துக் கொள்ளுங்கள். அவர்கள் மற்றொரு நாட்டின் போர்க்களத்திற்கு சென்று சேர அனுமதிக்காதீர்கள். ரஷிய அதிபர் புதின் இந்த போரில் உங்களையும் இழுத்துவிடுவதற்கு நீங்கள் அனுமதிக்காதீர்கள். புதின் போர் நடவடிக்கைகளுக்கான ஆதாரங்களை குறையுங்கள். அவரது போரை முடக்குங்கள்." இவ்வாறு அவர் தெரிவித்தார்.



# மனநல தாக்கத்திற்கான சிகிச்சையை வலுப்படுத்த, Lakeridge Health மற்றும் DRPS, OPP ஆகிய காவல்துறையினர் டர்ஹாம் பிரதேசத்திற்காக ஒரு குழுவை நிறுவினர்

## Lakeridge Health and Durham Region Partners Establish Committee to Strengthen Mental Health Crisis Care

Lakeridge Health, Durham Regional Police Service (DRPS), Ontario Provincial Police (OPP), and Region of Durham Paramedic Services (RDPS) have established the Durham Region Police-Hospital Committee, bringing local health-care and first responder partners together to strengthen how people experiencing mental health and addictions-related crises are supported when accessing emergency care.

The committee will focus on the transition of care that occurs when police bring a person to a Lakeridge Health emergency department for mental health assessment and treatment. Through regular collaboration, the partners will work to promote clear, consistent, and person-centred processes that support safety, privacy, dignity, human rights, and compliance with applicable legislation.

“People experiencing a mental health or addictions-related crisis deserve a compassionate and coordinated response throughout their journey into care,” said Tabitha Carroll, Health System Executive, Clinical, Lakeridge Health. “This committee creates a dedicated forum for health-care providers, police, and paramedic services to work through challenges together and strengthen local practices. Effective coordination helps protect the dignity and safety of the person receiving care and creates a safer, more supportive environment for health-care providers and first responders.”

The committee will provide an ongoing forum for partners to review emerging issues, identify opportunities to improve local practices, coordinate joint education and training, and evaluate the effectiveness of police-hospital transition processes over time.

This work will also help partners identify and address barriers that may affect timely and appropriate access to care.

Leadership representatives from Lakeridge Health, DRPS, OPP, and RDPS will participate on the committee. Patient and Family Advisors and other community partners may also be invited to contribute their perspectives and expertise as appropriate.

“Police officers are often the first point of contact for individuals experiencing a mental health or addictions-related crisis, making strong coordination between emergency responders and health-care providers essential to ensuring people receive the appropriate supports, treatment, and care they need,” said Chief Peter Moreira, Durham Regional Police Service. “This committee provides an important forum for partners to work together, share expertise, and address challenges in how people transition into care. By strengthening these processes, we can help create a safer, more consistent, and compassionate experience for individuals in crisis, as well as for the health-care providers and first responders supporting them.”

“Paramedics are often among the first health-care professionals to support someone experiencing a mental health or addictions-related crisis,” said Troy Cheseboro, Chief, Region of Durham Paramedic Services. “Having a forum where health-care providers and first responder partners can openly discuss processes, share expertise, and identify opportunities for improvement will help strengthen continuity of care across Durham Region.”

"Supporting individuals in crisis requires strong partnerships and a shared commitment to compassionate care," said Inspector Jennifer Neamtz, Detachment Commander, Toronto Detachment, OPP. "Through the collaborative efforts of the OPP, Durham Regional Police Service, Region of Durham Paramedic Services, and Lakeridge Health, we are creating a more coordinated and person-centered approach that promotes dignity, respect, and timely access to the supports people need. Together, we are strengthening outcomes for individuals in crisis while enhancing the experience for both our communities and frontline responders."

Through the Durham Region Police-Hospital Committee, the partner organizations are reinforcing their shared commitment to improving the experience of people in crisis, strengthening access to appropriate care, and supporting the health, safety, and well-being of Durham Region residents.

Suggested Photo caption: Partners from healthcare, policing, and paramedic services celebrate the launch of the Durham Region Police-Hospital Committee, which will help to support safer, more coordinated transitions into emergency care for people experiencing mental health and addictions-related crises.

----------------------------------------------------------------

About Lakeridge Health

Lakeridge Health is one of Ontario’s most comprehensive health systems, with five hospitals, four emergency departments, three critical care units, a long-term care home, a state-of-the-art, community-based surgical centre, and more than 30 community-based locations delivering



acute, ambulatory, and long-term care. We are home to leading regional programs in cancer care, chronic kidney disease services, and critical care. In addition, we offer specialty services such as a Level 3 Trauma Centre, The Shoulder Centre, thoracic surgery, gynecology oncology, eye care, and a full continuum of mental health and addictions care. Through transformative research, dynamic academic partnerships, and over 160 active clinical studies, we are advancing medical knowledge andtraining the next generation of providers through the Queen’s–Lakeridge Health MD Family Medicine Program and the LHEARN Network. Supported by nearly 9,000 staff, physicians, and volunteers, and working in collaboration with the Durham Ontario Health Team and community partners, we are committed to building an integrated system of care and empowering people across Durham Region to live their best health.

For more information, please contact:
Lakeridge Health Strategic Communications Media
communications@lh.ca



இலங்கை செய்திகள்
Sri Lanka News

fdfuhrh rutzd;;

# இந்தியன் நிதிப் பங்களிப்பில் இலங்கையில் 13 நிரந்தர பாலங்கள் கட்டும் திட்டப்படி மாத்தளையில் முதலாவது பாலத்துக்கான அடிக்கல் நாட்டி வைக்கப்பெற்றது





இந்திய அரசின் மானிய உதவியின் கீழ் இலங்கையில் புனர்நிர்மானிக்கப்படவுள்ள 13 நிரந்தர பாலங்களில் முதலாவது பாலமான மாத்தளை மொரகஹகந்த பாலத்திற்கான அடிக்கல்லை இந்திய தூதரக உயர்தணிகர் எச்.இ. சந்தோஷ் ஜா, மற்றும் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் பிமல் ரத்நாயக்க 20ம் திகதி ஞாயிற்றுக்கிழமை சம்பிராயபூர்வமாக நாட்டிவைத்தனர்.

இந்தியவுக்கும் இலங்கைக்கும் இடையிலான வலுவான மற்றும் மீள்திறன் கொண்ட இணைப்பை உருவாக்குதல் இந்தியாவின் திட்டத்தில் தித்வா புயலைத் தொடர்ந்து இந்தியா வழங்கும் 450 மில்லியன் அமெரிக்க டாலர் மதிப்பிலான புனரமைப்பு மற்றும் மறுவாழ்வுத் திட்டத்தின் ஒரு பகுதியாக இலங்கை முழுவதும் உள்ள 13 நிரந்தர பாலங்களை நிர்மானிக்க திட்மிடப்பட்டது.

இந்த திட்டம் அவசரகால மறுசீரமைப்பிலிருந்து நிரந்தரமான, மீள்திறன் கொண்ட உள்கட்டமைப்பிற்கு மாறும் ஒரு மாற்றத்தைக் குறிக்கிறது என இந்திய தூதரக உயர்தணிகர் எச்.இ. சந்தோஷ் ஜா குறிப்பிட்டார்.

# இந்தியா மற்றும் இலங்கை போதைப்பொருள் தடுப்பு முகமைகளுக்கு இடையிலான 5வது தலைமை இயக்குநர் அளவிலான பேச்சுவார்த்தை கொழும்பில் நடைபெற்றது!

இந்தியா மற்றும் இலங்கை போதைப்பொருள் தடுப்பு முகமைகளுக்கு இடையிலான 5-வது தலைமை இயக்குநர் அளவிலான பேச்சுவார்த்தை, கடந்த 23 புதன்கிழமை கொழும்பில் இந்திய போதைப்பொருள் தடுப்புப் பிரிவின் (NCB) துணைத் தலைமை இயக்குநர் ஆர். சுதாகர் தலைமையிலான குழுவுக்கும் இலங்கை காவல்துறையின் போதைப்பொருள் தடுப்புப் பிரிவின் (PNB) உதவி பொலிஸ் மா அதிபர் (டி.ஐ.ஜீ) கே.டி.ஜி.எல். அசோக தர்மசேன தலைமையிலான குழுவுக்கு இடையே இடம்பெற்றது.

2025-ல் ஏப்பிரல் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இலங்கைக்கு மேற்கொண்ட அரசுமுறைப் பயணத்தின் போது, இருதரப்புப் பாதுகாப்பு ஒத்துழைப்பு, குறிப்பாக சட்டவிரோத போதைப்பொருள் கடத்தலைத் தடுப்பது குறித்து அளிக்கப்பட்ட புதிய முக்கியத்துவத்தின் அடிப்படையிலும்.

2026 செப்டம்பர் 9 திகதி கொழும்பில் இந்தியப் பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் இலங்கை ஜனாதிபதி அனுர குமார திசநாயக்காவை சந்தித்தபோது ஜனாதிபதி இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தில் சட்டவிரோத போதைப்பொருள் கடத்தலைத் தடுப்பதில் இந்தியாவின் முழுமையான ஆதரவை கோரியிருந்தார்.

இதற்கமைய 5-வது தலைமை இயக்குநர் அளவிலான பேச்சுவார்த்தையில் இந்தியக் குழுவிற்கு போதைப்பொருள் தடுப்புப் பிரிவின் (NCB) துணைத் தலைமை இயக்குநர் ஆர். சுதாகர் தலைமை தாங்கினார் இலங்கைத் தரப்புக் குழுவிற்கு இலங்கை காவல்துறையின் போதைப்பொருள் தடுப்புப் பிரிவின் (PNB) உதவி பொலிஸ் மா அதிபர் (டி.ஐ.ஜீ) கே.டி.ஜி.எல். அசோக தர்மசேன தலைமை தாங்கினார்.





இந்தியக் குழுவில் (NCB) அதிகாரிகளைத் தவிர, தமிழ்நாடு காவல்துறை, இந்தியக் கடலோரக் காவல் படை மற்றும் வெளியுறவு அமைச்சகம் (MEA) ஆகியவற்றின் அதிகாரிகளும் இடம்பெற்றிருந்தனர். அதேவேளையில், இலங்கைத் தரப்புக் குழுவில் (PNB) அதிகாரிகளுடன், அட்டர்னி ஜெனரல் துறை, இலங்கை சுங்கம், இலங்கை கடலோரக் காவல் படை, அரசு ஆய்வாளர் துறை, சிறப்பு அதிரடிப்படை, இலங்கை கடற்படை, NDDCB நிதிசார் புலனாய்வுப் பிரிவு ஆகியவற்றின் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

இதன் போது இரு தரப்பினரும் போதைப்பொருள் கடத்தலில், குறிப்பாக கடல் வழித்தடங்கள் மூலமான கடத்தலில் காணப்படும் புதிய போக்குகள், ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளிகளைக் கண்டறிதல், புலனாய்வு மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்கள் தொடர்பான விசாரணையில் செயல்பாட்டு முயற்சிகளை ஒருங்கிணைத்தல் ஆகியவற்றை ஆய்வு செய்தனர்.

போதைப்பொருள் கடத்தலில் ஈடுபடுபவர்கள், கடத்தல் வழித்தடங்கள் மற்றும் கடத்தல் முறைகள் குறித்த செயல்முறைக்கு உகந்த புலனாய்வுத் தகவல்களும் பரிமாறிக் கொள்ளப்பட்டதுடன் சட்டவிரோத போதைப்பொருள் கடத்தலால் ஏற்படும் வளர்ந்து வரும் சவால்களைத் திறம்பட எதிர்கொள்ள, இரு நாடுகளின் போதைப்பொருள் தடுப்புச் சட்ட அமலாக்க முகமைகளுக்கு இடையிலான நிறுவன ரீதியான ஒத்துழைப்பு மற்றும் ஒருங்கிணைப்பை மேலும் வலுப்படுத்த இரு தரப்பினரும் ஒப்புக்கொண்டனர்.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# துணுக்காயில் கோலாகலமாக நடைபெற்ற "பண்பாட்டுப் பெருவிழா — 2026"

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் அலகும் துணுக்காய் பண்பாட்டுப் பேரவையும் இணைந்து ஏற்பாடு செய்த "துணுக்காய் பிரதேச பண்பாட்டுப் பெருவிழா - 2026" நிகழ்வு 2026 செப்டெம்பர் 22ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணிக்கு, துணுக்காய் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் அமைந்துள்ள "கலைத் திலகம் அமரர் புவனேஸ்வரி நடராசா அரங்கில்" கோலாகலமாக நடைபெற்றது.

துணுக்காய் பிரதேச செயலாளர் இராமதாஸ் ரமேஸ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், பிரதம விருந்தினராக சிவராஜசிங்கம் ஜெயகாந்த், மேலதிக மாவட்டச் செயலாளர் - காணி, முல்லைத்தீவு மாவட்ட செயலகம் கலந்து சிறப்பித்தார்.

சிறப்பு விருந்தினராக திருவாட்டி தர்ஷினி நிதர்சன், பிரதிப் பணிப்பாளர், பண்பாட்டலுவல்கள் அலகு, வடக்கு மாகாணம் கலந்து கொண்டதுடன், கௌரவ விருந்தினராக கலாபூஷணம் சிற்றம்பலம் சண்முகநாதன், மூத்த கலைஞர் கலந்து சிறப்பித்தார்.

இந்நிகழ்வில் மாணவர்களின் பாரம்பரிய நடனங்கள், இசை நிகழ்வுகள் மற்றும் எமது பண்பாடு, கலை மரபுகள் மற்றும் வாழ்வியலை எடுத்தியம்பும் பல்வேறு கலை நிகழ்வுகள் இடம்பெற்றன.

மேலும், துணுக்காய் பிரதேசத்தின் பாரம்பரிய கலைகள், பண்பாட்டு விழுமியங்கள் மற்றும் மரபுகளைப் பாதுகாத்து அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்ல வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தும் வகையில் இப்பெருவிழா அமைந்திருந்தது.

பல்வேறு கிராமங்களைச் சேர்ந்த கலைஞர்கள், மாணவர்கள், இளைஞர்கள், அரச அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் என பல்வேறு தரப்பினரும் பங்கேற்ற இப்பெருவிழா, துணுக்காய் பிரதேசத்தின் கலை, பண்பாடு மற்றும் பாரம்பரியத்தை ஒருங்கிணைத்து வெளிப்படுத்தும் முக்கியமான பண்பாட்டு நிகழ்வாக அமைந்தது.

"கலை இழந்த சமூகம், நிலை இழந்து போகும்" என்ற கருப்பொருளை முன்னிறுத்தி நடைபெற்ற இப்பண்பாட்டுப் பெருவிழா, எமது பாரம்பரியக் கலைகளைப் பாதுகாத்து அடுத்த தலைமுறைக்கு கொண்டு செல்லும் பணியில் ஒரு முக்கியமான முன்னெடுப்பாக அமைந்தது.

# தேசிய மட்டத்தில் பதக்கங்களை குவித்த வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி மாணவர்களுக்கு அளிக்கப்பெற்ற கௌரவம்!



அகில இலங்கை தேசிய மட்ட தமிழ்மொழித்தினப் போட்டி 2026 மற்றும் அகில இலங்கைப் பாடசாலைகளுக்கு இடையிலான தேசியமட்ட விளையாட்டுப் போட்டி போன்றவற்றில் கலந்துகொண்ட யாழ். வட்டு இந்துக் கல்லூரி மாணவர்கள் நான்கு பதக்கங்களை தம்வசம் சுவீகரித்துள்ளனர்.

கடந்த 19,20 சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை ஆகிய இருதினங்கள் கொழும்பு பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரியில் அகில இலங்கை தேசிய மட்ட தமிழ்மொழித்தினப் போட்டியும் பொலநறுவை றோயல் கல்லூரியில் 40 ஆவது தேசிய விளையாட்டுப் போட்டியும் இடம்பெற்றது. குறித்த போட்டிகளில் கலந்துகொண்ட மாணவர்களே நான்கு பதக்கங்களை தம்வசம் சுவீகரித்துக் கொண்டுள்ளனர்.

அகில இலங்கை தேசிய மட்ட தமிழ்மொழித்தினப் போட்டி 2026 இல் அறிவிப்பாளர் போட்டியில் அருந்தவன் சரண்யா இரண்டாம் இடத்தை பெற்று வெள்ளிப் பதக்கத்தையும் தேசிய மட்ட விவாதப் போட்டியில் மூன்றாம் இடத்தை அ.சரணியா, ஆ.றுஜிதா, ச.ஷைந்தவி ஆகியோர் பெற்று வெண்கல பதக்கத்தையும் சுவீகரித்துக் கொண்டுள்ளனர்.



இதேவேளை, அகில இலங்கைப் பாடசாலைகளுக்கு இடையிலான தேசியமட்ட விளையாட்டுப் போட்டியில் பளுதூக்கல் நிகழ்வில் 17 வயது ஆண்கள் பிரிவில் 96 கிலோ கிராம் எடையில் அ.அற்புதன் இரண்டாம் இடத்தினைப் பெற்று வெள்ளிப் பதக்கத்தையும் 17 வயது பெண்கள் பிரிவில் 71 கிலோ கிராம் இடையில் கே.சாத்விகா மூன்றாவது இடத்தை பெற்று வெண்கல பதக்கத்தையும் சுவீகரித்துக் கொண்டுள்ளனர்.

22ம் திகதி அன்றைய தினம் யாழ்.வாட்டு இந்து கல்லூரி மைதான திறந்தவெளி அரங்கில் பாராட்டு வைபவம் ஒன்று முன்னெடுக்கப்பட்டிருந்தது. கல்லூரியின் அதிபர் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் கல்லூரியின் பழைய மாணவர்கள் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பதக்கங்களை வழங்கி வைத்ததோடு தேசிய மட்ட போட்டியில் பெற்றுக்கொண்ட பதக்கங்கள் மற்றும் சான்றிதழ்கள் என்பவற்றை கல்லூரியின் அதிபர், பிரதி அதிபர் ஆகியோரினால் மாணவர்களுக்கு வழங்கி வைக்கப் பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



# முகநூல்பதிவுக்கு வழங்கப்பட்டுள்ள மரண தண்டனை தமிழ்–முஸ்லீம் உறவுகளைப் பாதிக்குமா?

- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார் -

**மட்டக்களப்பைச் சேர்ந்த அனோஜன் என்ற தமிழருக்கு சவுதி அரசாங்கத்தால் வழங்கப்பட்ட தண்டனையானது இனங்கடந்து மதங்கடந்து இலங்கையில் உள்ளவர்களை ஒன்றிணைத்திருக்கிறது. அந்த மரண தண்டனையை நிறுத்த வேண்டும் என்று மனசாட்சி உள்ள எல்லாருமே சவுதி அரசாங்கத்துக்கு வேண்டுகோள் விடுத்திருக்கிறார்கள். அனோஜன் பிறந்த கிராமத்தைச் சேர்ந்த முஸ்லிம்களும் உட்பட முஸ்லிம்கள் மத்தியில் உள்ள படித்தவர்கள், மதகுருக்கள், சமூகச் செயற்பாட்டாளர்கள், சட்டச் செயற்பாட்டாளர்கள், அரசியல்வாதிகள் என்று வெவ்வேறு தரப்புகளைச் சேர்ந்தவர்கள் வழங்கப்பட்ட மரண தண்டனையை நீக்கவேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள் ---- முகநூலில் அனோஜன் எழுதியது சாமானிய மனோநிலையில் இருந்து எழுதப்பட்ட ஒரு வெறுப்பு குறிப்பு. ஏற்கனவே எழுதப்பட்ட வெறுப்புக் குறிப்பு ஒன்றின் எதிர்வினை அது. அனோஜன் எழுதிய வெறுப்புக் குறிப்புக்கு அவர் மன்னிப்புக் கேட்டு விட்டார்.அங்கே அவர் பொறுப்புக் கூறத் தொடங்குகிறார். அதற்குப் பிறகும் அவருடைய தலையை வெட்ட வேண்டுமா?**




இனத்தால் மதத்தால் மொழியால் இப்பொழுதும் பிளவுண்டிருக்கும் ஒரு சிறிய தீவை ஒரு மரண தண்டனை தற்காலிகமாகவேனும் ஒன்றிணைத்திருக்கிறதா? அதுவும் கனடாவில் வசிக்கும் ஈழத் தமிழ்ப் பெண்பிள்ளையான மைத்திரேயி ராமகிருஷ்ணனுக்கு எதிராக சிங்கள முகநூல் உலாவிகள் இனத் துவேசத்தைக் கக்கிக் கொண்டிருக்கும் ஒரு காலகட்டத்தில்?

மட்டக்களப்பைச் சேர்ந்த அனோஜன் என்ற தமிழருக்கு சவுதி அரசாங்கத்தால் வழங்கப்பட்ட தண்டனையானது இனங்கடந்து மதங்கடந்து இலங்கையில் உள்ளவர்களை ஒன்றிணைத்திருக்கிறது. அந்த மரண தண்டனையை நிறுத்த வேண்டும் என்று மனசாட்சி உள்ள எல்லாருமே சவுதி அரசாங்கத்துக்கு வேண்டுகோள் விடுத்திருக்கிறார்கள். அனோஜன் பிறந்த கிராமத்தைச் சேர்ந்த முஸ்லிம்களும் உட்பட முஸ்லிம்கள் மத்தியில் உள்ள படித்தவர்கள், மதகுருக்கள், சமூகச் செயற்பாட்டாளர்கள், சட்டச் செயற்பாட்டாளர்கள், அரசியல்வாதிகள் என்று வெவ்வேறு தரப்புகளைச் சேர்ந்தவர்கள் வழங்கப்பட்ட மரண தண்டனையை நீக்கவேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள்.

தமிழ் பேசும் முஸ்லிம்கள் மத்தியில் உள்ள பெரும்பாலான கட்சிகள் இந்த விடயத்தில் ஒரே நிலைப்பாட்டோடு காணப்படுகின்றன. தமிழ் மக்கள் மத்தியில் உள்ள எல்லா கட்சிகளுமே இந்த விடயத்தில் ஒரே நிலைப்பாட்டோடு காணப்படுகின்றன. அவை தமிழ்த் தேசியவாத கட்சிகளாக இருந்தாலும்சரி தமிழ் தேசிய வாதத்துக்குள் வராத கட்சிகளாக இருந்தாலும்சரி அனைவரும் இந்த விடயத்தில் ஒன்றாகத் திரண்டு நிற்கிறார்கள்.

அப்படித்தான் சிங்கள மக்கள் மத்தியிலும் மரண தண்டனையை நீக்கக் கோரி இலங்கைத் தீவில் உள்ள பெரும்பாலானவர்கள் ஒன்றாகத் திரண்டிருப்பது மிக அரிதான ஒரு நிகழ்வு. அரசாங்கமும் எதிர்க் கட்சிகளும் இதுவிடயத்தில் ஏறக்குறைய ஒரே நிலைப்பாட்டோடு காணப்படுகின்றன.

எனினும் அது தற்காலிகமானது என்பதைத்தான், சஜித்தை அனோஜனின் தாயார் சந்தித்தபின் வெளிவந்த செய்திகளின் மீதான வாதப் பிரதிவாதங்கள் நமக்கு உணர்த்துகின்றன. அனோஜனின் உறவினர்களும் அவர்களுக்கு உதவும் செயற்பாட்டாளர்களும் சஜித் பிரேமதாசாவை சந்தித்தபோது, சஜித் அனோஜனோடு தொலைபேசியில் உரையாடியதாகவும் அந்த உரையாடலை ஸ்பீக்கரில் விட்டதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. அந்த உரையாடலில் அனோஜன் தெரிவிக்கும் கருத்துக்கள் சர்ச்சைக்குரியவை. அதைவிட சர்ச்சைக்குரியது, அப்படிப்பட்ட ஒரு உரையாடலை பகிரங்க வெளியில் விட்டது. நாட்டின் உயர்நிலை அரசியல்வாதிகளில் ஒருவராகிய சஜித் பிரேமதாச இந்த விடயத்தில் மேலும் புத்திசாலித்தனமாக நடந்து கொண்டிருக்க வேண்டுமா? எதுவாயினும் சஜித் பிரேமதாச அனோஜனுக்கு நல்லது செய்ய முயற்சித்தார் என்பதில் யாருக்கும் சந்தேகம் இருக்க முடியாது.

ஒரு மரணத் தீர்ப்புக்கு எதிராக இச்சிறிய தீவில் உள்ள நான்கு மதப் பிரிவினரும் ஒன்றிணைந்திருப்பதை வரவேற்கலாம். இந்த விடயம் ஒரு மரண தண்டனை என்பதற்குமப்பால், ஒரு மத நிந்தனை என்பதற்குமப்பால், இலங்கைத் தீவில் வாழும் தமிழ், முஸ்லிம் ஆகிய இரண்டு சமூகங்களுக்கும் இடையிலான எதிர்கால உறவுகளைத் தீர்மானிக்கும் ஒரு விடயமும் என்பதுதான் இதன் பாரதூரத்தன்மை ஆகும். இதில் அனோஜனுக்கு கிடைக்கக்கூடிய கடுமையான தண்டனையானது இரண்டு சமூகங்களுக்கும் இடையிலான எதிர்கால உறவில் பிரதிபலிப்புகளை ஏற்படுத்தக்கூடியது.

எனவே அனோஜனின் விடயத்தில் பின்வரும் விடயங்களைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

முதலாவதாக, அனோஜனை பத்திரமாக வெளியே எடுக்க வேண்டும். ஆகக் குறைந்தது அவருடைய தண்டனையின் கடுமையை குறைக்க வேண்டும். அது பெருமளவுக்கு அரசியல் ராஜதந்திர நடவடிக்கைதான். அறம் சார்ந்த எதிர்ப்புக்கள் அல்லது அறம் சார்ந்த கோரிக்கைகள் ஒரு கட்டத்துக்கு மேல் வேலை செய்யாது. எனவே அதை அதற்குரிய தளத்தில் அதற்குரிய பக்குவத்தோடு அணுக வேண்டும். அப்படி அணுகினால்தான் அனோஜனை தூக்குக் கயிற்றில் இருந்து காப்பாற்றலாம்.

சவுதி அரேபிய மன்னர் ஆட்சி அனோஜனுக்கு விதித்த தண்டனை சரியா பிழையா, போன்ற விவாதங்களை தனியே வைத்துக் கொள்ளலாம். சவுதி அரேபியாவின் ஆள் புல எல்லைக்குள் அனோஜன் தொழில் புரிகிறார். எனவே அங்கே தற்காலிகமாக வாழ்கிறார். இந்த அடிப்படையில் அவர் அந்த நாட்டின் சட்ட திட்டங்களுக்கு உட்பட்டவர். அந்த சட்ட திட்டங்களின் மனிதாபிமான பரிமாணங்கள் குறித்து தனியாக ஆராயலாம். ஆனால் இப்பொழுது நடைமுறையில் உள்ள சவுதி அரேபிய சட்டங்களின்படி அவர் கையாளப்படுகிறார். எனவே அங்கே சட்டம் நீதி என்பவற்றை பரிபாலிக்கும் மன்னராட்சியோடுதான் பேச வேண்டும். அந்த மன்னர் ஆட்சியின் முடிவுதான் இறுதியானது. அதனால் அந்த மன்னர் ஆட்சி மீது எப்படிப்பட்ட ராஜதந்திரச் செல்வாக்கை, தார்மீக அழுத்தங்களைப் பிரயோகிக்கலாம் என்றுதான் சிந்திக்க வேண்டும். முதலில் அனோஜனை தூக்குக் கயிற்றில் இருந்து காப்பாற்ற வேண்டும். அவருடைய தண்டனையின் கடுமையை ஆகக்கூடிய அளவு குறைக்க வேண்டும்.

இரண்டாவதாக, அது இலங்கைத் தீவில் ஏற்கனவே முரண்பட்டுக் கொண்டிருக்கும் இரண்டு சமூக பிரிவினருக்கு இடையிலான உறவின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கக்கூடிய ஒரு விவகாரமாக வளரக்கூடிய ஆபத்து தெரிகிறது. எனவே அந்த நோக்குக் கோணத்தில் இருந்தும் அதனை அணுக வேண்டும்.

மூன்றாவது, அனோஜனின் விடயம் சமூக ஊடக வலைத்தளப் பயனாளிகளுக்கு ஒரு பாடத்தைக் கற்றுத்தருகிறது. உங்களிடம் ஒரு கைபேசி அல்லது கணினி இருக்கிறது என்பதற்காக, அதில் இன்டர்நெட் இணைப்பு இருக்கிறது என்பதற்காக, நீங்கள் முகநூலில் எல்லாவற்றையும் எழுத முடியாது. எழுதும் எல்லாவற்றிற்கும் பொறுப்புக்கூற வேண்டும்.

கண்ணியமின்றி மற்றவர்களை விமர்சிக்கின்றஒரு சமூகத்தை, ஒரு மதத்தை, ஒரு இனத்தை, ஒரு மொழியை, ஒரு பால் பிரிவை, ஒரு சாதியை, ஒரு ஊரை,ஒரு பிராந்தியத்தை, ஒரு சமூகப் பொது அடையாளத்தை, நம்பிக்கையை... சிறுமைப்படுத்தி எழுதுகின்றஒருவருடைய அந்தரங்கத்தை பொது வெளியில் விமர்சிக்கின்ற எல்லாருக்கும் இது பொருந்தும். பொதுவெளியில் தாங்கள் எழுதும் ஒவ்வொரு சொல்லுக்கும் ஒவ்வொருவரும் பொறுப்புக்கூற வேண்டும். பொதுவெளியை கழிப்பறையாகவோ கழிப்பறைச் சுவராகவோக் கருதி அங்கே கழித்துவிட்டுப் போக முடியாது.

அனோஜன் சவூதியில் இருப்பதனால் அந்த நாட்டின் சட்ட திட்டங்களுக்கு உட்பட்டிருக்கிறார். அதேசமயம் ஐரோப்பாவில், அமெரிக்காவில், ஒஸ்திரேலியாவில் வசிக்கும் சில தமிழ் வெறுப்பர்கள் இப்பொழுதும் சமூக ஊடகவலைத்தளங்களில் சுதந்திரமாக விஷத்தைக் கக்கிக் கொண்டிருக்கிறார்கள். கழிந்து கொண்டிருக்கிறார்கள். மைத்திரேயி ராமகிருஷ்ணனுக்கு எதிராக கக்கப்படும் விஷமும் வன்மமும் அரசியல் தூஷணமும் ஆகப் பிந்திய உதாரணங்கள்.

மதத்தை, இறைதூதரை, இனத்தை, மொழியை, பாலினத்தை, ஊரை, சாதியை, பிராந்தியத்தை, ஒருவருடைய அந்தரங்கத்தை இன்னபிறவை சிறுமைப்படுத்தி எழுதும் ஒவ்வொருவரும் தமது வார்த்தைகளுக்குப் பொறுப்புக்கூற வேண்டும். தனது சகோதரிக்கு, தாய்க்கு, மனைவிக்கு எதிராக மற்றொருவர் எதை எழுதக்கூடாது என்று ஒருவர் எதிர்பார்க்கிறாரோ, அதையே அவர் மற்றவரின் சகோதரிக்கும் தாய்க்கும் மனைவிக்கும் எழுதக்கூடாது. தனது மதத்தை ஒருவன் சிறுமைப்படுத்தும் போது கோபப்படும் ஒருவர், பதிலுக்கு தானும் மற்றவர்களின் மதத்தை சிறுமைப்படுத்த கூடாது. ஒருவர் பொதுவெளியில் எழுதுதை அவருடைய தாயும் சகோதரியும் பொது வெளியில் பகிரங்கமாக வாசித்துக்காட்டக் கூடியதாக இருக்கவேண்டும். இல்லையென்றால் அங்கே எங்கேயோ வக்கிரம் இருக்கிறது என்று பொருள்.

சமூக ஊடக வலைத்தளச் சூழலானது ஒருபுறம் குரலற்ற சாதாரண மக்களுக்கு மேடையை அமைத்துக் கொடுக்கிறது. அதனால் அது அதிகம் ஜனநாயகமானது. அதேசமயம் இன்னொருபுறம், அது கும்பல் மனோநிலையைப் பிரதிபலிக்கின்றது. சாதாரணமானவர்கள் பெரும்பாலும் கும்பல் மனோ நிலையோடு காணப்படுவார்கள். அது இனம் சார்ந்ததாக இருக்கலாம். மதம் சார்ந்ததாக இருக்கலாம். பால் பிரிவைச் சார்ந்ததாக இருக்கலாம். சாதி ஊர் பிராந்தியம் சார்ந்ததாக இருக்கலாம். எதுவாக இருந்தாலும் அது இன்னொரு இனத்துக்கு அல்லது மதத்துக்கு அல்லது மொழிக்கு அல்லது ஊருக்கு அல்லது இன்னபிறவுக்கு எதிரானதாக அமையும்போது அங்கே முரண்பாடுகள் தூண்டி விடப்படுகின்றன.

மியான்மரில், ரோஹியங்கா முஸ்லிம்களுக்கு எதிரான இன அழிப்பில் முகநூல் குற்றச்சாட்டுக்கு உள்ளாகியது. ஐநாவின் வெறுப்புப் பேச்சுக்கு எதிரான சிறப்பு நிபுணர் ரோகிங்கா முஸ்லிம்களுக்கு எதிரான இன அழிப்பில் முகநூலுக்கும் பங்கு உண்டு என்ற பொருள்படக் குற்றச்சாட்டியிருந்தார்.

முகநூலில் அனோஜன் எழுதியது சாமானிய மனோநிலையில் இருந்து எழுதப்பட்ட ஒரு வெறுப்பு குறிப்பு. ஏற்கனவே எழுதப்பட்ட வெறுப்புக் குறிப்பு ஒன்றின் எதிர்வினை அது. அனோஜன் எழுதிய வெறுப்புக் குறிப்புக்கு அவர் மன்னிப்புக் கேட்டு விட்டார். அங்கே அவர் பொறுப்புக் கூறத் தொடங்குகிறார். அதற்குப் பிறகும் அவருடைய தலையை வெட்ட வேண்டுமா?

சாதாரண மனிதர்கள் வெறுப்பை வெறுப்பினால்தான் எதிர் கொள்வார்கள். மனிதர்களுள் மகத்தானவர்கள் வெறுப்பை அன்பினால், மன்னிப்பால் எதிர்கொள்வார்கள். மனிதர்கள் மன்னிக்கத் தவறியவற்றை இறைத் தூதர்கள் மன்னிப்பார்கள். மனித குல வரலாற்றில் மன்னிப்புத்தான் இறைத்தூதர்களின், அவதாரங்களின், சமய ஸ்தாபகர்களின் மகிமையை பிரதிபலித்திருக்கிறது. தண்டனை அல்ல.

---

இலங்கை செய்திகள் Sri Lanka News

# இந்தியாவின் தொன்மைக் குடிகள் தமிழர்களே என்பதை மறைக்க முயற்சியா?

## ஒன்றிய அமைச்சருக்கு உலகத் தமிழர் பேரமைப்பின் தலைவர் பழ. நெடுமாறன் கடும்கண்டனம்

24.09.2026

கீழடி அகழாய்வை முதன்முதலாக நடத்திய இந்தியத் தொல்லியல்துறை இயக்குநர் கே. அமர்நாத் இராமகிருஷ்ணா மூன்றாண்டுகளுக்கு முன்பு சமர்ப்பித்த தொல்லியல் அறிக்கையை இதுவரை வெளியிடாமல் பல்வேறு குறைகள் இருப்பதாக குற்றம் சாட்டி வந்த ஒன்றிய கலாச்சாரத்துறை அமைச்சர் கஜேந்திர சிங் ஷெகாவத் இப்போது புதிய குற்றச்சாட்டு ஒன்றினை சுமத்தியுள்ளார்.

தமது அறிக்கையைத் தயாரிக்கும்போது அமர்நாத் இராமகிருஷ்ணா அப்போதைய தி.மு.க. அரசின் செல்வாக்குக்குட்பட்டு இந்த அறிக்கையைக் கொடுத்ததாகக் குற்றம் சாட்டியுள்ளார்.

ஆனால், கீழடி அகழாய்வை அமர்நாத் நடத்தியபோதும், அதன் முடிவுகளை அறிவித்த போதும் அ.தி.மு.க. அரசு பதவி வகித்தது என்பதையும், கீழடி அகழாய்வு பிரச்சனையில் அந்த அரசு ஒருபோதும் தலையிடவில்லை என்பதையும் அடியோடு மறைத்து பழி சுமத்தியுள்ளார்.

கீழடி அகழாய்வு முடிவுகள் வெளிவந்த பிறகு, பதவிக்கு வந்த தி.மு.க. அரசின் காலத்தில் கீழடி அகழாய்வை மத்திய அரசு கைவிட்ட காரணத்தினால், தமிழகத் தொல்லாய்வுத் துறையை கொண்டு அகழாய்வைத் தொடர்ந்து நடத்தி அறிவியல் பூர்வமான பல முடிவுகளை வெளியிட்டது. அமர்நாத் அகழாய்வு முடிவுகளில் அது ஒருபோதும் தலையிடவில்லை.

கீழடி அகழாய்வு அறிக்கையை அமர்நாத் அளித்து மூன்றாண்டுகளாகிவிட்டது. 982 பக்கங்கள் கொண்ட அந்த அறிக்கையைப் பொதுவெளியில் வெளியிட அமைச்சருக்குத் துணிவு உண்டா? அந்த அறிக்கையை உடனடியாக வெளியிடவேண்டும். இந்தியாவில் உள்ள பல்வேறு தொல்லாய்வு அறிஞர்கள், உலக நாடுகளைச் சேர்ந்த தொல்லாய்வு அறிஞர்கள் ஆகியோர் அந்த அறிக்கையை ஆராய்ந்து பாராட்டுவார்களே தவிர, குறையிருப்பதாக ஒருவரும் கூறமாட்டார்கள்.



இந்தியாவின் மூத்த குடி தமிழர்களே என்பதை அண்மையில் தமிழ்நாட்டின் பல்வேறு இடங்களில் நடத்தப்பட்ட அகழாய்வுகள் மெய்ப்பித்துள்ளன. ஆனால், பா.ச.க. அரசு அதை மறைப்பதற்கான முயற்சியில் ஈடுபட்டிருக்கிறது. கி.பி. 2004-2005 ஆண்டுகளின் ஆதிச்சநல்லூரில் அகழாய்வு புதியதாக நடத்தப்பெற்று, அதை நடத்திய இந்தியத் தொல்லியல் அதிகாரி டி. சத்தியமூர்த்தி என்பவர் அறிக்கை அளித்து 21 ஆண்டுகளான பிறகும், அதை இன்னும் வெளியிடாமல் மறைப்பது ஏன்? இது இந்தியாவின் தொல்குடி தமிழினமே என்ற வரலாற்று உண்மையை மறைப்பதற்கு யாராலும் இயலாது. தங்களது உள்நோக்கத்தையும் மறைத்துக்கொண்டு அமர்நாத் மீது பொய்யான குற்றச்சாட்டுகளைக் கூறும் ஒன்றிய அமைச்சரை வன்மையாகக் கண்டிக்கிறேன்.

அன்புள்ள,

பழ. நெடுமாறன், தலைவர்

# யாழ்ப்பாணம் மாநகர சபையின் நிர்வாகத்திற்குள் உள்ள கல்வியங்காடு செங்குந்தா சந்தையில் சுகாதார சீர்கேட்டால் துர்நாற்றம் வீசுவதாக நுகர்வோர் குற்றச்சாட்டு!



யாழ்ப்பாணம் மாநகரின் நிர்வாகத்திற்குள் உள்ள கல்வியங்காடு செங்குந்தா சந்தையில் மீன் கழிவுகள் முறையாக அகற்றப்படாமையால் கழிவுகள் அழுகி, புழுக்கள் பெருகி கடும் துர்நாற்றம் வீசுவதுடன், சந்தைக்கு வரும் நுகர்வோர் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாக நுகர்வோர் குற்றச்சாட்டுகின்றனர்.

யாழ் மாநகர சபையால், சுமார் 80 இலட்சம் ரூபாவுக்கு வருடாந்த குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள இந்தச் சந்தையில், சந்தையின் உட்புற சுத்தம் அதனுடன் தொடர்புடைய கழிவகற்றல் பணிகளை குத்தகைதாரரும், பொதுவான வெளி சுகாதார மற்றும் கழிவகற்றல் நடவடிக்கைகளை மாநகரசபையும் மேற்கொள்ள வேண்டிய நிலையில், இரு தரப்பினரின் பொறுப்புகளும் உரிய முறையில் நிறைவேற்றப்படுவதில்லை எனவும் பிரதேச மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக, சந்தையில் வெட்டப்படும் மீன்களின் கழிவுகள் உரிய நேரத்தில் அகற்றப்படாமல் வாய்க்காலுக்குள் கொட்டப்பட்டு தேங்குவதால் அவை அழுகி, புழுக்கள் பெருகுவதுடன் கடும் துர்நாற்றமும் ஏற்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனால் சந்தைக்கு அத்தியாவசிய பொருட்களை கொள்வனவு செய்ய வரும் பொதுமக்கள் சுகாதார அச்சுறுத்தலுடன் கூடிய சூழலை எதிர்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

சந்தை குத்தகை மூலம் மாநகரசபைக்கு கணிசமான வருமானம் கிடைக்கும் நிலையில், பொதுமக்களிடம் தவறாது வரி அறவிடும் மாநகரசபை, அதற்கேற்ப சுகாதார வசதிகளையும் கழிவகற்றல் நடவடிக்கைகளையும் உறுதிப்படுத்த வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

குறிப்பாக உணவுப் பொருட்கள் விற்பனை செய்யப்படும் சந்தையில் இவ்வாறான சுகாதார சீர்கேடுகள் நீடிப்பது பொதுமக்களின் சுகாதாரத்திற்கு பாதிப்பை ஏற்படுத்தக்கூடியது என்பதால், யாழ். மாநகரசபையின் சுகாதாரப் பிரிவு உடனடியாக நடவடிக்கை எடுத்து சந்தையை சுத்தமான மற்றும் சுகாதாரமான சூழலாக மாற்ற வேண்டும் எனவும் மக்கள் வலியுறுத்தியுள்ளனர்.

இலங்கை செய்திகள் Sri Lanka News

# கிளிநொச்சியில் நடைபெற்ற எழுத்தாளர் டக்ஷனா கிருஷ்ணானந்தனின் "குலதெய்வம்" கவிதை நூல் வெளியீடு!

எழுத்தாளர் டக்ஷனா கிருஷ்ணானந்தனின் (குகதா) "குலதெய்வம்" கவிதைத் தொகுப்பு நூல் வெளியீட்டு விழா கரைச்சிப் பிரதேச சபை புதிய மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வின் முதன்மை விருந்தினராக இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் கலந்துகொண்டு நிகழ்வைச் சிறப்பித்தார்.







கவிதைத் தொகுப்பாக வெளிவந்திருக்கும் "குலதெய்வம்" நூலிற்கான வெளியீட்டுரையினை கவிஞர் யோ. புரட்சியும், நயவுரையினை எழுத்தாளரும் தமிழாசிரியருமான திரு. கனகரெட்ணம் செந்தூரனும் வழங்கினர்.

"அன்பின் பாதை எண்ணம்போல் வாழ்க்கை" கலை இலக்கிய மன்றத்தின் தலைவர் கனக தீபகாந்தன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், பிரதம விருந்தினர் வரிசையில் கரைச்சிப் பிரதேச செயலாளர் தவச்செல்வம் முகுந்தனும், சிறப்பு விருந்தினர்களாக பூநகரி ஓய்வுநிலை கோட்டக் கல்வி அதிகாரி நாகேந்திரம் கணேஸ்வரநாதன், ஓய்வுநிலை அதிபர் கந்தையா இரட்ணகுமார், கிளி/செல்வாநகர் அ.த.க. பாடசாலை அதிபர் சி. மகேந்திரராஜா ஆகியோரும், விருந்தினர்களாக கரைச்சிப் பிரதேச சபையின் தவிசாளர் அருணாசலம் வேழமாலிகிதன், தொற்றுநோயியல் வைத்திய அதிகாரி மருத்துவர் மா. ஜெயராசா, கவிஞர் வேல் லவன், சட்டத்தரணி திரு. தனபாலசிங்கம் லக்சன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

# சவூதியில் மரணதண்டனை விதிக்கப்பட்ட அனோஜனை விடுதலை செய்யுமாறு கோரி யாழ்ப்பாணம் நல்லூரடியில் போராட்டம்!



சவூதியில் மரணதண்டனை விதிக்கப்பட்ட அனோஜனை விடுதலை செய்யுமாறு கோரி 22ம் திகதி செவ்வாய்க்கிழமை அன்றையதினம் நல்லை ஆதீனத்திற்கு முன்பாக அமைதி வழியிலான கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

வடக்கு மாகாண ஐயப்ப இந்து இணையத்தின் ஏற்பாட்டில் இந்த போராட்டமானது முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, சவூதியில் மரண தண்டனை விதிக்கப்பட்ட அனோஜனுக்கு மன்னிப்பு வழங்கி விடுதலை செய்ய வழிகோல வேண்டும் என இலங்கை ஜனாதிபதி மற்றும் இந்திய பிரதமர் நரேந்திர மோடி ஆகியோரிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

அந்தவகையில் இலங்கை ஜனாதிபதி மற்றும் பாரதப் பிரதமர் நரேந்திர மோடி ஆகியோருக்கு மகஜரும் கையளிக்கப்பட ஏற்பாடு செய்யப்பட்டது.

நல்லை ஆதீனத்திற்கு முன்பாக ஆரம்பமான போராட்டமானது பேரணியாக யாழ். இந்திய துணை தூதரகம் வரை செல்கிறது. பாரதப் பிரதமருக்கான கோரிக்கை மகஜர் தூதரகத்தில் கையளிக்கப்படவுள்ளது.

வடக்கு மாகாண ஐயப்ப இந்து இணையத்தின் தலைவர் தரணீஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், தேசிய மகா சபையினர், முஸ்லீம் சகோதரர்கள், கிழக்கு மாகாண ஐயப்ப சுவாமி அமைப்பினர் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டனர். அங்கு கலந்து கொண்டு தங்களை விளம்பரப்படுத்த முனைந்த "ஊழல்" தமிழ் அரசியல்வாதிகள் இருவர் ஏற்பாட்டாளர்களால் அங்கிருந்து விலகிச் செல்லுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டனர். அவர்களில் ஒருவர் மைத்திரி மகிந்தா காலத்தில் சாராய லைசன் பெற்று தற்போது மட்டக்களப்பு மாவட்டத்தில் இரண்டு விற்பனை நிலையங்களை நடத்திவருபவர் எனவும் அவரது சகோதரரும் இவரைப் போலவே மீண்டும் மாகாண சபையில் அங்கம் வகிக்கும் "அவா" வில் ஆங்காங்கு நடைபெறும் ஆர்ப்பாட்டங்களில் அழையா விருந்தாளிகளாக நுழைபவர்கள் எனவும் எமது செய்தியாளர் அறிவித்துள்ளார்.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

பு. கஜிந்தன்

# யாழ்ப்பாணம் சிறைச்சாலையிலிருந்து வீடு வந்தவர் திடீர் மரணத்தை தழுவியது தொடர்பாக மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு!

யாழ்ப்பாண சிறைச்சாலையில் விளக்கமறியல் வைக்கப்பட்ட கைதி ஒருவர் பிணையில் விடுவிக்கப்பட்ட அன்றைய தினம் திடீரென மயங்கி விழுந்ததால் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார்.

குறித்த சம்பவத்தில் சந்தேக நபரான இளவாளைப் பகுதியைச் சேர்ந்த 3 பிள்ளைகளின் தந்தையான 39 வயதுடைய ஜெயன் என்பவரே இவ்வாறு மரணம் அடைந்துள்ளார்.

குறித்த கைதி சிறையில் விளக்கமறியலில் வைக்கப்பட்ட நாட்களில் நோய் வாய்ப்பட்டு இருக்கலாம் என வீட்டார் சந்தேகம் வெளியிடுகின்றனர். இந்நிலையில் சிறைச்சாலை நிர்வாகத்தின் அலட்சியமே உயிரிழப்புக்கு காரணம் என குற்றச்சாட்டை முன்வைக்கின்றனர்.

குறித்த விடயம் தொடர்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய அலுவலகத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

# கொடிகாமத்திற்கு அருகில் உள்ள கச்சாய்க் குளத்தை புனரமைப்பது தொடர்பாக விவசாயிகளுடன் கலந்துரையாடிய சிறீதரன் எம்.பி!



அதிகரித்த வெப்பம் காரணமாகக் கச்சாய்க் குளத்தின் நீர்மட்டம் வற்றியுள்ளதால், அப் பகுதி விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் குளத்தை நேரில் சென்று பார்வையிட்டார்.

சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுவரும் கச்சாய்க் குளத்தில், இதுவரை இல்லாத வகையில் இந்த ஆண்டு நீர்மட்டம் வெகுவாகக் குறைந்துள்ளதுடன், குளத்தைத் தூர்வாரி ஆழப்படுத்துவதன் மூலம் நீர்க் கொள்ளளவை அதிகரித்து, அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் விவசாய நடவடிக்கைகளைச் சிறப்பாக மேற்கொள்ள முடியும் என விவசாயிகள் சுட்டிக்காட்டினர்.

# தியாக தீபம் திலீபனின் நினைவு வார்த்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் அனுஷ்டிக்கப்பெற்ற நினைவேந்தல்!



மண்ணின் விடுதலைக்காக ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு தனது உயிரைத் தியாகம் செய்த தியாகி திலீபனின் 39வது நினைவு தினத்தை முன்னிட்டு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் உணர்வுபூர்வமான இரத்ததான நிகழ்வு நடைபெற்றது. திலீபனின் தியாகத்தை நினைவுகூரும் வகையிலும், அவரது நினைவை சமூகப் பொறுப்புணர்வுடன் முன்னெடுக்கும் நோக்கிலும் இந்த இரத்ததான நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள், விரிவுரையாளர்கள், பணியாளர்கள் உள்ளிட்ட பலரும் நிகழ்வில் ஆர்வத்துடன் கலந்துகொண்டு இரத்ததானம் செய்தனர். தன்னார்வ அடிப்படையில் இடம்பெற்ற இந்த இரத்ததானம், உயிர்களைக் காப்பதற்கான மனிதநேயப் பணியாகவும், திலீபனின் நினைவை அர்த்தமுள்ள வகையில் நினைவுகூரும் நிகழ்வாகவும் அமைந்தது.

நிகழ்வில் பங்கேற்றவர்கள் திலீபனின் தியாகத்தையும் அவரது ஐந்து அம்சக் கோரிக்கைகளையும் நினைவுகூர்ந்ததுடன், சமூக நலனுக்காக தங்களால் இயன்ற பங்களிப்பை வழங்குவதன் முக்கியத்துவத்தையும் வலியுறுத்தினர். 39வது நினைவு தினத்தை முன்னிட்டு நடைபெற்ற இந்த இரத்ததான நிகழ்வு, நினைவேந்தலையும் மனிதநேயச் செயற்பாட்டையும் ஒருங்கிணைக்கும் நிகழ்வாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இடம்பெற்றது.

# "கண்கெட்ட பின்னர் சூரிய நமஸ்காரம்" செய்யும் மகிந்த — ரணில் அரசுகளில் அமைச்சராக இருந்த டக்ளஸ் தேவானந்தா!

## அறுதிப் பெரும்பான்மையை பயன்படுத்தி மாகாண சபைகளுக்கு பொலிஸ், காணி அதிகாரங்களை வழங்க அரசு நடவடிக்கை எடுக்க அநுர அரசிடம் கோருகிறார்?

நாடாளுமன்றத்தில் தற்போதைய அரசாங்கம் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை கொண்டுள்ள நிலையில், அதனை பயன்படுத்தி மாகாண சபைகளை வலுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

இவ்விடையம் குறித்து அவர் கூறுகையில்: இலங்கையில் உள்ள அனைத்து பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சிகளிடமிருந்தும், மாகாண சபைத் தேர்தல் தொடர்பான சட்டங்களைத் தவிர்த்து, ஏனைய தேர்தல்கள் தொடர்பான சட்டங்களை மீளாய்வு செய்வது குறித்த கருத்துக்களையும் யோசனைகளையும் பெற்றுக்கொள்வதற்கு நாடாளுமன்ற தெரிவுக்குழு தீர்மானித்துள்ளது என்ற விடயத்துடன் கடிதமொன்று எமக்கு அண்மையில் கிடைத்திருந்தது.

இதற்கமைய அதற்கான கருத்துக்களையும், யோசனைகளையும் வழங்குவதற்கு எமது கட்சி தயாராக இருக்கின்ற நிலையில், அதற்கான தயாரிப்புகளை முன்னெடுத்தும் வருகின்றோம்.

ஆனாலும் தற்போதைய சூழலில், மாகாண சபைத் தேர்தலை புறந்தள்ளிவிட்டு, நடந்து முடிந்த தேர்தல்கள் பற்றி பார்ப்பதானது இந்த நேரத்தில் எந்த அளவுக்கு ஆரோக்கியமான விடயமாக இருக்குமோ எனத் தெரியவில்லை.

கடந்த காலங்களிலும் இத்தகைய தெரிவுக் குழுக்கள் பல நியமிக்கப்பட்டு, ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, இறுதியில் அவற்றுக்கு என்ன நடந்தன? என்பது பற்றி இதுவரையில் நல்லவிதமான பெறுபேறுகள் இல்லை.

எனவே, முதலில், 1987ஆம் ஆண்டு ஜூலை மாதம் 29ஆம் திகதி கையெழுத்தாகிய இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் பிரகாரம், அதே ஆண்டு நவம்பர் மாதம் 14ஆம் திகதி இலங்கை நாடாளுமன்றம் தனது அரசியலமைப்பில் 13வது திருத்தம் மற்றும் சட்ட இலக்கம் 42 (1987) ஆகியவற்றால் அறிவிக்கப்பட்டுள்ள மாகாண சபைகளுக்கான தேர்தலை விரைந்து நடத்தவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வது நல்லதென கருதுகின்றோம்.

இலங்கையின் இறைமையையும், தன்னாதிக்கத்தையும், சுதந்திரத்தையும் பாதுகாப்பதற்காகவும், தமிழ் மொழி பேசுகின்ற மக்கள் இலங்கையில் ஏனைய மக்களுடன் ஒன்றாகக் கலந்து வாழ்ந்து வருவதுடன், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பெரும்பான்மையாக வாழ்ந்து வருவதால், வடக்கு, கிழக்கு மாகாணங்கள் அவர்களது பூர்வீக பூமி என்பதாலும் கொண்டுவரப்பட்ட மாகாண சபைகள் முறைமையானது, இன்று 7 வருடங்களாக நிழல் நிர்வாகத்தைக் கொண்டு இயங்கிவருகின்றது.

மக்கள் பிரதிநிதிகளைக் கொண்டு இயங்க வேண்டிய மேற்படி மாகாண சபைகள், தற்போது அந்த செயற்பாட்டினை இழந்துள்ளதால், எமது மக்களுக்கான ஒரேயொரு அரசியல் தீர்வாக தற்போது இருக்கின்ற மாகாண சபையும் இல்லாதுபோய் விட்டதாகவும், இது, எமது மக்களை மீண்டும் ஏமாற்றுகின்ற ஒரு செயற்பாடாகவே இருந்து வருகின்றது எனவும் எமது மக்கள் கருத தலைப்பட்டுள்ளனர்.



மாகாண சபைத் தேர்தலை நடத்தாமல் இருப்பது, ஜனநாயகத்திற்கு முற்றிலும் புறம்பான செயல் என்பது குறிப்பிடத்தக்கதாகும்,

தற்போதைய நிலையில், மாகாண சபைத் தேர்தலை நடாத்துவதற்கு சட்டப் பிரச்சினை இருந்தாலும், புதிய சட்ட வரைபுகளை வாபஸ் பெற்று, அதேநேரம், மகளிர் மற்றும் இளைஞர்களுக்கான ஒதுக்கீடுகளுடன் தேர்தலை பழைய முறையில் நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கலாம். இதற்கு, ஒரு சிறு திருத்தம் மேற்கொண்டால் போதுமானதாகும். இதனை ஆளுந்தரப்பினரே முன்னின்று கொண்டுவரலாம். எதிர்த்தரப்பினரும் மாகாண சபைத் தேர்தலை விரும்புவதால் அதற்கு நாடாளுமன்றத்தில் எதிர்ப்புகள் ஏற்படப்போவதில்லை.

அதன் பின்னர், 1990ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்டுள்ள 1ஆம் இலக்க பொலிஸ் ஆணைக்குழுக்கள் சட்டத்தையும், தற்போதைய அரசுக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை நாடாளுமன்றத்தில் இருப்பதால் காணி அதிகாரத்தையும் உட்படுத்தியவாறு மாகாண சபையை வலுவாக முன்னெடுப்பதற்கான முயற்சிகளை எடுக்க முடியும். அத்துடன் மாகாண சபையை முழுமையாக அமுல்படுத்தி, அதனை ஓர் ஆரம்பமாகக்கொண்டு, இலங்கையில் இனப்பிரச்சினை தொடர்பான தீர்வினை நோக்கி கட்டம் கட்டமாக முன்னேற முடியும்.

ஏனைய தேர்தல்கள் தொடர்பிலான திருத்தங்கள் குறித்தும் நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியும்.

எல்லை நிர்ணயம் தொடர்பில் இப்போது நடவடிக்கைக்கு செல்வது கடினமான காரியமாகும். இதற்கு காலதாமதம் ஆகலாம். பிரச்சினைகள் ஏற்படலாம்.

எனவே, இதனை பின்னர் பார்த்துக்கொள்வதுதான் சிறந்தது என எண்ணுகிறோம். அதற்கான காலத்தை எடுத்துக்கொண்டு, பழைய முறையில் சில திருத்தங்களுடன் மாகாண சபைத் தேர்தலை நடாத்தவதுதான் தற்போது நம்முன்னுள்ள முக்கிய விடயமாகும் என்றும் அவர் சுட்டிக்காட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

சினிமா நியூஸ்

# விஷ்ணு விஷால், மமிதா பைஜூ நடித்துள்ள "இரண்டு வானம்" படம் அக்டோபர் 23ம் தேதி வெளியாகிறது



விஷ்ணு விஷால், மமிதா பைஜூ நடித்துள்ள "இரண்டு வானம்" படம் அக்டோபர் 23ம் தேதி வெளியாகும் என படக்குழு அறிவித்துள்ளது. தமிழ் சினிமாவில் வெண்ணிலா கபடி குழு படத்தின் மூலம் அறிமுகமானவர் விஷ்ணு விஷால். அதைத்தொடர்ந்து இவர், குள்ளநரி கூட்டம், நீர்ப்பறவை, முண்டாசுப்பட்டி, ராட்சசன், கட்டா குஸ்தி, ஆர்யன் என பல படங்களில் நடித்து ரசிகர்கள் மனதில் இடம் பிடித்தார். இவரது நடிப்பில் கடைசியாக கட்டா குஸ்தி 2 படம் வெளியாகி நல்ல வரவேற்பை பெற்றது.

அதனை தொடர்ந்து "முண்டாசுப்பட்டி" மற்றும் "ராட்சசன்" பட இயக்குநர் ராம்குமார் இயக்கத்தில் 3-வது முறையாக விஷ்ணு விஷால் இணைந்து நடித்துள்ளார். இந்த படத்திற்கு "இரண்டு வானம்" என பெயரிடப்பட்டுள்ளது. இதில் தென்னிந்திய திரையுலகில் தொடர்ந்து ஹிட் படங்களை கொடுத்து வரும் இளம் நடிகை மமிதா பைஜூ நாயகியாக நடித்துள்ளார். சத்யஜோதி பிலிம்ஸ் சார்பில், டி.ஜி. தியாகராஜன் தயாரித்துள்ள இப்படத்திற்கு திபு நினன் தாமஸ் இசையமைத்துள்ளார். இந்த படத்தின் படப்பிடிப்பு பணிகள் கொடைக்கானல் போன்ற பகுதிகளில் விறுவிறுப்பாக நடைபெற்று நிறைவடைந்துள்ளது. தற்போது படத்தின் வெளியீட்டிற்கான பின்னணி வேலைகள் நடைபெற்று வருகிறது. இதற்கிடையில் இந்த படத்திலிருந்து "வெள்ளிச்சுடரே" என்ற பாடல் வெளியாகி கவனத்தை பெற்றது.

இந்நிலையில் இப்படம் அக்டோபர் மாதம் 23ம் தேதி வெளியாகும் என படக்குழு அறிவித்துள்ளது.

# "ஏழு கடல் ஏழு மலை" படத்தின் முன்னோட்டம் வெளியானது



ராம் இயக்கத்தில் நிவின் பாலி, சூரி, அஞ்சலி ஆகியோர் நடித்த "ஏழு கடல் ஏழு மலை" திரைப்படத்தின் முன்னோட்டம் வெளியிடப்பட்டுள்ளது. "தங்க மீன்கள்", "பேரன்பு" உள்ளிட்ட படங்களை இயக்கி கவனம் பெற்றவர் இயக்குனர் ராம். இவர், "பிரேமம்" திரைப்படம் மூலம் தமிழ் ரசிகர்களிடையே பிரபலமான நடிகர் நிவின் பாலியை கதாநாயகனாக வைத்து "ஏழு கடல் ஏழு மலை" திரைப்படத்தை இயக்கியுள்ளார்.

இப்படத்தை சுரேஷ் காமாட்சி தனது வி ஹவுஸ் புரொடக்சன்ஸ் நிறுவனம் சார்பில் தயாரித்துள்ளார். அஞ்சலி கதாநாயகியாக நடித்துள்ள இப்படத்தில் சூரி முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளார். யுவன் சங்கர் ராஜா இசையமைத்துள்ள நிலையில், ஏகாம்பரம் ஒளிப்பதிவு செய்துள்ளார். "ஏழு கடல் ஏழு மலை" திரைப்படம் 46-வது மாஸ்கோ சர்வதேச திரைப்பட விழாவில் திரையிடப்பட்டது. இந்த ஆண்டில் மாஸ்கோ திரைப்பட விழாவில் திரையிடப்பட்ட முதல் தமிழ் திரைப்படம் என்ற பெருமையையும் இப்படம் பெற்றது.

மேலும், ரோட்டர்டாம் சர்வதேச திரைப்பட விழாவில் கிடைத்த வரவேற்பைத் தொடர்ந்து, ரொமேனியாவில் நடைபெற்ற ட்ரான்சில்வேனியா சர்வதேச திரைப்பட விழாவிலும் இப்படம் திரையிடத் தேர்வானது. தனித்துவமான காட்சியமைப்பைக் கொண்ட திரைப்படங்களை கொண்டாடும் "நோ லிமிட்" பிரிவில் இப்படம் இடம்பெற்றது. நிவின் பாலி, சூரி இணைந்து நடித்துள்ள "ஏழு கடல் ஏழு மலை" திரைப்படம் அக்டோபர் 1-ம் தேதி திரையரங்குகளில் வெளியாக உள்ளது. இதையடுத்து படத்தின் மீதான எதிர்பார்ப்பு ரசிகர்கள் மத்தியில் அதிகரித்துள்ளது. படம் வெளியாக இன்னும் சில நாட்களே உள்ள நிலையில், "ஏழு கடல் ஏழு மலை" திரைப்படத்தின் முன்னோட்டம் வெளியிடப்பட்டுள்ளது.

# நடிகர் மகேஷ் பாபு நடித்த "வாரணாசி" படத்தின் படப்பிடிப்பு நிறைவுபெற்றது



நடிகர் மகேஷ் பாபு நடித்த "வாரணாசி" திரைப்படத்தின் படப்பிடிப்பு நிறைவுபெற்றது. "பாகுபலி", "ஆர்ஆர்ஆர்" போன்ற உலகத்தரம் வாய்ந்த திரைப்படங்களைக் கொடுத்த இயக்குநர் எஸ்.எஸ். ராஜமவுலி, அடுத்ததாக மகேஷ் பாபுவை வைத்து இயக்கி வரும் இந்த திரைப்படத்திற்கு "வாரணாசி" எனப் பெயரிடப்பட்டுள்ளது. சர்வதேசத் தரத்தில் ஆக்ஷன் அட்வென்ச்சர் பாணியில் இப்படம் உருவாகி வருக்கிறது. ஸ்ரீ துர்கா ஆர்ட்ஸ் மற்றும் ஷோயிங் பிசினஸ் ஆகிய நிறுவனங்கள் இணைந்து படத்தைத் தயாரிக்கின்றன.

சமீபத்தில் வெளியான புகைப்படத்தில் ஆப்பிரிக்காவின் அடர்ந்த காட்டுப் பகுதியில், பின்னணியில் ஒட்டகச்சிவிங்கிகள் நிற்க, மகேஷ் பாபு மிகவும் கம்பீரமான தோற்றத்தில் காட்சியளிக்கிறார். காடுகளுக்குள் சாகசப் பயணம் மேற்கொள்ளும் ஒரு ஆராய்ச்சியாளராக அவர் இப்படத்தில் வலம் வரவுள்ளார் என்பதையும் இந்தத் தோற்றம் உறுதிப்படுத்துகிறது. சுமார் ரூ.1,400 கோடி பிரம்மாண்ட செலவில் உருவாகும் இப்படம், இந்திய திரையுலக வரலாற்றிலேயே மிக அதிக செலவில் தயாரிக்கப்படும் திரைப்படமாகும். கி.பி. 512 முதல் தற்காலம் வரை, திரேதா யுகம் முதல் கலியுகம் வரை எனப் பல காலகட்டங்களை இணைக்கும் ஒரு அறிவியல் புனைகதை மற்றும் ஆன்மீக சாகசப் படமாக இது உருவாகிறது. அண்டவெளியில் இருந்து பூமிக்கு வரும் விண்கல் ஆபத்தும், வாரணாசி படித்துறைகளின் ரகசியங்களும் இதன் மையக்கதை எனத் தெரிகிறது. ஐதராபாத், ஒடிசா, கென்யாவின் ஆப்பிரிக்க காடுகள் மற்றும் அண்டார்டிகாவின் உறைபனிப் பகுதிகள் என உலகம் முழுவதும் இதன் படப்பிடிப்பு நடத்தப்பட்டுள்ளது.

# "டோரதி" உலகளவில் பேசப்படும் ஒரு படமாக இருக்குமென நடிகை கீர்த்தி சுரேஷ் புகழாரம் இளையராஜா ஐயாவின் இசையில் நடிப்பேன் என்று கனவில் கூட நினைக்கவில்லை எனவும் தெரிவிப்பு



"டோரதி" திரைப்படம் உலகளவில் பேசப்படும் ஒரு படமாக இருக்குமென நம்புவதாக நடிகை கீர்த்தி சுரேஷ் கூறினார். கார்த்திக் சுப்புராஜ் இயக்கிய "டோரதி" திரைப்படம் மதுரையைப் பின்னணியாகக் கொண்டு உருவாகியுள்ளது. 1990-களில் நடக்கும் கதையாக உருவான இதில் நட்பு, காதலுடன் அழுத்தமான படமாக உருவாகியுள்ளதாகக் கூறப்படுகிறது. இந்தப் படத்தில் நடிகர்கள் ரிஷிகாந்த், சனந்த், கீர்த்தி சுரேஷ் ஆகியோர் முன்னணி கதாபாத்திரத்தில் நடித்துள்ளனர். இளையராஜா இசையமைத்துள்ளார். ஜியோ ஸ்டுடியோஸ் வழங்கும், சிக்யா என்டர்டெயின்மென்ட் மற்றும் தம்மம் பிலிம்ஸ் இப்படத்தை தயாரித்துள்ளது. இந்தத் திரைப்படத்தின், பிரீ வெளியீடு நிகழ்வு சமீபத்தில் நடைபெற்றது.

விழாவில் பேசிய நடிகை கீர்த்தி சுரேஷ், "டோரதி திரைப்படத்தின் கதையைப் படித்ததும் உடனே ஒத்துக்கொண்டேன். ஏனெனில், இது போன்ற படத்தில் நடிப்பது எனக்குதான் பெருமை. சில நாள்கள் வேலை செய்தாலும் இயக்குநர் கார்த்திக் சுப்புராஜிடமிருந்து நிறைய விஷயங்கள் கற்றுக் கொண்டேன். இளையராஜா சார் இசையில் நடிப்பேன் என்று கனவில் கூட நினைக்கவில்லை. தொழில்நுட்ப கலைஞர்கள் எல்லோருமே சிறப்பாக உழைத்திருக்கிறார்கள்

ரிஷி, சனந்த் இருவருடனும் கொஞ்ச நாள்களே பணிபுரிந்திருந்தாலும் அவர்களுடன் நல்ல நட்புறவு உருவாகியிருக்கிறது. செப்டம்பர் 25 அன்று இப்படம்

வெளியாகிறது. நிச்சயம் உலகளவில் பேசப்படும் ஒரு படமாக இருக்கும் என நம்புகிறேன்" என தெரிவித்துள்ளார்.




# அனைத்துலக தமிழர் பேரவை கனடாவில் ஒக்டோபர் மாதம் நடத்தவுள்ள சர்வதேச தமிழ் ஆராய்ச்சி மாநாட்டுக்குரிய அனைத்து ஏற்பாடுகளும் தயார்!

## பேரவையின் தலைவர் கனடா வாழ் நிமால் விநாயகமூர்த்தி மகிழ்ச்சியுடன் தெரிவிப்பு

அது தொடர்பான ஒரு ஊடகச் சந்திப்பு. 24-09-2026





"செய்யறிவு உலகில் செம்மொழித் தமிழும் தமிழரும்" **(Classical Tamil and Tamils in the Era of Artificial Inteiligence)** என்னும் தொனிப்பொருளில் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 15, 16, 17, 18ம் திகதிகளில்- நான்கு நாட்கள்- கனடாவில் ரொறன்ரோ மாநகரில் நடைபெறவுள்ள மேற்படி சர்வதேச மாநாடு தொடர்பான ஊடகச் சந்திப்பு ஒன்று 24-09-2026 அன்று வியாழக்கிழமை மாலை மார்க்கம் நகரில் **80 Travail Road Unit-1 Markham** என்னும் விலாசத்தில் அமைந்துள்ள கனடிய தமிழர் வர்த்தக சம்மேளனத்தின் கூட்ட மண்டபத்தில் நடைபெற்றது. சந்திப்பிற்கான பிரதான மேசையில் நிமால் விநாயகமூர்த்தி உட்பட பேராசிரியர் நா. சுப்பிரமணியன் அவர்கள் மற்றும் பேராசிரியர் .. பாலசுந்தரம் ஆகியோர் அமர்ந்திருந்தனர். ராகவன் பரஞ்சோதி அவர்கள் சந்திப்பை தொகுத்து வழங்கினார்ட. அத்தடன் அனைத்துலக தமிழர் பேரவையின் அமைப்பாளர்களில் ஒருவரான கென் கிருபா அவர்களும் அங்கு உரையாற்றினார.

தனது தலைமையுரையை ஆரம்பிக்கும் போதே நிமால் விநாயகமூர்த்தி அவர்கள்



நம்பிக்கை ரேகைகள் முகத்தில் படர்ந்திருக்கும் புன்னகையோடு கடந்த ஏப்ரல் மாதம் தொடக்கம் இந்த மாநாட்டு ஏற்பாடுகளுக்கு சிரத்தையோடு ஆதரவை வழங்கிவரும் பல தரப்பட்ட ஊடகங்களுக்கு நன்றி கூறி மற்றும் மாநாட்டு ஏற்பாட்டுக் குழுவில் கடந்த நான்கு மாதங்களாக அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வரும் 50க்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் மற்றும் தொண்டர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவித்தார்.

அத்துடன் அனைத்துலக தமிழர் பேரவை கனடாவில் ஒக்டோபர் மாதத்தின் நான்கு நாட்களாகிய 15, 16, 17, 18ம் திகதிகளில்- -நடத்தவுள்ள சர்வதேச தமிழ் ஆராய்ச்சி மாநாட்டுக்குரிய அனைத்து ஏற்பாடுகளும் தயார் எனவும் அறிவு சார்ந்த ஒரு நான்கு நாள் மாநாட்டை நடத்துவதில் உள்ள சிரமங்களையும் சவால்களையும் எமது கனடிய தமிழ்ச் சமூகமும் புலம் பெயர் தமிழ்ச் ச மூகமும் நன்கு உணர்ந்து தங்கள் ஆதரவைத் தரவேண்டும் என்றும் அன்போடு வேண்டிக் கொண்டார். அத்தடன் மிகுந்த பொருட் செலவில் நடைபெறும் இந்த மாநாட்டுக்கு நிதி அன்பளிப்புக்கள் மற்றும் பிரதான அனுசரணையாளர்களாக கரங்களைக் கோர்த்துள்ள புரவலர்கள் மற்றும் வர்த்தகப் பெருமக்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து பேராசிரியர் நா. சுப்பிரமணியன் அவர்கள் மற்றும் பேராசிர-ியர் பாலசுந்தரம் ஆகியோர்

தங்கள் உரைகளின் போது மாநாட்டுக்காக தங்களால் கேட்டுக்கொள்ளப்பட்ட எண்ணிக்கையிலும் பார்க்க அதிகளவு கட்டுரைகள் கிட்டியுள்ளதால் அவற்றிலிருந்து பொருத்தமான கட்டுரைகளை தேர்ந்தெடுத்தல் என்ற பணி தங்கள் குழுவில் உள்ள அனைவருக்கும் மிகுந்த சவால்கள் நிறைந்ததாக இருந்தது என்றும் தெரிவித்தார்கள்.

எனினும் ஒக்டோபர் மாதம் நடைபெறவுள்ள எமது மாநாடு உலகளவில் பேசப்படும் ஒன்றாகவும் அத்துடன் செம்மொழியாம் எம் தமிழ் மொழிக்கும் தமிழ்ச் சமூகத்திற்கும் அதிக பயன் தரும் ஒன்றாக அமையும் என்று நம்பிக்கையையும் முன் வைத்தனர். மேற்படி ஊடகச் சந்திப்பில் அச்சு ஊடகம்-தொலைக் காட்சி- வானொலி- சமூக ஊடகங்கள்- இணையவழி ஊடகங்கள்- கட்டுரையாளர்கள் என அனைத்து தரப்பினரும் கலந்து சிறப்பித்து தங்கள் கருத்துக்களையும் பகிர்ந்து கொண்டனர்







புரட்டாசி
சனி
19 செப்டம்பர், 2026
பக்தியோடு பாரம்பரிய சைவ சுவையையும்
கொண்டாடுவோம்.
HSB
SARAVANAA BHAVAN®
WORLD'S NO.1 INDIAN VEGETARIAN RESTAURANT CHAIN
SCARBOROUGH 416 293 7755
MISSISSAUGA 905 290 0769
BRAMPTON 905 457 7575
DELTA B.C 778 578 7575


METROPOLITAN CENTRE
KENNEDY & FINCH
3840 FINCH AVE E, SCARBOROUGH, ON M1T 3T4
OCT 3, 2026 | SATURDAY @ 6 PM
Title Sponsor
Vijaya Jewellery
TICKET AVAILABLE HERE
Scarborough
Cell Tell Mobility
2611 Eglinton Ave East
416-266-6818
Sun City Supermarket
2761 Markham Rd
(416) 724-6666
Gunaams Supermarket
145 Morningside Ave Unit 33
(416) 283-9998
Cell Tell Mobility
Birchmount Road / Finch
2950 Birchmount Rd Unit# 5C
(416) 495-7776
Kennedy & Ellesmere
Samy & Sons
416-298-1598
Ruby & Ruby Saree Palace Inc.
2843 Lawrence Ave Est
416-264-7833
Markham & Steeles
New Ranganas Jewellery
6055 Steeles Ave E Unit C102
(647) 947-2864
Vijaya Jewellery
3341 Markham Rd #127,
(437) 833-3197
NEW ROYAL FASHIONS
6055 Steeles Ave E
(416) 519-1119
Sprin Florist Canada
3011 Markham Rd
416-893-2624
Majestic City
Designs 2 Prints LTD
Tel: 647-858-2290
GTA Square Mall
Winners Lotto Centre
Tel: 416-291-9990
Eraa plaza (Neilson / Finch)
Sai Elanthulir Fashion
Jewellery & Money Transfer
Tel: 416-471-1002
Tapscott Rd / Finch ave
MS Convenience
416-332-0961
5633 Finch Ave E units 5
Middlefield Rd & Steeles Ave
Pasumai Market
2-2002 Middlefield Rd, Markham,
(905) 472-5525
Etobicoke (Kipling & Steeles)
A S A Financial Service
(in Uthayas Supermarket)
Tel:416-742-1425
AJAX (Harwood & Taunton Rd)
New Spiceland Restaurant
905-426-4445
Santhosh Subramanian
Playback Singer
Mukesh
Playback Singer
Varsha S krishnan
Zee Tamil Title Winner
Magisha
Super Singer
Venkat
Tabla
Manikandan
Keybordist
Old is gold
நெஞ்சம் மறப்பதில்லை
Thalalaya Live Band
SCAN NOW
GET 20% OFF YOUR TICKET!
Amazing Electric Motors Ltd.
Kenney Nithiy
Service Center Manager
VIBRANT HOSPITALITY GROUP
STANDARD MORTGAGES INC.
RAJ SUBRAYAM
CEO
416-993-2638
SHIVAS CHICKEN
WHOLE SALE CANADA INC
416-910-3244
186 Bartley Dr. #12A, Toronto, ON
TICKETS $30 | $50 AND VIP
More Info 416-564-9642 | 416-566-0790
H & ME
YOUR NEXT MOVE STARTS HERE
SIVA NAGAMANY 647-289-0091
KT GROUP
BEHIND ME MEDIA
Guna Selliah
Insurance Broker
416.317.6500
நியூ ரங்கனாஸ்
தங்கச்சுரங்கம்
Cash for Gold
Pawning & Money Transfer
New Ranganas Jewellery
North Toronto CREMATORIUM
Royal Fashions
Ocean Accounting Tax Consultants
Accounting Services for Personal and Small Business
Spring Florist
For All Moments of Life
416-893-2624 647 218 6222
TSA MEAT STORE
437-886-2597
647-328-8880
Canadian Tamils' Business Directory
TAMILS' GUIDE
Athavan Publications Inc.
Tel: 416.615.4846
info@tamilsguide.com
771 Brimley Road,
Scarborough, ON, Canada, M1J 1C7
Senthi Chelliah
President & CEO
www.tamilsguide.com
Our Services
Oasis
ONLINE: 416-623-8110
YUGAM RADIO
Ravi: 416- 898-7284
Ruby: 416-670-6522
JRB
R.R.Rajkumar
647-289-6164


Ontario - வில் அரசு அங்கீகாரம் பெற்ற
KANAGAAMBIKAI
Pawn Brokers
32
வருட சேவைகள்
கனகாம்பிகை
உங்கள் பணத்தேவைகளுக்கு குறைந்த வட்டி
வீதத்தில் தங்க நகை அடகு!
நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம், திறமையுடன் கூடிய
ஒரே கூரையின் கீழ்
உங்கள் தங்கத்திற்கு பணம் வாங்க கணகம்பிகைக்கு வாங்க...
PAWNBANK INC.™
Your Satisfaction is Our Success
(Brimley & Eglinton)
2613, Eglinton Ave East,
Scarborough, ON M1K 2S2
416 269 7198
(Finch & MCCowan)
1571 Sandhurst Circle
Woodside Square Mall #159D,
Scarborough - M1V1V2
416 754 7198

உலக செய்திகள்
World News

# மதுராந்தகம், தாராபுரம் இடைத் தேர்தலில் தமிழக வெற்றி கழகத்திற்கு ஜி.கே.வாசன் ஆதரவு வழங்குவார் என அறிவிப்பு



மதுராந்தகம், தாராபுரம் இடைத்தேர்தலில் தமிழக வெற்றி கழக கூட்டணிக்கு தமிழ் மாநில காங்கிரஸ் ஆதரவு வழங்குமென ஜி.கே. வாசன் கூறியுள்ளார். இது தொடர்பாக ஜி.கே. வாசன் வெளியிட்ட அறிக்கையில், தமிழ்நாட்டில் நடந்து முடிந்த சட்டசபை தேர்தலில் மக்கள் நல்ல மாற்றத்தை ஏற்படுத்தி தந்திருக்கிறார்கள்.

காமராஜர், மூப்பனாரின் எண்ணங்களுக்கு ஏற்ப வளமான தமிழகத்தை உருவாக்க முடியும் என நம்புகிறேன். 60 நாண்டுகளுக்கு பிறகு அனைத்து துறைகளிலும் ஊழலுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் அரசாக தமிழக வெற்றி கழக ஆட்சி உள்ளது. மதுராந்தகம், தாராபுரம் இடைத்தேர்தலில் தமிழக வெற்றி கழகத்திற்கு தமிழ் மாநில காங்கிரஸ் ஆதரவு வழங்கும் என அதில் கூறியுள்ளார்.



# சென்னை, கடலூர், மதுரை உள்ளிட்ட 5 மாவட்டங்களில் புதிய குடியிருப்புகள் கட்டப்படுமென அமைச்சர் ராஜ்குமார் தெரிவிப்பு

சென்னை, கடலூர், மதுரை உள்ளிட்ட 5 மாவட்டங்களில் புதிய குடியிருப்புகள் கட்டப்படுமென அமைச்சர் ராஜ்குமார் கூறினார். வீட்டுவசதி வாரியத்தால், சுயநிதி திட்டத்தின் கீழ், மாநிலத்தின் பல்வேறு முக்கிய பகுதிகளில் புதிய குடியிருப்பு திட்டங்கள் மேற்கொள்ளப்பட உள்ளன.

இது தொடர்பாக வெளியாகியுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது: தமிழ்நாடு முதல்-அமைச்சரின் நல்வழிகாட்டுதலின்படி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் ராஜ்குமார், பொதுமக்கள் பயன்பெறும் வகையில், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால், சுயநிதி திட்டத்தின் கீழ், மாநிலத்தின் பல்வேறு முக்கிய பகுதிகளில் புதிய குடியிருப்பு திட்டங்கள் மேற்கொள்ளப்பட உள்ளன என்று 2026-2027 ஆம் ஆண்டு கடந்த சட்டமன்ற மானியக் கோரிக்கை கூட்டத் தொடரின் போது அறிவிப்பு வெளியிடப்பட்டது.

மேற்கண்ட அறிவிப்பைத் தொடர்ந்து, சென்னை மாவட்டம் - அண்ணா நகர், புரசைவாக்கம், நந்தனம் மற்றும் எர்ணாவூர், கடலூர் மாவட்டம் - குண்டுசாலை, மதுரை மாவட்டத்தில் எல்லீஸ் நகர், திருவள்ளூர் மாவட்டம் - திருமழிசை மற்றும் கன்னியாகுமரி மாவட்டம் - வல்லன்குமாரவில்லை ஆகிய இடங்களில் பொதுமக்களின் தேவைக்கேற்ப குடியிருப்புகள் கட்டப்படும். மேலும், இத்திட்டங்களை திட்டமிடும் முன், பொதுமக்களின் கேட்பினை அறிந்து, அவர்களின் தேவைக்கேற்ப குடியிருப்புகள் அமைப்பதற்காக, தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் தனது அதிகாரப்பூர்வ இணையதளத்தில் இயங்குதளத்தை உருவாக்கியுள்ளது. எனவே, மேற்கண்ட பகுதிகளில் குடியிருப்புகள் பெற ஆர்வமுள்ள பொதுமக்கள் அனைவரும் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் இணையதளத்தை அணுகி, தங்களின் கேட்பினை விரைவாக பதிவு செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

# சபரிமலை கோவில் தங்க கிரீடம் பாதுகாப்பாக உள்ளதென ஆணையர் தெரிவிப்பு!



சபரிமலை கோவிலின் தங்க கிரீடம் பாதுகாப்பாக உள்ளதாக திருவாபரண ஆணையர் ரெஜிலால் விளக்கம் அளித்தார். சபரிமலை கோவிலில் பாதுகாக்கப்பட்ட அறையில் வைத்திருந்த தமிழ்நாட்டைச் சேர்ந்த பக்தர்களால் நன்கொடையாக வழங்கப்பட்ட அரை கிலோ எடையிலான தங்க கிரீடம் மாயமாகி உள்ளது. கேரளம் மாநிலத்தில் உள்ள சபரிமலை அய்யப்பன் கோவில் உலக பிரசித்தி பெற்றது.

இந்த கோவிலுக்கு வெளிமாநிலம் மட்டுமின்றி வெளிநாடுகளில் இருந்து பக்தர்கள் வருகை தருவது வழக்கம். மேலும், தங்களுடைய வேண்டுதல்கள் நிறைவேறினால் காணிக்கை செலுத்துவதும் வழக்கமாக உள்ளது. இந்தநிலையில், சபரிமலை அய்யப்பன் கோவிலின் பாதுகாப்பு அறையில் வைக்கப்பட்டிருந்த 55.72 (445.76 கிராம்) சவரன் எடை கொண்ட தங்கக் கிரீடம் ஒன்று மாயமாகி விட்டதாகவும், தமிழக பக்கதர்களால் நன்கொடையாக வழங்கப்பட்ட தங்கக் கிரீடத்தை எடுத்து விட்டு, அதேபோன்ற போலி கிரீடம் வைக்கப்பட்டதாகவும் கூறப்பட்டது.

இந்தநிலையில், கோவிலின் தங்க கிரீடம் பாதுகாப்பாக உள்ளதாக திருவாபரண ஆணையர் ரெஜிலால் விளக்கம் அளித்துள்ளார். பாதுகாப்பு அறையில் வைத்திருந்த அரைக்கிலோ எடையிலான தங்க கிரீடம் மாயமானதாக வெளியான தகவலுக்கு திருவாபரண ஆணையர் மறுப்பு தெரிவித்துள்ளார். பாதுகாப்பு அறையில் வைத்திருந்த அசல் தங்க கிரீடம் பாதுகாப்பாக உள்ளது. சரிபார்ப்பின் போது குழப்பம் ஏற்பட்டிருக்கலாம் திருவாபரண ஆணையர் விளக்கம் அளித்துள்ளார்.




# ஞானேஷ் குமாரை கைது செய்து தேசத் துரோக வழக்கின் கீழ் விசாரிக்க வேண்டுமென அரவிந்த் கெஜ்ரிவால் வலியுறுத்தியுள்ளார்

தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமாரை உடனடியாகக் கைது செய்து, தேசத் துரோக வழக்கின்கீழ் விசாரிக்கப்பட வேண்டும் என்று டில்லி முன்னாள் முதல்-அமைச்சரும், ஆம் ஆத்மி கட்சி தலைவருமான அரவிந்த் கெஜ்ரிவால் வலியுறுத்தியுள்ளார்.

நாடு முழுவதும் மேற்கொள்ளப்படும் எஸ்.ஐ.ஆர். பணிகள் தொடர்பாக தேர்தல் ஆணையர்கள் சுக்பீர் சிங் சந்து மற்றும் விவேக் ஜோஷி ஆகியோர் கடந்த 10 மாதங்களில் குறைந்தது 14 முறை சில முடிவுகள் மற்றும் உத்தரவுகளுக்கு ஆட்சேபனை தெரிவித்ததாக தனியார் நாளிதழ் ஒன்றில் செய்திகள் வெளியாகியிருந்தன. வாக்காளர் பட்டியலில் இருந்து பெயர்களை நீக்குவது, வாக்காளர் தரவுத்தளத்தை கையாள்வது உள்ளிட்ட விவகாரங்களில் அவர்கள் கேள்வி எழுப்பியதாகவும் அந்த செய்தியில் தெரிவிக்கப்பட்டது. இந்த விவகாரம் அரசியல் வட்டாரத்திலும் புயலை கிளப்பி உள்ளது.

தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் தன்னிச்சையாக செயல்பட்டதாக செய்திகள் வெளியானநிலையில், இதற்கு ராகுல் காந்தி உள்ளிட்ட எதிர்க்கட்சித் தலைவர்கள் கடுமையான விமர்சனத்தை முன்வைத்து வருகின்றனர். இந்நிலையில் டில்லி முன்னாள் முதல்-அமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால் செய்தியாளர்கள் சந்திப்பில் பேசியதாவது: பிரதமர் மோடியும் அமித்ஷாவும் வாக்குகளை திருடி தேர்தலில் வெற்றி பெறுகிறார்கள் என்று இதுவரை கேள்விப்பட்டோம். இன்று வந்துள்ள செய்திகள் அதனை நிரூபித்துள்ளன. இதற்கு மூளையாக செயல்படுபவர் ஞானேஷ் குமார்தான். தேர்தல் ஆணையத்தை சர்வாதிகாரி போல் ஞானேஷ் குமார் நடத்துகிறார். தனது சக தேர்தல் ஆணையர்களான சுக்பீர் சிங் சந்து மற்றும் விவேக் ஜோஷி ஆகியோரை புறக்கணித்துவிட்டு, தன்னிச்சையாக அதிகாரிகளுக்கு உத்தரவுகளை பிறப்பிக்கிறார். தலைமை தேர்தல் ஆணையர் மீது தேசத் துரோக வழக்குப் பதிவு செய்து கைது செய்ய வேண்டும். டில்லி, பீகார், மேற்கு வங்காளம் உள்ளிட்ட மாநிலங்களில் சமீபத்தில் நடந்த சட்டமன்ற தேர்தல்களை ரத்து செய்து மறு வாக்குப்பதிவு நடத்த வேண்டும். தேர்தல் ஆணையத்தின் ஒப்புதல் இல்லாமலே உத்தரவுகள் பிறப்பிக்கப்படுவதாக கூறி, மற்ற இரண்டு தேர்தல் ஆணையர்களும் தலைமைத் தேர்தல் ஆணையருக்கு தொடர்ந்து கடிதங்களை எழுதியுள்ளனர். தேர்தல் ஆணையத்தின் ஒப்புதல் இல்லாமல் பிறப்பிக்கப்படும் அனைத்து உத்தரவுகளும் சட்டவிரோதமானவை. ஒட்டுமொத்த எஸ்ஐஆர் செயல்முறையும் சட்டவிரோதமானது.

எனவே, அந்த எஸ்ஐஆர் செயல்முறை முழுவதையும் உடனடியாக ரத்து செய்ய வேண்டும் என்று நாங்கள் வலியுறுத்துகிறோம். குறிப்பிட்ட பகுதிக்கான தேர்தல் பதிவு அதிகாரிக்கு மட்டுமே வாக்காளர் பட்டியலில் பெயர்களைச் சேர்க்கவோ அல்லது நீக்கவோ அதிகாரம் உள்ளது. தேர்தல் பதிவு அதிகாரியின் இணையதள அணுகல் கட்டுப்படுத்தப்பட்டுள்ளதாகவும், இதன் மூலம் அவரது அதிகாரம் பறிக்கப்பட்டுள்ளதாகவும் இரு தேர்தல் ஆணையர்களும் குற்றம் சாட்டியுள்ளனர். டில்லியில் அமர்ந்திருக்கும் சிலருக்கு நாடு முழுவதுக்குமான வாக்காளர் பட்டியலை அணுகும் வசதி உள்ளது. அவர்கள் விரும்பும் நபர்களின் பெயர்களைப் பட்டியலில் சேர்க்கவோ அல்லது நீக்கவோ அவர்களால் முடியும். கடந்த மூன்றாண்டுகளில் வாக்காளர் பட்டியலில் செய்யப்பட்ட அனைத்து மாற்றங்களையும் ரத்து செய்துவிட்டு, மூன்றாண்டுகளுக்கு முந்தைய வாக்காளர் பட்டியலை மீண்டும் நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதே எங்கள் கோரிக்கையாகும். இவ்வாறு அவர் கூறினார்.




# அமெரிக்கா, கிரீன்லாந்து, டென்மார்க் இடையே முத்தரப்பு பாதுகாப்பு ஒப்பந்தம் கையெழுத்தானது

அமெரிக்கா, கிரீன்லாந்து, டென்மார்க் இடையே முத்தரப்பு பாதுகாப்பு ஒப்பந்தம் கையெழுத்தானது. உலகின் மிகப்பெரிய தீவான கிரீன்லாந்தை அமெரிக்காவுடன் இணைக்கப்போவதாக டிரம்ப் தொடர்ந்து மிரட்டல் விடுத்து வந்ததால், சர்வதேச அளவில் பெரும் சர்ச்சை நிலவி வந்தது. நேட்டோ அமைப்பில் நட்பு நாடாக இருக்கும் டென்மார்க்குக்கு சொந்தமான இந்த தீவை அமெரிக்கா ஆக்கிரமித்துவிடுமோ என்ற அச்சமும் நீடித்தது.

இந்நிலையில் நியூயார்க்கில் நடைபெற்ற ஐ.நா. கூட்டத்தொடரின் ஒரு பகுதியாக, அமெரிக்கா, டென்மார்க் மற்றும் கிரீன்லாந்து ஆகிய நாடுகள் இடையே வரலாற்று சிறப்புமிக்க முத்தரப்பு பாதுகாப்பு ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது. இந்த ஒப்பந்தத்தில் அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப், டென்மார்க் பிரதமர் மெட்டே பிரட்ரிக்சன் மற்றும் கிரீன்லாந்து பிரதமர் ஜென்ஸ்-பிரட்ரிக் நீல்சன் ஆகியோர் கையெழுத்திட்டனர். இந்த ஒப்பந்தத்தின்படி, கிரீன்லாந்தில் அமெரிக்கா தனது ராணுவ தளங்களை விரிவுபடுத்தவும், நவீனப்படுத்தவும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.




# அநுர அரசின் ஆயுதமாகும் "இரு கோட்டுத் தத்துவம்"

***"22 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தினால் எதிர்க்கட்சிகள், மக்களிடம் எழுந்த எதிர்ப்பலைகளை திசைதிருப்ப நாமல் ராஜபக்ச கைது என்ற இன்னொரு பெரிய கோட்டை வரைந்த அநுரகுமார அரசாங்கம் 22 ஆவது திருத்தத்தையும் நாமல் கைதினையும் மக்களை மறக்க வைக்க தற்போது உயிர்த்த ஞாயிறு தற்கொலைக்குண்டுத் தாக்குதல் குற்றவாளிகள் 15 பேருக்கு "200 – 260 வருட சிறை" என்ற இன்னொரு பெரிய கோட்டை வரைந்து அதனை மேலெழ வைத்துள்ளது. அத்துடன், அரச ஊழியர்களின் சம்பள உயர்வுக் கோரிக்கைகள் மற்றும் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான முன்னைய அறிக்கைகளின் தகவல்கள் வெளியாகி அரசாங்கத்திற்கு அரசியல்நெருக்கடிகளை உருவாக்கியபோது, அரசாங்கம் கேள்விகளுக்குப் பதிலளிக்க முயலவில்லை. மாறாக, "புதிய விசாரணைக் குழுக்கள்" அமைப்பதாக அறிவித்து நேரத்தைக் கடத்தும் உத்தியைக் கையாண்டது. ஒரு பிரச்சினைக்கு உடனடியாகப் பதில் சொல்ல வேண்டிய கடப்பாட்டைத் தள்ளிவைத்துவிட்டு, "புதிய விசாரணை" என்ற புதிய நம்பிக்கைக் கோட்டை வரைந்து பழைய கேள்விகளைச் சட்டென்று காலாவதியாக்கியது."***

– கே.பாலா –

"மக்களின் நினைவாற்றல் மிகக் குறுகியது" என்பது அரசியல் சாணக்கியர்கள் நன்கு அறிந்த உண்மை. அந்த பலவீனத்தைச் சாதகமாக்கிக் கொண்டு, நிலவும் பிரச்சினைகளில் இருந்து மக்களின் கவனத்தை திசை திருப்புவது தற்கால அரசியலின் தவிர்க்க முடியாத உத்தியாக மாறியுள்ளது. "மாற்றம்" என்ற மாபெரும் நம்பிக்கையை மக்களுக்கு கொடுத்து ஆட்சியைப் பிடித்த அநுரகுமார திசாநாயக்க அரசாங்கம், தற்போது சந்தித்து வரும் சவால்களை மறைக்க. மக்களின் கவனத்தை திசை திருப்ப "இரு கோட்டுத் தத்துவம்" என்ற ஆயுதத்தை கையில் எடுத்துள்ளது.

ஒரு பெரிய கோட்டைச் சிறியதாக்குவதற்கு, அதை அழிக்க வேண்டிய அவசியமில்லை. அதற்குப் பக்கத்திலேயே அதைவிடப் பெரியதாக இன்னுமொரு கோட்டை வரைந்தால் போதும். அதாவது நெருக்கடி கொடுக்கும் ஒரு பெரிய பிரச்சினையை சிறியதாக்குவதற்கு அதனை விட ஒரு பெரிய பிரச்சினையை உருவாக்க வேண்டும். இது அரசியலின் இராஜதந்திரம். இதுதான் அரசியல் களத்தில் தொன்றுதொட்டுப் பயன்படுத்தப்படும் "இரு கோட்டுத் தத்துவம்". இன்று இலங்கையின் அரசியல் அரங்கில், அநுரகுமார திசாநாயக்க தலைமையிலான அரசாங்கம் இந்த இருகோட்டு தத்துவத்தை மிகச் கச்சிதமாகக் கையில் எடுத்துள்ளது.

நாட்டில் எழும் அரசியல், பொருளாதார நெருக்கடிகள், வாக்குறுதி மீறல்கள் அல்லது நிர்வாகச் சிக்கல்கள் போன்ற பிரச்சினைகள் மக்கள் மன்றத்தில் விவாதத்திற்கு வரும்போதெல்லாம், விமர்சனங்களுக்கு உள்ளாகும்போதெல்லாம், எதிர்ப்புக்கள் வெளிக்கிளம்பும் போதெல்லாம் திட்டமிட்டு வேறொரு பரபரப்பான விவகாரம் மக்கள் முன் தள்ளப்படுகிறது. மக்கள் ஒரு பிரச்சினையின் சுமையை உணர்வதற்குள், அதைவிடப் பெரியதொரு சர்ச்சையைச் சுட்டிக்காட்டி முந்தையதை மறக்கடிக்கும் இந்த அரசியல் காய்நகர்த்தலே தற்போதைய அநுரகுமார அரசாங்கத்தில் முன்னெடுக்கப்படுகின்றது.

அநுரகுமார அரசாங்கம் தனது வீழ்ச்சிகளையும், நடைமுறைச் சிக்கல்களையும் மக்கள் கேள்வி கேட்கும் ஒவ்வொரு கணமும், புதியதொரு சர்ச்சையை அல்லது எதிரத்தரப்பின் குற்றச்சாட்டைக் கிளப்பிவிட்டு மக்களின் கவனத்தை இலாவகமாகத் திசைதிருப்பி வரும் இரு கோட்டு தத்துவம் அநுரகுமார அரசின் அமைச்சரவை அமைக்கப்பட்ட குறுகிய காலத்திலேயே அரிசி, தேங்காய் போன்ற அத்தியாவசியப் பொருட்களின் கடும் விலையேற்றமும் பற்றாக்குறையும் மக்கள் மத்தியில் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியது முதல் தற்போதைய உயிர்த்த ஞாயிறு தற்கொலைக் குண்டுத்தாக்குதல் தீர்ப்பு வரை தொடர்கின்றது.

அநுரகுமார அரசின் அமைச்சரவை அமைக்கப்பட்ட குறுகிய காலத்திலேயே அரிசி, தேங்காய் போன்ற அத்தியாவசியப் பொருட்களின் கடும் விலையேற்றமும் பற்றாக்குறையும் மக்கள் மத்தியில் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தின. சாதாரண மக்களின் பசி மற்றும் ஜீவனோபாயச் சிக்கல் என்ற இந்த "முதலாவது கோடு" அரசாங்கத்திற்குப் பெரிய நெருக்கடியைக் கொடுத்தது. ஆனால், இந்த மக்களின் வாழ்வாதாரப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்குப் பதிலாக, முந்தைய ஆட்சியாளர்களின் ஊழல் கோப்புகள் அவசர அவசரமாகத் தூசி தட்டப்பட்டன. முன்னாள் அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளின் விசாரணைகள் ஊடகங்களில் தலைப்புச் செய்திகளாக்கப்பட்டன. "மக்களின் பசி" என்ற சிறிய கோட்டை மறைக்க, "பழைய ஆட்சியாளர்களைத் தண்டித்தல்" என்ற உணர்ச்சிப்பூர்வமான பெரிய கோடு வரையப்பட்டு, மக்களின் கவனம் லாவகமாகத் திசைதிருப்பப்பட்டது.

தேர்தல் பிரசார மேடைகளில் "வற் வரியைக் குறைப்போம்", "சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளை மறுபரிசீலனை செய்வோம்" என்று உறுதியளித்த அரசாங்கம், ஆட்சியில் அமர்ந்த பின்னர் அந்த நிபந்தனைகளுக்குத் தலைவணங்க வேண்டிய சூழல் உருவானது. வரிச்சுமையால் மக்கள் திணறத் தொடங்கியபோது, அரசாங்கம் "எளிமை அரசியல்" எனும் அடுத்த பெரிய கோட்டை கீறியது. முன்னைய அரசுகளின் சொகுசு வாகனங்களை வீதிகளில் வரிசையாகக் காட்சிப்படுத்தி ஏலம் விட்டதும், ஜனாதிபதி செயலகத்தின் ஆடம்பரப் பயன்பாடுகளைக் குறைப்பதாகச் செய்திகளைப் பரப்பியதும் இதன் ஒரு அங்கமே. மக்களின் பொக்கெட்டுகளைப் பிழியும் "வரிச்சுமை" என்ற நெருக்கடியை மறைக்க, "சொகுசு வாகனப் பறிமுதல்" எனும் தற்காலிக பெரிய கோடு வரையப்பட்டது.

அரச ஊழியர்களின் சம்பள உயர்வுக் கோரிக்கைகள் மற்றும் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான முன்னைய அறிக்கைகளின் தகவல்கள் வெளியாகி அரசாங்கத்திற்கு அரசியல்நெருக்கடிகளை உருவாக்கியபோது, அரசாங்கம் கேள்விகளுக்குப் பதிலளிக்க முயலவில்லை. மாறாக, "புதிய விசாரணைக் குழுக்கள்" அமைப்பதாக அறிவித்து நேரத்தைக் கடத்தும் உத்தியைக் கையாண்டது. ஒரு பிரச்சினைக்கு உடனடியாகப் பதில் சொல்ல வேண்டிய கடப்பாட்டைத் தள்ளிவைத்துவிட்டு, "புதிய விசாரணை" என்ற புதிய நம்பிக்கைக் கோட்டை வரைந்து பழைய கேள்விகளைச் சட்டென்று காலாவதியாக்கியது.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குற்றப் புலனாய்வுத் துறையினரால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு கைது செய்யப்பட்ட சம்பவம், அரசாங்கம் "இரு கோட்டுத் தத்துவத்தை" எந்தளவிற்குத் தீவிரமாகப் பயன்படுதி வருகிறது என்பதை வெளிச்சம் போட்டுக் காட்டியது. 2023ஆம் ஆண்டு ஜனாதிபதியாக இருந்தபோது, லண்டனில் நடைபெற்ற தனது மனைவியின் பட்டமளிப்பு விழாவில் கலந்துகொள்ள அரச நிதியான சுமார் 16.9 மில்லியன் ரூபாவைத் தவறாகப் பயன்படுத்தினார் என்ற குற்றச்சாட்டின் பெயரில் இக்கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இலங்கை வரலாற்றிலேயே முன்னாள் ஜனாதிபதி ஒருவர் கைது செய்யப்படுவது இதுவே முதன்முறை என்ற வகையில், இது அரசியல் களத்தில் பெரும் அதிர்வலையை உருவாக்கியது.

எனினும், இக்கைது நடவடிக்கையின் பின்னணியிலும் ஒரு தெளிவான திசைதிருப்பல் அரசியல் ஒளிந்திருந்தது. சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளால் எழுந்த பொருளாதாரக் கட்டுப்பாடுகள், வேலைநிறுத்தப் போராட்டங்கள் மற்றும் விலைவாசி உயர்வால் மக்களிடையே உருவாகிய அதிருப்தி அலையை மறைக்க அரசாங்கத்திற்கு ஒரு "பெரும் அரசியல் பரபரப்பு" தேவையாக இருந்தது. அதுதான் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அதிரடிக்கைது.

அநுரகுமார அரசாங்கம் எதிர் பார்த்துபோலவே நாட்டின் மிக மூத்த அரசியல் தலைவரான ரணில் விக்கிரமசிங்கவின் கைது, ஊடகங்கள் மற்றும் மக்களின் முழுக் கவனத்தையும் ஒரே நாளில் திசை திருப்பியது. "நாங்கள் சட்டத்தை அனைவருக்கும் சமமாக நடைமுறைப்படுத்துகிறோம்" என்ற பிரம்மாண்டமான பிம்பத்தை உருவாக்கி, தங்களின் தற்போதைய ஆட்சி நிர்வாகத் தோல்விகளையும், பொருளாதாரச் சிரமங்களையும் மக்களின் நினைவிலிருந்து தற்காலிகமாக அகற்ற அநுர அரசாங்கம் கையாண்ட மிக பெரிய "இரு கோட்டு" அரசியல் தந்திரமாக ரணிலின் கைது இருந்தது.

தற்போதைய முன்னாள் ஜனாதிபதியின் மகனும் முன்னாள் அமைச்சரும் தற்போதைய எம்.பி.யுமான பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்சவின் கைதும் "இரு கோட்டுதத்துவ" அரசியல் காய்நகர்த்தலும் அரசாங்கத்தின் இந்த "இரு கோட்டுத் தத்துவத்திற்கு" மிக சமீபத்திய சான்றாக உள்ளது. அரசாங்கத்தின் 22 ஆவது அரசியலமைப்பு திருத்தத்திற்கு எதிராக ஒன்று திரண்ட எதிர்க்கட்சிகளையும் பகிரங்கமாக வெளிப்பட்ட மக்களின் எதிர்ப்புகளையும் ஊடகங்களின் விமர்சனங்களையும் ஏற்பாடு செய்யப்பட்ட ஆர்ப்பாட்டங்களையும் அடக்கவும் ஒடுக்கவும் திசைதிருப்பவுமே நாமல் ராஜபக்ச கைது என்ற பெரிய கோடு அநுரகுமார அரசாங்கத்தினால் வரையப்பட்டது.

அநுரகுமார அரசாங்கம் கொண்டுவந்துள்ள 22 ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டமூலமானது, நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையின் அதிகாரங்களை மேலும் வலுப்படுத்துவதாகவும், நீதித்துறையின் சுயாதீனத்தைப் பாதிப்பதாகவும் கடுமையான விமர்சனங்களைச் சந்தித்துள்ளது. நீதித்துறை சுயாதீனம் மீதான சர்ச்சை: நீதிபதிகளின் ஓய்வுபெறும் வயதை உயர்த்தும் முன்மொழிவு உள்ளிட்ட அம்சங்கள் நீதித்துறையின் நடுநிலைமையை அச்சுறுத்துவதாக சர்வதேச அமைப்புகள் மற்றும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் என்பன எச்சரித்தன. தேர்தல் காலத்தில் அளிக்கப்பட்ட "அதிகாரப் பரவலாக்கம் மற்றும் ஜனநாயக மறுசீரமைப்பு" வாக்குறுதிகளுக்கு மாறாக, மத்திய அரசிடம் அதிகாரத்தைக் குவிக்கும் முயற்சியாக இது பார்க்கப்படுகின்றது. இத்தகைய சூழலில், பாராளுமன்றத்திலும் மக்கள் மன்றத்திலும் 22 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்திற்கு எதிராக எதிர்க்கட்சிகள் ஓரணியில் திரளத் தொடங்கிய நிலையும், சிவில் அமைப்புகள் வீதிக்கு வந்து போராடும் சூழலும் உருவானது.

அரசியல் விமர்சகர்களின் கூற்றுப்படி, ஒரு அரசாங்கம் ஜனநாயக ரீதியிலான விமர்சனங்களுக்கும் அரசியலமைப்புச் சார்ந்த நெருக்கடிகளுக்கும் உள்ளாகும்போது, பொதுமக்களின் உணர்ச்சிகளைத் தூண்டும் "உயர்வகை அரசியல் கைதுகளை" கையில் எடுப்பது சர்வதேச அளவில் பின்பற்றப்படும் ஒரு உத்தியாகும். அந்தவகையிலேயே ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் விமானக் கொள்முதல் தொடர்பான பழைய லஞ்ச ஊழல் வழக்கைக் கையில் எடுத்து, அரசியல் ரீதியாகப் பரபரப்பை ஏற்படுத்தும் வகையில் நாமல் ராஜபக்ச கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டார். குறிப்பாக, அரசாங்கத்திற்கு எதிராக கடந்த செப்டம்பர் 12 ஆம் திகதி நாமல் ராஜபக்சவின் பொதுஜன பெருமுன கட்சியினர் அநுராதபுரத்தில் நடத்தத் திட்டமிட்டிருந்த பிரம்மாண்டமான போராட்டத்திற்குச் சில நாட்களுக்கு முன்பாக இக்கைது இடம்பெற்றது. "அரசாங்கத்தின் நிர்வாகத் தோல்விகளுக்கு எதிராக மக்கள் திரளுவதைத் தடுக்கவே, என்னைக் கைது செய்யப் பார்க்கிறார்கள்" என்று நாமல் ராஜபக்ச கைதாவதற்கு சில நாட்களுக்கு முன்பேகூறியிருந்தார். இந்தக் கைதின் "கால நேரம்" அரசாங்கத்தின் அரசியல் காய்நகர்த்தலைத் தெளிவாகப் படம் பிடித்துக் காட்டுகிறது.

(தொடர்ச்சி 18ம் பக்கம்)

( பக்கத் 17ம் தொடர்ச்சி)

## அநுர அரசின் ஆயுதமாகும் "இரு கோட்டுத் தத்துவம்"

நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடிகளுக்கு ராஜபக்ச குடும்பத்தினரின் ஊழல்களே காரணம் என்ற எண்ணம் மக்களிடம் ஆழமாகப் பதிந்துள்ள நிலையில், நாமல் ராஜபக்சவின் கைதானது, 22 ஆவது அரசியலமைப்புத் திருத்தம் குறித்த விவாதங்களை மக்களின் நினைவிலிருந்து உடனடியாக அகற்றி, "ஊழலுக்கு எதிரான அரசாங்கத்தின் நடவடிக்கை" என்ற தலைப்புச் செய்திக்கு மாற்றியது. எதிர்க்கட்சிகள் ஒருங்கிணைந்து நடத்தும் பேரணிகள் மற்றும் அரசியல் எழுச்சிகளை எதிர்கொள்ளும் போது, ராஜபக்ச குடும்பத்தின் மீதான சட்ட நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்துவதன் மூலம் எதிர்க்கட்சிகளின் அரசியல் செல்வாக்கைக் கட்டுப்படுத்த 22 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்திற்கு எதிராக பிரசாரங்களை முன்னெடுக்கவிருந்த முக்கிய எதிர்க்கட்சித் தலைவர்களில் ஒருவரான நாமல் ராஜபக்சவைக் கைது செய்து சட்டச் சிக்கலுக்குள் தள்ளியதன் மூலம், எதிர்க்கட்சிகளின் ஒருங்கிணைந்த எதிர்ப்பின் வேகத்தைக் அநுரகுமார அரசாங்கம் குறைக்க முயற்சிக்கின்றது. இதன் ஒரு நடவடிக்கையான நாமலின் கைதானது பொதுஜன பெரமுன மற்றும் பிற எதிர்க்கட்சிகளின் அரசியல் தளத்தைச் பலவீனப்படுத்தி, அவர்களைத் தற்காப்பு அரசியலுக்குத் தள்ளியுள்ளது.

இவ்வாறான ஒரு அரசியல் அழுத்தத்தை எதிர்க்கட்சிகளுக்கு கொடுத்துவிட்டும் 22 ஆவது அரசியலமைப்புத் திருத்தம் தொடர்பான மக்களின் கவனத்தை திசை திருப்பி விட்டும் 24ஆம் திகதி வியாழக்கிழமை மற்றும் 25 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆகிய இரு தினங்களும் காலை 11.30 மணி முதல் இரவு 7 மணிவரை 22 ஆவது அரசியலமைப்புத் ருத்தச் சட்டமூலம் மற்றும் நிதித்துறைத் (திருத்தச்) சட்டமூலம் ஆகியவை தொடர்பான இரண்டாவது மதிப்பீடு மீதான விவாதத்தை அநுரகுமார அரசாங்கம் நடத்துகின்றது.

22 ஆவது அரசியலமைப்புத் திருத்தம் தொடர்பான எதிர்க்கட்சிகள், மக்களின் எதிர்ப்பலைகளை திசைதிருப்ப நாமல் ராஜபக்ச கைது என்ற இன்னொரு பெரிய கோட்டை வரைந்த அநுரகுமார அரசாங்கம் அதன் விளைவாக அநுராதபுரம் கூட்டத்தில் மேடையேறிய முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவையும் அவருக்காகவும் நாமல் ராஜபக்சவுக்காகவும் திரண்ட மக்கள் அலையையும் பார்த்து அதிர்ச்சியடைந்திருந்த நிலையில் தான் தற்போது உயிர்த்த ஞாயிறு தற்கொலைக்குண்டுத் தாக்குதல் குற்றவாளிகள் 15 பேருக்கு 200-260 வருட சிறைத்தண்டனை என்ற இன்னொரு பெரிய கோடு வரையப்பட்டு 22 ஆவது அரசியலமைப்புத் திருத்தமும் நாமல் ராஜபக்ச கைதும் எதிர்கட்சிகளிடமும் மக்களிடமும் ஏற்படுத்தியிருந்த எதிர்ப்பலை மறக்கடிக்கப்பட்டு "200-260 வருட சிறை" என்ற விசேட மேல் நீதிமன்ற தீர்ப்பு மேலெழ வைக்கப்பட்டு அதன் பரபரப்புக்குள் மக்கள் அலட்டிக் கொள்ளாதவகையில் 22 ஆவது அரசியலமைப்புத் திருத்தம் நிறைவேற்றப்படுவதுடன் நாமல் ராஜபக்சவின் விளக்கமறியலும் நீடிக்கப்பட்டுள்ளது.

அநுரகுமார அரசாங்கத்தின் இந்த "இரு கோட்டுத் தத்துவம்" அரசாங்கத்தின் பலத்தைக் காட்டவில்லை. மாறாக அது எதிர்க்கட்சிகளின், அமைப்புக்களின், மக்களின் எதிர்ப்புக்களுக்கு, விமர்சனங்களுக்கு கேள்விகளுக்குப் பதிலளிக்க முடியாத அவர்களின் பலவீனத்தையே வெளிப்படுத்துகிறது.




# ஈழத்துத் திருக்கோயில்கள்
## (வரலாறும் மரபும்)

வரலாறும் மரபும்: 1215



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி. வசந்தா நடராசன் B.A.
(416) 332-0269
vasantha@rogers.com



## ஈழத்து திருச்செந்தூர் முருகன் ஆலயம்
### புதுக்கல்லடி, மட்டக்களப்பு

தமிழகத்திலுள்ள திருச்செந்தூர் என்ற பெயரைக்கொண்டு, முருகப்பெருமானுடைய வேண்டுதலுக்கமைய அமைக்கப்பட்ட ஆலயமாக, மட்டக்களப்பு புதுக்கல்லடியிலுள்ள ஈழத்துத் திருச்செந்தூர் ஆலயம் திகழ்கின்றது. சுவாமி ஓங்காரானந்த சரஸ்வதி அவர்களுடைய ஆத்மார்த்த அன்பின் வெளிப்பாடாக அமைந்த இவ்வாலயம், சிறிது சிறிதாக வளர்ச்சி பெற்று பிரதிஷ்டையும் நிகழ்ந்தது. ஆயினும், 1978 ஆம் ஆண்டு, நவம்பர் மாதம் ஏற்பட்ட சூறாவளியின்போது கோயில் முற்று முழுதாகப் பாதிப்படைந்து தரைமட்டமாகியது. ஆயினும் சிலமாதங்களின் பின்னர் மீண்டும் அதே இடத்தில் ஓலைக் குடிசையாலான கோயில் எழுந்தது.

இவ்வாறு ஓலைக் குடிசையால் அமைக்கப்பட்ட கோயிலிலுள்ள சிரமங்களை எண்ணிய கோயிலைச் சார்ந்தோர், ஊர்மக்களை அழைத்து கல்லாலான சிறு கோயிலொன்றை எழுப்புவதற்கான அவசியத்தை விளக்கினர். இதற்கமைய 1980 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம், கல்லாலான கோயிலை அமைப்பதற்கான அடிக்கல் நாட்டுவிழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. ஊரவர்கள் மட்டுமன்றி உயர் பதவி வகித்த பலரும் ஈழத்துத் திருச்செந்தூர் ஆலயம் மீண்டும் அமைக்கப்படுவதற்குப் பெருந்துணையாக விளங்கினார்கள்.

இவ்வாறான சூழ்நிலையில் பலருடைய உதவியின் காரணமாக, கல்லாலான சிறு கட்டடமொன்றை அமைக்க வேண்டும் என்ற எண்ணம் கைவிடப்பட்டு, பெரிய கோயிலாக ஈழத்துத் திருச்செந்தூர் முருகன் ஆலயம் அமைக்க வாய்ப்பு ஏற்பட்டது. இவ்வாய்ப்பின் காரணமாக, துவிதள விமானத்தைக் கொண்ட கர்ப்பக்கிரகம், அர்த்த மண்டபம், மகா மண்டபம், நிருத்த மண்டபம், தம்ப மண்டபம், முதலியவைகளைக் கொண்ட பெரிய கோயிலாக இக் கோயில் எழுந்தது.

இவ்வாறான பணிகள் யாவும் சிறப்பாக நிறைவேற்றப்பட்டு, 1984 ஆம் ஆண்டு, பெப்ரவரி மாதம் குடமுழுக்குவிழா மிகப் பெரிய விழாவாக நிறைவேற்றப்பட்டது. இதனைத் தொடர்ந்து 40 நாட்கள் மண்டலாபிஷேகமும், கடைசியில் சங்காபிஷேகமும் நிறைவேறியது. சங்காபிஷேகம் நிறைவுபெற்ற பின்னர் முருகன் அலங்காரத் தேரில் எழந்தருளி, இரண்டு நாட்கள் மட்டக்களப்பு மக்கள் அனைவருக்கும் தரிசனமளித்து, மீண்டும் ஆலயத்தை வந்தடைந்தார். அதன் பின்னர் பொன்னூஞ்சல் நிகழ்ச்சியுடன் விழாக்கள் இனிதே நிறைவேறியது.

தன்னை வந்து தரிசிக்க முடியாத ஆன்மாக்களுக்கு, அவர்கள் வசிக்கும் இடங்களுக்குச் சென்று தரிசனம் கொடுப்பது, இந்துமதத்தின் திருவிழாக்களின் தத்துவங்களுள் முக்கியமானதாக விளங்குகின்றது. இச் செயல் இறைவனின் பெருங்கருணையை எடுத்துக் காட்டுவதாகக் காணப்படுகின்றது.

ஈழத்துத் திருச்செந்தூர் ஆலயம் அமைக்கப்பட்ட காலத்திலிருந்து ஆத்மார்த்த பூசைக்கே முதலிடம் கொடுக்கப்பட்டது. ஆரம்பகாலத்திலிருந்து இவ்வாலயத்தில் பிராமணர்களோ, சிவாச்சாரியார்களோ பூசை வழிபாடுகளை நிகழ்த்தவில்லை. அதேபோல இவ்வாலயத்தின் குடமுழுக்கு விழாவின்போதும் பிராமணர்களோ, சிவாச்சாரியார்களோ அழைக்கப்படவில்லை.

தபோவனத்திலுள்ள துறவிகளின் உதவியைக் கொண்டு சுவாமி ஓங்காரானந்த சரஸ்வதி அவர்களே வாஸ்த்துசாந்தி, யாகபூசை, கும்பபூசை, மூர்த்திபிரதிஷ்டை, எண்ணெய்க்காப்பு சாத்துவித்தல், தூபி அபிஷேகம் முதலிய கும்பாபிஷேகக் கிரியைகளைச் சிறப்பாகச் செய்து முடித்து, மகாகும்பாபிஷேகத்தையும் இனிதே நிறைவேற்றி வைத்தார்கள். இவ்வேளையில் இராமகிருஷ்ண சங்கத்தின் சார்பில், சுவாமி பிரேமாத்மானந்தஜீ அவர்களும், சுவாமி ஜீவனானந்தஜீ அவர்களும் கலந்துகொண்டு, மகா கும்பாபிஷேக விழாவைச் சிறப்பித்தார்கள்.

ஆரம்பகாலத்தைப்போல தொடர்ந்தும் இவ்வாலயத்திலே, காவி உடை தரித்த துறவிகளே பூசை வழிபாடுகளை நிகழ்த்துகின்றனர். இத்துறவிகள் மிகப் பயபக்தியோடு மக்களுடைய தொண்டர்களாகச் செயற்பட்டு, பிரதி பலன் கருதாமல் கோயிலைச் சிறப்பாக நடத்துவது குறிப்பிடத்தக்கது.

இவ்வாலயத்திலே காலை 7.00மணிக்கும், பகல் 12.00 மணிக்கும், இரவு 6.30 மணிக்கும் தினமும் மூன்று காலம் நித்தியபூசைகள் நடைபெறுகின்றன. தினமும் மூன்று வேளையும் பூசை முடிந்த பின்னர், பக்தர்கள் கர்ப்பக்கிரக வாசற்படிவரை சென்று ஈழத்துத் திருச்செந்தூர் முருகப் பெருமானை நேர்முகமாகத் தரிசனம் செய்ய அனுமதிக்கப்படுகின்றனர். இவ்விடயத்திலே உயர்வு தாழ்வு, சாதி மத, இன, பால் வேறுபாடின்றி அனைவரும் இறைவனின் குழந்தைகள் என்ற நோக்கில் முருகனைத் மனமாரத் தரிசித்து அருள் பெற இவ்வழக்கம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாறான மரபு இந்து மதத்தின் மிகப் பெரிய திருப்புமுனையாகக் கருதப்படுகின்றது.

வளரும்..

மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

## ஒன்ராறியோ இந்து சமயப்பேரவை 25ஆவது வருடமாக நடத்தும்

## திருமுறை முற்றோதல் பூர்த்தியை முன்னிட்டு

## நடைபெறும் திருமுறை விழா

## சிறார்களுக்கான போட்டிகள்



## போட்டிகள் நடைபெறும் இடம்:
## ஆத்மஜோதி இல்லம்

**1473 BIRCHMOUNT ROAD, (Birchmount & Ellesmere)**

திருமுறை மனனப் போட்டி

நவம்பர் 28, 2026 சனிக்கிழமை பி.ப. 3மணிக்கு நடைபெறும்

பேச்சுப் போட்டி

நவம்பர் 28, 2026 சனிக்கிழமை பி.ப. 3மணிக்கு நடைபெறும்

# திருமுறைவிழா 2025

## இடம்: ஶ்ரீ ஐயப்பன் இந்து ஆலயம்

635 Middlefield Rd, Scarborough, ON M1V 5B8

காலம்: டிசம்பர் 05 சனிக்கிழமை (05-12-2026) மாலை 3:00 மணி - இரவு 9:00 மணி வரை

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கீழ்ப்பிரிவு: | 30-11-2020 | - | 30-11-2016 | க்கும் | இடைப்பட்டவர்கள் |
| மத்தியபிரிவு: | 30-11-2016 | - | 30-11-2012 | க்கும் | இடைப்பட்டவர்கள் |
| மேற்பிரிவு: | 30-11-2012 | - | 30-11-2008 | க்கும் | இடைப்பட்டவர்கள் |

**பேச்சுப் போட்டி விடயங்களை**
**விண்ணப்படிவத்துடன் கேட்டுப் பெற்றுக்கொள்ளவும்.**

திருமுறைப் மனனப் போட்டிக்கு தேவையான பாடல்கள் யாவற்றையும் இந்து சமயப் பேரவை வெளியீடான பயன்தரவல்ல திருமுறைப்பாக்கள் என்ற நூலில் இருந்து பெற்றுக்கொள்ளலாம்.

**விண்ணப்ப முடிவுத் திகதி நவெம்பர் 25, 2026**

**விண்ணப்பக் கட்டணம் போட்டி ஒன்றுக்கு 10 டொலர்**

**தொடர்புகளுக்கு**
Siva. Muthulingam
Arthmajothy Illam
1473, Birchmount Road
Scarborough, ON. M1P 2G4

விண்ணப்பப் படிவமும் மனனம் பண்ணும்
பேச்சுப் போட்டிக்குரிய விடயமும் கிடைக்கும் இடம்

**முருகன் புத்தகசாலை,**
GTA MALL 5215 Finch Ave. E. **416-321-0285**
**ஆத்மஜோதி இல்லம்** 1473 BIRCHMOUNT ROAD
416-724-6240

சகல போட்டிகளிலும் முதலிடம் பெறும் மாணவர்களுக்கு பொற்கிழி வழங்கப்படும். 1ஆம் 2ஆம் 3ஆம் இடம் பெறும் மாணவர்களுக்கு வெற்றிக் கிண்ணமும் பங்கு பற்றும் சகல மாணவர்களுக்கும் ஆறுதல் பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

**தொடர்புகளுக்கு:**
**சிவ முத்துலிங்கம் 416-724-6240**
**ஜனா தயாபரன்:416-560-1812**

**ஒன்ராறியோ**

**இந்து சமயப் பேரவை, கனடா**




25-09-2026 வெள்ளி தொடக்கம் 01-10-2026 வியாழன் வரையும்







**மேஷம்:** இந்த வாரம் உங்களுக்கு செவ்வாய் பலத்தால் அதிர்ஷ்டம் பொங்கும் அற்புதமான வாரமாக அமையும். எதிரிகள் தொல்லை விலகும். கடன் அடையும். நோய் குணமாகும். கோர்ட் வழக்கில் வெற்றி கிடைக்கும். போட்டிகளில் ஜெயிப்பீர்கள். மாமன் வழி உதவி கிடைக்கும். வேலையில் சுறுசுறுப்பு அதிகரிக்கும். இருபத்தி ஏழு இருபத்தி எட்டு தேதிகளில் ஏழாம் இடத்திற்கு சூரியன் வருவதால் கணவன் மனைவி இடையே சிறு கருத்து வேறுபாடு வரலாம் காதலர்கள்பொறுமை காக்க வேண்டும். கூட்டு தொழிலில் கவனம் தேவை. புதிய நண்பர்கள் கிடைப்பார்கள். வெளியூர் பயணம் செல்வீர்கள். இருபத்தி ஒன்பது முப்பது தேதிகளில் எட்டாம் இடத்தில் சூரியன் வருவதால் கொஞ்சம் எச்சரிக்கை தேவை. வாகனத்தில் கவனம் தேவை. திடீர் செலவு வரலாம். உடல் நலனில் அக்கறை தேவை. யாரிடமும் வாக்குவாதம் வேண்டாம். அக்டோபர் ஒன்று அன்று ஒன்பதாம் இடத்தில் சூரியன் பலம் பெறுவதால் அதிர்ஷ்டம் திரும்பும். தந்தை மூலம் உதவி கிடைக்கும். பூர்வீக சொத்து கைக்கு வரும். கோவில் பயணம் செல்வீர்கள் வேலையில் இருந்த தடை விலகும். மொத்தத்தில் இந்த வாரம் முதல் இரண்டு நாள் ராஜயோகம் நடுவில் இரண்டு நாள் சுமார் கடைசி மூன்று நாள் கவனம் தேவை நல்லதே நடக்கும் என்பது உறுதி. மேலும் பண வரவு அதிகரிக்கும் சேமிப்பு உயரும் குழந்தைகளால் மகிழ்ச்சி உண்டாகும். பெண்களுக்கு நகை யோகம் மாணவர்கள் ஜெயிப்பார்கள். விவசாயிகளுக்கு மகசூல் அதிகரிக்கும் வியாபாரிகளுக்கு லாபம்பெருகும்.

*அதிர்ஷ்ட நாள்: செவ்வாய் வியாழன் ஞாயிறு. அதிர்ஷ்ட எண்: ஒன்பது.*

*அதிர்ஷ்ட நிறம்: சிவப்பு. இந்த வார மதிப்பெண்: 98%.*




**ரிஷபம்:** இந்த வாரம் உங்களுக்கு சுக்கிர பலத்தால் சுபிட்சமான வாரமாக அமையும். குழந்தைகளால் மகிழ்ச்சி உண்டாகும். பூர்வ புண்ணியம் பலிக்கும். காதல் கைகூடும். புதிய முதலீடு லாபம் தரும். மாணவர்கள் படிப்பில் ஜெயிப்பார்கள். குலதெய்வ வழிபாடு நன்மை தரும். இருபத்தி ஏழு இருபத்தி எட்டு தேதிகளில் ஆறாம் இடத்திற்கு சூரியன் வருவதால் எதிரிகள் விலகுவார்கள். கடன் அடையும் நோய் தீரும் கோர்ட் வழக்கில் வெற்றி கிடைக்கும் வேலையில் பாராட்டு கிடைக்கும் தாய்மாமன் உதவி கிடைக்கும். இருபத்தி ஒன்பது முப்பது தேதிகளில் ஏழாம் இடத்தில் சூரியன் வருவதால் கணவன் மனைவி இடையே சிறு சண்டை வரலாம் கூட்டு தொழிலில் கவனம் தேவை புதிய நட்பு கிடைக்கும் வெளியூர் பயணம் செல்வீர்கள். அக்டோபர் ஒன்று அன்று எட்டாம் இடத்தில் சூரியன் வருவதால் கொஞ்சம் எச்சரிக்கை தேவை திடீர் செலவு வரலாம் வாகனத்தில் கவனம் தேவை உடல் நலனில் அக்கறை கொள்ளுங்கள். மொத்தத்தில் இந்த வாரம் முதல் நான்கு நாள் அதிர்ஷ்டம் கடைசி மூன்று நாள் கவனம் தேவை பண வரவு அதிகரிக்கும் சேமிப்பு உயரும் பெண்களுக்கு நகை யோகம் விவசாயிகளுக்கு மகசூல் அதிகரிக்கும் வியாபாரிகளுக்கு லாபம் பெருகும் பொறுமை அவசியம் வெற்றி நிச்சயம் புகழ் உயரும். மனநிம்மதி கிடைக்கும். சந்தோஷம் பெருகும் வெற்றி கிட்டும்.

*அதிர்ஷ்ட நாள்: வெள்ளி திங்கள் புதன். அதிர்ஷ்ட எண்: 6.*

*அதிர்ஷ்ட நிறம்: வெள்ளை. இந்த வாரமதிப்பெண்: 95%.*




**மிதுனம்:** இந்த வாரம் உங்களுக்கு புதன் பலத்தால் மிகவும் புத்திசாலித்தனமான வாரமாக அமையும். தாய் வழி சொத்து கிடைக்கும். வீடு வாகன யோகம் உண்டாகும். தாயின் உடல் நலனில் கவனம் தேவை. வேலையில் இடமாற்றம் வரலாம் புதிய வீடு வாங்கும் யோகம் உண்டு. இருபத்தி ஏழு இருபத்தி எட்டு தேதிகளில் ஐந்தாம் இடத்தில் சூரியன் பலம் பெறுவதால் குழந்தைகளால் பெருமை கிடைக்கும் காதல் வெற்றி பெறும் பூர்வ புண்ணியம் பலிக்கும் மாணவர்களுக்கு நல்ல மதிப்பெண் கிடைக்கும் புதிய முதலீடு லாபம் தரும். எதிரிகள் தொல்லை விலகும் கடன் தீரும் நோய் குணமாகும் கோர்ட் வழக்கில் வெற்றி கிடைக்கும் போட்டியில் ஜெயிப்பீர்கள். கணவன் மனைவி இடையே சிறு கருத்து வேறுபாடு வரலாம் கூட்டு தொழிலில் கவனம் தேவை. மொத்தத்தில் இந்த வாரம் மிகவும் அதிர்ஷ்டமான வாரம் பண வரவு அதிகரிக்கும். பெண்களுக்கு நகை யோகம் விவசாயிகளுக்கு மகசூல் பெருகும். மாணவர்கள் கல்வியில் சிறந்து விளங்குவர் போட்டிகளில் வெற்றி பெறுவர். மேலும் பயணங்கள் லாபம் தரும் அரசு காரியங்கள் வெற்றியடையும். தெய்வ வழிபாடு நன்மை தரும். பெருமாள் வழிபாடு மிகவும் சிறந்தது பொறுமை அவசியம் வெற்றி நிச்சயம் புகழ் உயரும் மனநிம்மதி கிடைக்கும் சந்தோஷம் பெருகும் வெற்றி கிட்டும் வாழ்க.

*அதிர்ஷ்ட நாள்: புதன் வெள்ளி திங்கள். அதிர்ஷ்ட எண்: 5.*

*அதிர்ஷ்ட நிறம்: பச்சை. இந்த வார மதிப்பெண்: 90%.*




**கடகம்:** இந்த வாரம் உங்களுக்கு சந்திர பலத்தால் மன அமைதி தரும் வாரமாக அமையும். தைரியம் அதிகரிக்கும் தம்பி தங்கை உதவி கிடைக்கும். புதிய முயற்சி வெற்றி பெறும். வெளியூர் பயணம் செல்வீர்கள். பதவி உயர்வு கிடைக்கும். சொத்து வாங்கும் யோகம் உண்டு. தாயின் உடல் நலனில் கவனம் தேவை. வீடு வாகன விஷயத்தில் செலவு வரலாம். வேலையில் இடமாற்றம் வரலாம் மனதில் கொஞ்சம் குழப்பம் வரலாம். வாகனத்தில் கவனம் தேவை. குழந்தைகளால் மகிழ்ச்சி பூர்வ புண்ணியம் பலிக்கும். காதல் கைகூடும். மாணவர்கள் ஜெயிப்பார்கள் புதிய முதலீடு லாபம் தரும் குலதெய்வ அருள் கிடைக்கும். எதிரிகள் விலகுவார்கள். கடன் தீரும். வழக்கில் வெற்றி போட்டியில் ஜெயிப்பீர்கள். மாமன் உதவி கிடைக்கும். மொத்தத்தில் இந்த வாரம் நல்ல வாரம் பண வரவு அதிகரிக்கும் பெண்களுக்கு நகை யோகம் விவசாயிகளுக்கு மகசூல் பெருகும். வியாபாரிகளுக்கு லாபம் பிள்ளைகளால் பெருமை வரும். சுபச்செலவுகள் ஏற்படும். திருமண பேச்சு கைகூடும் காதல் உறவு இனிக்கும் பிணக்கு நீங்கும் நண்பர்கள் உதவுவர். உடல்நலத்தில் சிறு சோர்வு வரலாம் நீர் அதிகம் பருகவும் ஓய்வு அவசியம். மாணவர்கள் கல்வியில் சிறந்து விளங்குவர் போட்டிகளில் வெற்றி பெறுவர். மேலும் பயணங்கள் லாபம் தரும் அரசு காரியங்கள் வெற்றியடையும். தெய்வ வழிபாடு நன்மை தரும் அம்மன் வழிபாடு மிகவும் சிறந்தது பொறுமை அவசியம் வெற்றி நிச்சயம் புகழ் உயரும் மனநிம்மதி கிடைக்கும் சந்தோஷம் பெருகும் வெற்றி கிட்டும்.

*அதிர்ஷ்ட நாள்: திங்கள் வெள்ளி வியாழன். அதிர்ஷ்ட எண்: 2.*

*அதிர்ஷ்ட நிறம்: வெள்ளை. இந்த வார மதிப்பெண்: 92%.*




**சிம்மம்:** இந்த வாரம் பிரகாசமான வெற்றி வாரமாக அமையும். பண வரவு அதிகரிக்கும். பேச்சில் கவனம் தேவை. குடும்பத்தில் சிறு சண்டை வரலாம் கவனம் தேவை. சேமிப்பு உயரும் நகை வாங்கும் யோகம் உண்டு. தைரியம் பிறக்கும் தம்பி தங்கை உதவி கிடைக்கும். புதிய முயற்சி ஜெயிக்கும் வெளியூர் பயணம் செல்வீர்கள். பதவி உயர்வு கிடைக்கும். தாய் வழியில் செலவு வரலாம் வீடு வாகனத்தில் கவனம் தேவை. மனக்குழப்பம் வரலாம். குழந்தைகளால் சந்தோஷம் மற்றும் மகிழ்ச்சி நிலவும். திருமண தடைகள் நீங்கும். காதல் உறவு இனிக்கும். நண்பர்கள் உதவுவர். உடல்நலத்தில் சிறு உபதைகள் வரலாம். நீர் அதிகம் பருகவும் ஓய்வு அவசியம் கார உணவை தவிர்க்கவும். மாணவர்கள் கல்வியில் சிறந்து விளங்குவர் போட்டிகளில் வெற்றி பெறுவர். மேலும் பயணங்கள் லாபம் தரும் அரசு உதவி கிடைக்கும். மொத்தத்தில் இந்த வாரம் முதல் இரண்டு நாள் சுமார் நடுவில் இரண்டு நாள் ராஜயோகம் கடைசி மூன்று நாள் கவனம். தெய்வ வழிபாடு நன்மை தரும் சூரிய வழிபாடு மிகவும் சிறந்தது. பொறுமை அவசியம் தொட்டது துலங்கும் புகழ் உயரும். மனஅமைதி நிலவும் மகிழ்சி பெருகும் வெற்றி கிட்டும்.

*அதிர்ஷ்ட நாள்: ஞாயிறு செவ்வாய் வியாழன். அதிர்ஷ்ட எண்: 1.*

*அதிர்ஷ்ட நிறம்: ஆரஞ்சு. இந்த வார மதிப்பெண்: 96%.*




**கன்னி:** இந்த வாரம் மிகவும் யோகமான வாரமாக அமையும். உடல் நலனில் கவனம் தேவை. தலைவலி காய்ச்சல் வரலாம். கோபத்தை குறைக்க வேண்டும். யாரிடமும் வாக்குவாதம் வேண்டாம் வேலையில் அழுத்தம் அதிகரிக்கும். பண வரவு அதிகரிக்கும் குடும்பத்தில் மகிழ்ச்சி பேச்சில் இனிமை தேவை. நகை வாங்கும் யோகம் சேமிப்பு உயரும். இருபத்தி ஒன்பது முப்பது தேதிகளில் மூன்றாம் இடத்தில் சூரியன் பலம் பெறுவதால் தைரியம் பிறக்கும். தம்பி தங்கை உதவி புதிய முயற்சி வெற்றி பதவி உயர்வு வெளியூர் பயணம் உண்டு. அக்டோபர் ஒன்று அன்று நான்காம் இடத்தில் சூரியன் வருவதால் தாய் வழி செலவு நிகழும். வீடு வாகனத்தில் கவனம். மொத்தத்தில் இந்த வாரம் முதல் இரண்டு நாள் கவனம் நடுவில் நான்கு நாள் ராஜயோகம் கடைசி நாள் சுமார் பண வரவு அதிகரிக்கும். பெண்களுக்கு நகை யோகம் விவசாயிகளுக்கு மகசூல் வியாபாரிகளுக்கு லாபம் போட்டிகளில் வெற்றி பெறுவர். மேலும் பயணங்கள் லாபம் தரும் அரசு காரியங்கள் வெற்றியடையும் வழக்குகள் சாதகமாகும். தெய்வ வழிபாடு நன்மை தரும் பெருமாள் வழிபாடு மிகவும் சிறந்தது. பொறுமை அவசியம் வெற்றி நிச்சயம் புகழ் உயரும் மனநிம்மதி கிடைக்கும் சந்தோஷம் பெருகும் வெற்றி கிட்டும்.

*அதிர்ஷ்ட நாள்: புதன் வெள்ளி திங்கள். அதிர்ஷ்ட எண்: 5.*

*அதிர்ஷ்ட நிறம்: பச்சை. இந்த வார மதிப்பெண்: 90%.*




**துலாம்:** இந்த வாரம் உங்களுக்கு சமநிலையான வெற்றி வாரமாக அமையும். தொழில் வியாபாரத்தில் புதிய வாய்ப்புகள் கிடைக்கும். லாபம் அதிகரிக்கும் புதிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும். வாடிக்கையாளர்கள் பெருகுவர். வேலையில் இருப்பவர்களுக்கு பதவி உயர்வு சம்பள உயர்வு கிடைக்கும். மேலதிகாரிகள் பாராட்டுவர் விரும்பிய இடமாற்றம் கிடைக்கும். பணவரவு தாராளமாக இருக்கும். கடன் சுமை தீரும் சேமிப்பு உயரும் வீடு மனை வாங்கும் யோகம் உண்டு. நகை சேரும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். கணவன் மனைவி ஒற்றுமை பலப்படும் பிள்ளைகளால் பெருமை வரும் சுபச்செலவுகள் ஏற்படும். திருமண பேச்சு கைகூடும் காதல் உறவு இனிக்கும். மாணவர்கள் கல்வியில் சிறந்து விளங்குவர் போட்டிகளில் வெற்றி பெறுவர். திடீர் செலவு வரலாம் வெளியூர் பயணம் செல்வீர்கள். விரயம் அதிகரிக்கும் கவனம் தேவை யாருக்கும் ஜாமீன் போடவேண்டாம் வேலையில் அழுத்தம் வாக்குவாதம் தவிர்க்கவும். பண வரவு அதிகரிக்கும் குடும்பத்தில் மகிழ்ச்சி பேச்சால் காரியம் ஜெயிக்கும் மற்றும் இளையோர் உதவி கிடைக்கும். புதிய முயற்சி வெற்றி உத்யோக உயர்வு கிடைக்கும் மொத்தத்தில் இந்த வாரம் முதல் நான்கு நாள் கவனம் கடைசி மூன்று நாள் ராஜயோகம் பெண்களுக்கு நகை யோகம் விவசாயிகளுக்கு மற்றும் வியாபாரிகளுக்கு லாபம் சந்தோஷம் பெருகும். வெற்றி கிட்டும்.

*அதிர்ஷ்ட நாள்: வெள்ளி திங்கள் புதன். அதிர்ஷ்ட எண்: 6.*

*அதிர்ஷ்ட நிறம்: வெள்ளை. இந்த வார மதிப்பெண்: 93%.*




**விருச்சிகம்:** இந்த வாரம் உங்களுக்கு தைரியமான வெற்றி வாரமாக அமையும். தொழிலில் லாபம் கொட்டும் பண வரவு அதிகரிக்கும். நண்பர்கள் உதவி கிடைக்கும். புதிய ஒப்பந்தம் கிடைக்கும் ஆசை நிறைவேறும் மூத்த சகோதரர் உதவி கிடைக்கும். செலவு அதிகரிக்கும் தூக்கமின்மை வெளியூர் பயணம் விரயம் கவனம் தேவை. உடல் நலனில் கவனம் தேவை கோபம் தவிர்க்கவும் வேலையில் அழுத்தம் இருக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி பேச்சால் வெற்றி கிடைக்கும். பெண்களுக்கு நகை யோகம் தொழில் வியாபாரத்தில் புதிய வாய்ப்புகள் கிடைக்கும். லாபம் அதிகரிக்கும் புதிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும் வாடிக்கையாளர்கள் பெருகுவர். வேலையில் இருப்பவர்களுக்கு பதவி உயர்வு சம்பள உயர்வு கிடைக்கும். மேலதிகாரிகள் பாராட்டுவர் விரும்பிய இடமாற்றம் கிடைக்கும். பணவரவு தாராளமாக இருக்கும் கடன் சுமை தீரும் சேமிப்பு உயரும் வீடு மனை வாங்கும் யோகம் உண்டு. சொத்து சேரும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும் கணவன் மனைவி ஒற்றுமை பலப்படும் பிள்ளைகளால் பெருமை வரும் சுபச்செலவுகள் ஏற்படும். திருமண பேச்சு கைகூடும். காதல் உறவு இனிக்கும். மாணவர்கள் கல்வியில் சிறந்து விளங்குவர் போட்டிகளில் வெற்றி பெறுவர். மேலும் பயணங்கள் லாபம் தரும் அரசு காரியங்கள் வெற்றியடையும் வழக்குகள் சாதகமாகும் தெய்வ வழிபாடு நன்மை தரும். முருகன் வழிபாடு மிகவும் சிறந்தது.

*அதிர்ஷ்ட நாள்: செவ்வாய் ஞாயிறு வியாழன். அதிர்ஷ்ட எண்: 9.*

*அதிர்ஷ்ட நிறம்: சிவப்பு. இந்த வார மதிப்பெண்: 94%.* **(தொடர்ச்சி 22 பக்கம்)**

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# பாலியல் வன்கொடுமை குற்றச்சாட்டில் முதன்முறையாக இலங்கைப் பெண் கடற்படை அதிகாரிகள் கைது




போரின் இறுதிக்கட்டத்தில் திருகோணமலை பகுதியில் வெள்ளை வேனில் கடத்திச் செல்லப்பட்டதாகக் கூறப்படும் இரண்டு தமிழ்ப் பெண்கள், கிழக்கு பிராந்தியத்தின் உயர் கடற்படை செயற்பாட்டு தலைமையகத்தில் இருந்த நிலத்தடி சித்திரவதை முகாமில் தடுத்து வைக்கப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில், பொலிஸ் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் கூட்டு கொள்ளைகள் தொடர்பான விசாரணைப் பிரிவினரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட பெண் கடற்படை அதிகாரிகள் தொடர்பான தகவல்கள் பொலிஸாருக்கு பல ஆண்டுகளுக்கு முன்னரே கிடைத்திருந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

நபர்களைக் கடத்திச் சென்று பாலியல் வன்கொடுமை உள்ளிட்ட சித்திரவதைகளை மேற்கொண்டு காணாமலாக்கிய குற்றச்சாட்டில் கடற்படை பெண் அதிகாரிகள் கைது செய்யப்பட்ட சம்பவம் இலங்கையில் பதிவாகியிருப்பது இதுவே முதல் முறையாகும்.

திருகோணமலை, கிண்ணியா வீதியில் உள்ள பாலையூற்று பகுதியில் வசித்து வந்த உறவுமுறைச் சகோதரிகளான மேரி டெல்ஷியா மற்றும் சசிகுமார் தேன்மொழி ஆகிய இருவரும் 2008 ஆம் ஆண்டு மே மாதம் 13 ஆம் திகதி கடத்திச் செல்லப்பட்டு, கொடூரமான கன்சைட் நிலத்தடி சிறையில் தடுத்து வைக்கப்பட்டு சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் காணாமல் ஆக்கப்பட்டதாக குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. இந்த சம்பவம் தொடர்பில் லெப்டினன் கமாண்டர் கோதாகொட ஹேவாவிதாரண தீபிகா சந்தமாலி மற்றும் இளநிலை அதிகாரி மிஹிந்துகுலசூரியகே அருணி தினூஷா காவுஸ் ஆகிய இரு கடற்படை அதிகாரிகள் மீது குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

பொலிஸ் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினால் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அறிக்கைகளுக்கு அமைய, இந்த சம்பவம் தொடர்பான முறைப்பாடுகள் பல ஆண்டுகளுக்கு முன்னரே கிடைத்துள்ளன. மேலும், அந்தக் காலப்பகுதியில் குறித்த பெண் அதிகாரிகளிடம் பல சந்தர்ப்பங்களில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டதாக நீதிமன்றத்திற்கு அறிக்கையிடப்பட்டுள்ளது.

## நீதவானிடம் இரகசிய வாக்குமூலம்

தமிழ்ப் பெண்கள் இருவரையும் கடத்திச் சென்று காணாமலாக்கிய சம்பவம் தொடர்பில் மேலும் சில கடற்படை அதிகாரிகளும் குற்றச்சாட்டுக்கு உள்ளாகியுள்ளதாக பொலிஸார் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளனர்.

"மேரி டெல்சியா மற்றும் தேன்மொழி ஆகிய இருவரும் 2008.05.13 அன்று இந்த வழக்கின் 6, 7, 13 மற்றும் 14 ஆம் இலக்க சந்தேகநபர்கள் மற்றும் சந்தேகநபர்களான பெண்களால் கடத்திச் செல்லப்பட்டுள்ளதாகவும், இதுவரை அந்த இரு பெண்களும் காணாமல் போயுள்ளதாகவும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது. இதனுடன் கடற்படையின் சிறப்பு புலனாய்வுப் பிரிவுக்கும் தொடர்பு இருப்பதாகவும், பாதிக்கப்பட்ட குறித்த இரு பெண்களும் கன்சைட் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்ததாகவும் தெரியவந்துள்ளது," என 2018 ஆம் ஆண்டு திருகோணமலை நீதவான் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பொலிஸ் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சாட்சியாளரின் பெயர் குறிப்பிடப்படாமல் பொலிஸாரால் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அந்த வாக்குமூலத்தின் அடிப்படையில் அடையாளம் காணப்பட்டுள்ள ஏனைய சந்தேகநபர்களான கடற்படை அதிகாரிகள் மில்ல விதானச்சிகே கோசல சமிந்த மற்றும் பொல்வத்த விதானலாகே சம்பத் ஜனக குமார ஆகியோராவர்.

தமிழ் பெண்கள் இருவரும் கன்சைட் நிலத்தடி முகாமின் சிறை அறைகளில் தடுத்து வைக்கப்பட்டிருந்ததாகவும், அவர்களை தினூஷா காவுஸ் மற்றும் தீபிகா சந்தமாலி ஆகியோரே தடுத்து வைத்திருந்ததாகவும், அப்போது தனது அடையாளத்தை வெளிப்படுத்தாத கைதி ஒருவரும் சாட்சியமளித்துள்ளதாக குற்றப் புலனாய்வாளர்கள் திருகோணமலை நீதவானிடமட சமர்ப்பித்துள்ள மற்றுமொரு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நேரில் கண்ட சாட்சி

"தமிழ்ப் பெண்கள் இருவர் அங்கு இருந்ததாகவும், அந்த இருவரும் அக்கா மற்றும் தங்கை என குறிப்பிடப்பட்டதாகவும், அவர்கள் தனித்தனியான சிறை அறைகளில் தடுத்து வைக்கப்பட்டிருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. லொக்கு குமார, பொடி குமார, ரத்நாயக்க லசந்த, ரணசிங்க சேர், சின்னா, முரளி, காமினி, பண்டார ஆகியோரும், தர்ஷன சேர், அபேகோன், அமரசிங்க, உபுல் ஆகியோரும், பெண் கடற்படை அதிகாரிகளான சந்தமாலி மற்றும் காவுஸ் ஆகியோரும் அந்த சந்தேகநபர்களின் பாதுகாப்புப் பணியில் இருந்ததாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. சந்தமாலி மற்றும் காவுஸ் ஆகிய இருவரும் தடுத்து வைக்கப்பட்டிருந்த சந்தேகநபர்களின் பாதுகாப்புப் பணியில் இருந்ததாகவும், மேற்குறிப்பிடப்பட்ட இரு பெண்களும் இரண்டு நாட்களுக்குப் பின்னர் சிறை அறைகளிலிருந்து வெளியே அழைத்துச் செல்லப்பட்டதாகவும், அதன் பின்னர் அவர்கள் மீண்டும் அழைத்து வரப்படவில்லை என்றும்." அந்தக் கைதி வழங்கியுள்ள நீண்ட வாக்குமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வெள்ளை வேனில் கடத்திச் செல்லப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டதாகக் கூறப்படும் இந்த இரு தமிழ் பெண்களின் சகோதரர்கள் மற்றும் சில உறவினர்களும் அதே காலப்பகுதியில் கன்சைட் நிலத்தடி சிறையில் தடுத்து வைக்கப்பட்டு, கடுமையான உடல் மற்றும் மன ரீதியான சித்திரவதைகளுக்கு உட்படுத்தப்பட்டதாக விசாரணையாளர்கள் நீதிமன்றத்தில் சமர்ப்பித்துள்ள அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## சித்திரவதை முகாமின் விபரங்கள்

இந்த இரண்டு கடற்படை பெண் அதிகாரிகளும், கன்சைட் நிலத்தடி சித்திரவதை முகாமுக்குப் பொறுப்பாக இருந்த கமாண்டர் (ஓய்வுபெற்ற) ரியர் அட்மிரல் டி.கே.பி. தசநாயக்கவின் கீழ் பணியாற்றியதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது. அவரது உத்தரவின் கீழ் இயங்கிய கடற்படையின் சிறப்பு புலனாய்வுப் பிரிவினரால், கொழும்பு மற்றும் ஏனைய பகுதிகளில் இருந்து கப்பம் பெறுவதற்காக கடத்திவரப்பட்ட தமிழர்களையும், போர்க்காலத்தில் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்தவர்கள் என சந்தேகிக்கப்பட்டவர்களையும் காவலில் வைத்துப் பாதுகாக்கும் பணி இந்த இரு பெண் அதிகாரிகளுக்கும் வழங்கப் பட்டிருந்ததாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது. மேலும், குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினால் கன்சைட் நிலத்தடி சிறைகளை கொண்ட வளாகம் தொடர்பில் பின்னர் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின்போது, இந்த சந்தேகநபர்களான பெண் அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படும் மேலும் பல குற்றச் செயல்கள் மற்றும் சில நபர்கள் காணாமல் ஆக்கப்பட்ட சம்பவங்கள் தொடர்பான தகவல்களும் கண்டறியப்பட்டுள்ளதாக தெரிவிக்கப் பட்டுள்ளது.

அவற்றில் முக்கியமான ஒரு சம்பவமாக, அலவ்வ பொலிஸாரால் கைது செய்யப்பட்டு பின்னர் அலவ்வ வைத்தியசாலையில் தங்கவைக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில், 2010 ஜூலை 26 ஆம் திகதி அதிகாலை காணாமல் போனதாக பொலிஸார் தெரிவித்திருந்த, கேகாலை மல்வத்த கந்த, எகிரியகல பகுதியில் வசித்து வந்த ஒரு பிள்ளையின் தந்தையான கனேராளாலகே சாந்த சமரவீர தொடர்பான விசாரணை காணப்படுகிறது.

அவர் வைத்தியசாலையில் இருந்தபோது சிலரால் கடத்திச் செல்லப்பட்டு கடற்படைக் குழுவொன்றிடம் ஒப்படைக்கப்பட்ட பின்னர், கன்சைட் நிலத்தடி சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. இதனை உறுதிப்படுத்தும் பல்வேறு சாட்சியங்களை குற்றப் புலனாய்வுத் திணைக்களம் அவ்வப்போது நீதிமன்றத்தில் சமர்ப்பித்துள்ளது.

போரின் இறுதிக் காலப்பகுதியில் கொழும்பு மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் இருந்து தந்தை மகன் நால்வர் உள்ளிட்ட பதினொரு ஆண்கள் கடத்திச் செல்லப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட சம்பவமும், அவர்கள் கன்சைட் சித்திரவதை முகாமில் தடுத்து வைக்கப்பட்டு சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்ட பின்னரே இடம்பெற்றதாக தெரிவிக்கப்படுகிறது.

அந்த குற்றச்செயல் தொடர்பில் வழக்குத் தொடரப்பட்டுள்ளவர்களில் முன்னாள் கடற்படைத் தளபதிகளான அட்மிரல் ஒப் தப்ளீட் வசந்த கரன்னாகொட மற்றும் அட்மிரல் ரவீந்திர விஜேகுணவர்தன ஆகியோரும் அடங்குகின்றனர்.

## பெண் கடற்படை அதிகாரிகளின் பாலியல் சித்திரவதை

16 ஆண்டுகளுக்கு முன்னர் சாந்த சமரவீர காணாமல் ஆக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் இந்த வாரம் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட அருணி தினூஷா காவுஸ் மற்றும் தீபிகா சந்தமாலி ஆகிய இரு பெண் கடற்படை அதிகாரிகளும், கடற்படையின் முன்னாள் ஊடகப் பேச்சாளரும், முன்னாள் சிறப்பு புலனாய்வுப் பணிப்பாளருமான கமாண்டர் (ஓய்வுபெற்ற) ரியர் அட்மிரல் டி.கே.பி. தசநாயக்க, கமாண்டர் சுமித் ரணசிங்க உள்ளிட்ட குழுவினருடன் இணைந்து மேலும் பல குற்றச் செயல்களில் ஈடுபட்டார்களா என்பது தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக, குற்றப் புலனாய்வு விசாரணைகள் குறித்து அறிந்த, தனது பெயரை வெளியிட விரும்பாத அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

சந்தேகநபர்களான குறித்த இரு பெண் அதிகாரிகளும், தங்களை கன்சைட் நிலத்தடி சித்திரவதை முகாமின் சிறைகளிலிருந்து வெளியே அழைத்து வந்து பாலியல் வன்கொடுமைக்கு உட்படுத்தியதாகவும், சரத்தை கழற்றி, சுயஇன்பத்தில் ஈடுபடுமாறு கட்டாயப்படுத்தி, "கடுமையான பாலியல் துன்புறுத்தலுக்கும் அவமானத்திற்கும்" உள்ளாக்கியதாகவும் கைதிகளின் அதிர்ச்சியூட்டும் வாக்குமூலங்களை மேற்கோள்காட்டி, குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் விசாரணை அதிகாரிகள் நீதிமன்றத்தில் சமர்ப்பித்துள்ள அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.



# இவ்வார ராசிபலன்

( 20 பக்கம் தொடர்ச்சி)




**தனுசு:** இந்த வாரம் உங்களுக்கு அதிர்ஷ்டம் தரும் வாரமாக அமையும். வேலையில் பதவி உயர்வு கிடைக்கும், தொழிலில் லாபம், அரசாங்க உதவி கிடைக்கும், பெரிய மனிதர்கள் ஆதரவு கிடைக்கும் புகழ் அதிகரிக்கும். தொழிலில் லாபம் கொட்டும் பண வரவு அதிகரிக்கும். நண்பர்கள் உதவியுடன் ஆசை நிறைவேறும். பெண்களுக்கு நகை யோகம் வெளிநாட்டு வாய்ப்பு கிடைக்கும். வேலையில் இருப்பவர்களுக்கு பதவி உயர்வு சம்பள உயர்வு கிடைக்கும். மேலதிகாரிகள் பாராட்டுவர் விரும்பிய இடமாற்றம் கிடைக்கும். பணவரவு தாராளமாக இருக்கும் கடன் சுமை தீரும். சேமிப்பு உயரும் வீடு மனை வாங்கும் யோகம் உண்டு சொத்து சேரும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். கணவன் மனைவி ஒற்றுமை பலப்படும். பிள்ளைகளால் பெருமை வரும். சுபச்செலவுகள் ஏற்படும். திருமண பேச்சு கைகூடும் காதல் உறவு இனிக்கும். உடல்நலத்தில் சிறு சோர்வு வரலாம் நீர் அதிகம் பருகவும் ஓய்வு அவசியம் .கார உணவை தவிர்க்கவும். மாணவர்கள் கல்வியில் சிறந்து விளங்குவர் போட்டிகளில் வெற்றி பெறுவர். மேலும் பயணங்கள் லாபம் தரும் அரசு காரியங்கள் வெற்றியடையும். தெய்வ வழிபாடு நன்மை தரும். தட்சிணாமூர்த்தி வழிபாடு மிகவும் சிறந்தது பொறுமை அவசியம் வெற்றி நிச்சயம் புகழ் உயரும் மனநிம்மதி கிடைக்கும்.

*அதிர்ஷ்ட நாள்: வியாழன் வெள்ளி திங்கள். அதிர்ஷ்ட எண்: 3.*

*அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள். இந்த வார மதிப்பெண்: 95%.*




**மகரம்:** இந்த வாரம் உங்களுக்கு உறுதியான வெற்றி வாரமாக அமையும். தொழில் வியாபாரத்தில் புதிய வாய்ப்புகள் கிடைக்கும் லாபம் அதிகரிக்கும். புதிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும் வாடிக்கையாளர்கள் பெருகுவர் வெளிநாட்டு வாய்ப்பு கிடைக்கும். வேலையில் இருப்பவர்களுக்கு பதவி உயர்வு சம்பள உயர்வு கிடைக்கும். மேலதிகாரிகள் பாராட்டுவர் விரும்பிய இடமாற்றம் கிடைக்கும். பணவரவு தாராளமாக இருக்கும் கடன் சுமை தீரும் சேமிப்பு உயரும். வீடு மனை வாங்கும் யோகம் உண்டு. சொத்து சேரும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும் கணவன் மனைவி ஒற்றுமை பலப்படும். அதிர்ஷ்டம் தேடி வரும் தந்தை வழி சொத்து கிடைக்கும் புண்ணிய யாத்திரை செல்வீர்கள் வெளிநாட்டு யோகம் கிடைக்கும். குரு அருள் கிடைக்கும். வேலையில் பதவி உயர்வு தொழிலில் லாபம் அரசாங்க உதவி புகழ் அதிகரிக்கும். தொழிலில் லாபம் கொட்டும் பண வரவு நண்பர்கள் உதவியுடன் ஆசை நிறைவேறும். செலவு தூக்கமின்மை விரயம் கவனம் மொத்தத்தில் இந்த வாரம் முதல் ஆறு நாள் ராஜயோகம் கடைசி நாள் கவனம்.

*அதிர்ஷ்ட நாள்: சனி திங்கள் புதன். அதிர்ஷ்ட எண்: 8.*

*அதிர்ஷ்ட நிறம்: நீலம். இந்த வார மதிப்பெண்: 90%.*




**கும்பம்:** இந்த வாரம் உங்களுக்கு சாதனை வாரமாக அமையும். தொழில் வியாபாரத்தில் புதிய வாய்ப்புகள் கிடைக்கும் லாபம் அதிகரிக்கும். புதிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும். வாடிக்கையாளர்கள் பெருகுவர். உடல் நலனில் கவனம் தேவை திடீர் செலவு வரலாம். வாகனத்தில் கவனம் தேவை யாருக்கும் ஜாமீன் தராதீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். கணவன் மனைவி ஒற்றுமை பலப்படும். குழந்தைகளால் சந்தோஷம் பெருகும். தந்தை வழி சொத்து, புண்ணிய யாத்திரை, வெளிநாட்டு யோகம் கிடைக்க வாய்ப்பு உள்ளது. பதவி உயர்வு தொழிலில் லாபம் கிடைக்கும் அரசாங்க உதவி புகழ் கிடைக்கும். வியபாரத்தில் லாபம் கொட்டும் பண வரவு நண்பர்கள் உதவி மொத்தத்தில் இந்த வாரம் முதல் இரண்டு நாள் கவனம் அடுத்த ஐந்து நாள் ராஜயோகம் மாணவர்கள் கல்வியில் சிறந்து விளங்குவர் போட்டிகளில் வெற்றி பெறுவர். மேலும் பயணங்கள் லாபம் தரும். அரசு காரியங்கள் வெற்றியடையும் தெய்வ வழிபாடு நன்மை தரும். வழிபாடு மிகவும் சிறந்தது பொறுமை அவசியம் வெற்றி நிச்சயம் புகழ் உயரும். மனநிம்மதி கிடைக்கும் சந்தோஷம் பெருகும் வெற்றி கிட்டும்.

*அதிர்ஷ்ட நாள்: சனி திங்கள் புதன். அதிர்ஷ்ட எண்: 8.*

*அதிர்ஷ்ட நிறம்: நீலம் இந்த வார மதிப்பெண்: 91%.*




**மீனம்:** இந்த வாரம் உங்களுக்கு பொற்கால வாரமாக அமையும். தொழில் வியாபாரத்தில் புதிய வாய்ப்புகள் கிடைக்கும். லாபம் அதிகரிக்கும் புதிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும் வாடிக்கையாளர்கள் பெருகுவர். கணவன் மனைவி இடையே சிறு கருத்து வேறுபாடு வரலாம். கூட்டு தொழிலில் கவனம் தேவை. நண்பர்களிடம் கவனம் வழக்கில் கவனம் தேவை திடீர் செலவு உடல் நலனில் கவனம் வாகனத்தில் கவனம் ஜாமீன் தராதீர்கள். அதிர்ஷ்டம் திரும்பும் தந்தை வழி சொத்து புண்ணிய யாத்திரை வெளிநாட்டு யோகம், பதவி உயர்வு தொழிலில் லாபம் அரசாங்க உதவி மொத்தத்தில் இந்த வாரம் முதல் நான்கு நாள் கவனம். கடைசி மூன்று நாள் ராஜயோகம் திருமண பேச்சு கைகூடும். காதல் உறவு இனிக்கும். நண்பர்கள் உதவுவர். உடல்நலத்தில் சிறு சோர்வு தலைவலி வரலாம் நீர் அதிகம் பருகவும் ஓய்வு அவசியம். மாணவர்கள் கல்வியில் சிறந்து விளங்குவர் போட்டிகளில் வெற்றி பெறுவர். மேலும் பயணங்கள் லாபம் தரும் அரசு காரியங்கள் வெற்றியடையும். தெய்வ வழிபாடு நன்மை தரும் வழிபாடு மிகவும் சிறந்தது. பொறுமை அவசியம் வெற்றி நிச்சயம் புகழ் உயரும். மனநிம்மதி கிடைக்கும் சந்தோஷம் பெருகும்.

*அதிர்ஷ்ட நாள்: வியாழன் வெள்ளி திங்கள். அதிர்ஷ்ட எண்: 3.*

*அதிர்ஷ்ட நிறம் மஞ்சள். இந்த வார மதிப்பெண்: 94%.*

இலங்கை செய்திகள்
Sri Lanka News

மன்னார் நிருபர்

# தலைமன்னாரிலிருந்து சென்று ராமர் பாலத்துடன் தொடர்புடைய 8 மணல் திட்டுகளை மக்கள் பார்வையிடுவதற்கான படகு சேவையை ஆரம்பிக்க நடவடிக்கை

## எதிர்வரும் 25ஆம் திகதி காலை வெள்ளோட்டம்-மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன்

**- எஸ்.ஆர்.லெம்பேட்**

உலக சுற்றுலா தின விழாவையொட்டி மன்னார் மாவட்டத்தில் முக்கியமான ராமர் பாலத்துடன் தொடர்புடைய 8 மணல் திட்டுகளையும் பார்ப்பதற்குரிய ஏற்பாடுகளும், அதற்கான வெள்ளோட்ட நடவடிக்கையை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

வடமாகாண சுற்றுலா பணியகத்தின் ஏற்பாட்டில் மன்னாரில் எதிர்வரும் 25ஆம் திகதி முதல் 27ஆம் திகதி வரை இடம் பெற உள்ள உலக சுற்றுலா தின விழா தொடர்பாக ஆராயும் விசேட கலந்துரையாடல் 23ம் திகதி புதன்கிழமை அன்று மாலை மன்னார் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

வடமாகாண சுற்றுலா பணியகத்தின் தலைவர் கலாநிதி ஜெகநாதன் விவேகானந்தன் பங்கேற்புடன் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் தலைமையில் இடம்பெற்றது.குறித்த கலந்துரையாடலில் அழைக்கப்பட்ட திணைக்கள பிரதி நிதிகள் கலந்து கொண்டதோடு,ஏற்பாடுகள் தொடர்பாகவும் விரிவாக ஆராயப்பட்டது.

குறித்த கலந்துரையாடலை தொடர்ந்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கை வரலாற்றில் மிகவும் வரலாற்று ரீதியாக ஒரு முதன்மையான வரலாற்றைக் கொண்ட மன்னார் தீவின் உல்லாசப் பயணத்துறை யை வளர்க்கும் நோக்கத்தோடு, வடமாகாண சுற்றுலா பணியகமும், மாவட்ட செயலகம், நகர சபை போன்ற திணைக்களங்கள் இணைந்து, மன்னார் மாவட்டத்தில் செப்டம்பர் 27ஆம் திகதி கொண்டாடப்படவுள்ள உலக உல்லாசப் பயண தினத்தை இம்முறை மன்னார் மாவட்டத்தில் கொண்டாடுவதற்கு தீர் மானித்திருக்கின்றோம்.

உண்மையில் மன்னார் மாவட்டத்தில் 80க்கும் மேற்பட்ட சுற்றுலா இடங்கள் அடையாளம் காண பட்டிருக்கிறது. அந்த அடையாளங்களில் ஒன்றான கீரி பீச்சை மையமாகக் கொண்டு, இந்த வருடத்துக்குரிய உல்லாசப் பயண தினங்கள் மூன்று நாட்கள் 25ஆம், 26ஆம், 27ஆம் திகதிகளில் மன்னார் மாவட்டத்தில் கொண்டாடப்பட இருக்கிறது.

உண்மையில் இந்த சுற்றுலா தின நிகழ்விலே, மன்னார் மாவட்டத்தின் கலாச்சார பாரம்பரிய மரபுரிமை அம்சங்களைப் பேணும் வகையில், மன்னார் மாவட்டத்திற்கே சிறப்பான பாரம்பரிய உணவு முறைகளை மக்களுக்கு காட்சிப்படுத்தி, அதை மக்களுக்கு பரிமாறி, மற்றும் வெளி மாவட்டங்கள், சர்வதேச ரீதியில் இருந்து வருகின்ற உல்லாசப் பயணிகளுக்கும் அதை அறிமுகப்படுத்தும் வகையில் ஒரு பாரம்பரிய உணவுத் திருவிழா அமைப்பும் இந்த நிகழ்வில் ஒரு முக்கியமான இடமாக காணப்படுகிறது.

அதனை விட மன்னார் மாவட்டத்திற்கே முதன்மையான பல கலாச்சார அம்சங்கள் காணப்படுகிறது. எனவே அந்த மன்னார் மாவட்டத்திற்கு உரித்தான பண்பாட்டு அம்சங்களை வெளிக்கொணரும் முகமாக நாட்டியங்கள், வில்லுப்பாட்டு, அதேபோன்று மன்னார் மாவட்டத்தில் நான்கு மதத்தவர்கள் மிகவும் சமாதானமான முறையில் வாழ்கின்றார்கள்.

எனவே அந்த மதத்தினரின் அடையாளங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையிலான கலை அம்சங்களின் வகையிலே பல்வேறுபட்ட கலாச்சார பண்பாட்டு விழாக்களும் அன்றைய தினத்தில் மன்னார் மாவட்டத்தில் அலங்கரிக்கப்பட இருக்கிறது.



இதை விட மன்னார் மாவட்டத்திற்கு உரித்தான பல சிறப்பான விளையாட்டு விழாக்களும் இங்கே இந்த உல்லாசப் பயணத்துறை யை வளர்க்கும் நோக்கில் மக்கள் பார்வைக்காக கொண்டாடப்பட இருக்கிறது.

25ஆம் திகதி பட்டப் போட்டிகளும், 26ஆம் திகதி கடற்கரைப் பந்தாட்டம், கயிறு இழுத்தல் போட்டி நிகழ்வுகளும், அதேபோன்று 27ஆம் திகதி மாலை 4 மணிக்கு கபடிப் போட்டிகளும் என்ற வகையிலே பல்வேறுபட்ட அம்சங்கள் இடம்பெற இருக்கின்றது.

உண்மையில் மன்னார் மாவட்டத்தைப் பொறுத்தவரை, இம்முறை கொண்டாடப்படுகின்ற இந்த உல்லாசத் தின நிகழ்வு ஒரு மிகவும் மன்னார் மாவட்டத்தில் ஒரு அபிவிருத்திப் பாதையிலே முன்னோக்கி ஒரு உச்ச நிலைக்கு எடுத்துக்கொண்டு செல்லும் நிகழ்வாக நாங்கள் இதை பயன்படுத்த வேண்டும்.

எனவே மன்னார் மாவட்டத்தை அபிவிருத்தி செய்வதில் ஆர்வம் உள்ள அனைத்து மக்களும், நலன் விரும்பிகளும் இந்த நிகழ்வில் ஆர்வத்துடன் பங்கெடுத்து, மன்னார் மாவட்டத்தில் சுற்றுலாத்துறை வளர்ச்சிக்கு தங்களாலான ஒத்துழைப்பு களையும் இந்த சமயத்திலே நாங்கள் வரவேற்கின்றோம்.

மன்னார் மாவட்டத்தில் உள்ள அனைத்து திணைக்களங்களின் பங்குபற்றுதலுடன், குறிப்பாக முப்படையினர், பொலிஸார் மற்றும் சுகாதாரத் துறையினர், அதேபோன்று அனைத்து திணைக்களங்களின் பங்குபற்றுதலோடு - இந்த நிகழ்வு, மூன்று நாள் நிகழ்வு நடைபெற இருப்பது ஒரு முக்கியமான அம்சமாக காணப்படுகிறது.

எனவே இந்நிகழ்வில் வடமாகாண ஆளுநர் அவர்களும், அதேபோன்று இரண்டாம் நாள் வடமாகாண செயலாளர் அவர்களும், மூன்றாம் நாள் மன்னார் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரின் பங்குபற்றுதலுடன் இந்த நிகழ்வுகள் சிறப்பான முறையில் இடம் பெற இருப்பதால், அனைத்து பொது மக்களையும், அதேபோன்று சுற்றுலா பயணிகளையும் இந்த நிகழ்வுக்காக வரவேற்கின்றோம்.

மன்னார் மாவட்டத்தின் சுற்றுலாத்துறையை ஒரு பெரிய ஒரு முன்னேற்றகரமான நிலைக்கு கொண்டு செல்லும் வகையில், மன்னார் மாவட்டத்தின் ஒரு முக்கியமான ராமர் பாலத்துடன் தொடர்புடைய 8 மணல் திட்டு களையும் பார்ப்பதற்குரிய ஏற்பாடுகளும், அந்த வெள்ளோட்ட மாக அந்த நடவடிக்கையை ஆரம்பிப்பதற்கான நிகழ்வுகளும் அன்றைய தினம் இடம்பெற இருக்கின்றது.

அதனுடன் இணைந்த வகையில் வெகுவிரைவில் பயணிகளும் உல்லாசப் பயணிகளும் அந்த இடத்தைத் தேடி பார்ப்பதற்குரிய ஏற்பாடுகளும் செய்யப்பட இருக்கிறது.

எனவே அது ஒரு நல்லதொரு அடையாளமாக பார்க்கப்படுகிறது.எனவே இப்படிப்பட்ட ஒரு முன்னேற்றகரமான செயல்பாடுகளில் அனைவரையும் பங்குபற்றுமாறு அன்பாக வரவேற்று நிற்கின்றோம்.என அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் மேலும் தெரிவித்தார்.

# MORTGAGE

## FINANCIAL SOLUTIONS

COMMERCIAL RESIDENTIAL VACANT LAND

INDUSTRIAL CONSTRUCTION



## OUR SERVICE

- Purchase
  - Builder Purchase
  - MLS Purchase
  - Private Purchase
- Equity line of Credit
- Refinance
- Renewal

CALL US

**NESAN**

**416-908-5656**



Office: 416-660-5656
Fax: 647-351-3099
Toll: 1-844-878-2721

www.nesan.ca

**WE DEAL WITH ALL BANKS**

CityCan Financial Corporation
NESAN SUBRAMANIAM
Mortgage Agent level 1 Licence # M15001465
CityCan Financial Corporation, Brokerage #10332

Scotiabank | First National Financial LP | TD Canada Trust | Manulife | National Bank | Desjardins | RFA | MCAP | Home Trust | Equitable Bank | radius financial | RMG mortgages

55 EGLINTON AVE E SUITE 604, TORONTO, ON M4P 1G8




இவ்விடத்தில்

விளம்பரம் செய்ய $30.00 மட்டுமே!

416-752-1524




29ம் ஆண்டில்...
29 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்




உதயம் 1590 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday September 25, 2026

# வரலாற்றுப் பதிவின் தடம் — கனடாவில் இடம்பெற்ற 2வது உலகத் தொல்காப்பிய ஆராய்ச்சி மாநாடு!



**தொல்காப்பியத்தின் பெருமையையும் தமிழின் தொன்மையையும் உலக அரங்கில் எடுத்துச் செல்வோம் என்ற இலக்கை உள்ளத்தில் விதைத்து, பெரும் விருட்சமாக வளர்த்து, அதன் கனிகளை உலகத் தமிழர்களுக்குக் கொடையாக்கிய அற்புதத்தை அரங்கேற்றிய கனடா தொல்காப்பிய மன்றத்தின் தலைவியும். ஏனைய உறுப்பினர்களும்"!**

பல குரல்கள் ஓங்கி ஒலித்த அந்த அரங்கில், பல இதயங்கள் ஒன்றாகத் துடித்த அந்த உன்னதமான தருணத்தில், "அம்மா" என்ற ஒரு சொல் எங்கள் செவிகளில் அசரீரியாகவே ஒலித்தது. பெருமிதமும் உவகையும் நன்றியும் ஒன்றுசேர எங்கள் மனங்களை நிறைத்த அந்த மகத்தான பொழுதுகள் நிச்சயமாக ஒரு வரலாற்றுப் பதிவே!

இரண்டாவது உலகத் தொல்காப்பிய ஆராய்ச்சி மாநாடு புரட்டாதி மாதம் 19, 20 ஆகிய திகதிகளில் கனடா- மார்க்கம் நகரில் **Bill Hogarth** உயர்தரப் பாடசாலையில் நிறைவு கண்டிருக்கிறது.

(தொடர்ச்சி 2ம் பக்கம்)

# மனநல தாக்கத்திற்கான சிகிச்சையை வலுப்படுத்த, Lakeridge Health மற்றும் DRPS, OPP ஆகிய காவல் துறையினர் டர்ஹாம் பிரதேசத்திற்காக ஒரு குழுவை நிறுவினர்.

## Lakeridge Health and Durham Region Partners Establish Committee to Strengthen Mental Health Crisis Care!

Lakeridge Health, Durham Regional Police Service (DRPS), Ontario Provincial Police (OPP), and Region of Durham Paramedic Services (RDPS) have established the Durham Region Police-Hospital Committee, bringing local health-care and first responder partners together to strengthen how people experiencing mental health and addictions-related crises are supported when accessing emergency care.

(Continued to page 6)

Lakeridge Health

# "டோரதி" உலகளவில் பேசப்படும் ஒரு படமாக இருக்குமென நடிகை கீர்த்தி சுரேஷ் புகழாரம் .இளையராஜா ஐயாவின் இசையில் நடிப்பேன் என்று கனவில் கூட நினைக்கவில்லை எனவும் தெரிவிப்பு





"டோரதி" திரைப்படம் உலகளவில் பேசப்படும் ஒரு படமாக இருக்குமென நம்புவதாக நடிகை கீர்த்தி சுரேஸ் கூறினார். கார்த்திக் சுப்புராஜ் இயக்கிய "டோரதி" திரைப்படம் மதுரையைப் பின்னணியாகக் கொண்டு உருவாகியுள்ளது. 1990-களில் நடக்கும் கதையாக உருவான இதில் நட்பு, காதலுடன் அழுத்தமான படமாக உருவாகியுள்ளதாகக் கூறப்படுகிறது. இந்தப் படத்தில் நடிகர்கள் ரிசிஸ்காந்த், சனந்த், கீர்த்தி சுரேஸ்' ஆகியோர் முன்னணி கதாபாத்திரத்தில் நடித்துள்ளனர். படத்திற்கு இளையராஜா இசையமைத்துள்ளார்.

(தொடர்ச்சி 11ம் பக்கம்)

# "கண்கெட்ட பின்னர் சூரிய நமஸ்காரம்" செய்யும் மகிந்த — ரணில் அரசுகளில் அமைச்சராக இருந்த டக்ளஸ் தேவானந்தா!

## அறுதிப் பெரும்பான்மையை பயன்படுத்தி மாகாண சபைகளுக்கு பொலிஸ், காணி அதிகாரங்களை வழங்க அரசு நடவடிக்கை எடுக்க அநுர அரசிடம் கோருகிறார்?

நாடாளுமன்றத்தில் தற்போதைய அரசாங்கம் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை கொண்டுள்ள நிலையில், அதனை பயன்படுத்தி மாகாண சபைகளை வலுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

இவ்விடையம் குறித்து அவர் கூறுகையில்:

இலங்கையில் உள்ள அனைத்து பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சிகளிடமிருந்தும், மாகாண சபைத் தேர்தல் தொடர்பான சட்டங்களைத் தவிர்த்து, ஏனைய தேர்தல்கள் தொடர்பான சட்டங்களை மீளாய்வு செய்வது குறித்த கருத்துக்களையும் யோசனைகளையும் பெற்றுக்கொள்வதற்கு நாடாளுமன்ற தெரிவுக்குழு தீர்மானித்துள்ளது என்ற விடயத்துடன் கடிதமொன்று எமக்கு அண்மையில் கிடைத்திருந்தது.

(தொடர்டச்சி 10ம் பக்கம்)

